Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

வாரவெளியீடு

THINAKKATHIR WEEKLY

ஒளி - 01 - கதிர் - 319 11-03-2001 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள் - 16 விலை - ரூபா 10/=

நகையா!
22 கரட்டில் தெரிவு செய்ய
இன்றே நாடுங்கள்
சரண்யா ஜுவலர்ஸ்





பிரதான வீதி
கலுவாஞ்சிகுடி
தொ. பேசி 065 . 50071



அரசு போருக்குத் தயாராகிறது?



போர் வரவு செலவுத் திட்டம்

தலிபான் புனிதப் போர்





டைட்டானிக்



தினக்கதிர் சினிமா

'முது'சங்கள்



சிறுவர்



மலர்

## வடக்கு கிழக்கு வைத்தியர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்

(நமது நிருபர்)

**வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க வைத்தியர்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.**

வடக்கு கிழக்குக்கு வெளியேயுள்ள வைத்தியர்களுக்கு வழங்கப்படுகின்ற விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு வடக்கு கிழக்கில் நிரந்தரமாக வசிக்கும் அரசாங்க வைத்தியர் களுக்கும் வழங்கப்பட வேண்டுமெனக் கோரியே மேற்படி அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக மட்டக்களப்பு மாவட்ட வைத்தியர் சங்க செயலாளர் டாக்டர் பிலிப்

(16ம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு புனர்வாழ்வுக்கு 1800 மில்லியன் ரூபா தேவை!

## எதிர்பார்த்த நிதி கிடைக்கவில்லை! - அமைச்சர் பேரியல் அஷ்ரப்

**மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு கொடுப்பனவு மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்பு செய்ய 1800 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு திட்டப்பணிப்பாளர் கே.நவரெத்தினம் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு அரச செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு .தெரிவித்தார்.

இதற்கு தலைமை வகித்த கிழக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு கிராமிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பேரியல் அஷ்ரப் கருத்து தெரிவிக்கையில் நாடு தற்போது உள்ள நிலையில் எதிர்பார்க் கப்பட்ட நிதி அமைச்சுக்கு கிடைக்க வில்லை. கிடைத்த நிதியை முன்னுரிமை அடிப்படையிலேயே பகிரத் தீர்மானித் துள்ளதாக தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் போர்ச்சூழல் காரணமாக அதிகம் பாதிக் கப்பட்டுள்ளனர் எனினும் கடமைகளை மேற்கொள்வதற்கு பிரச்சினையை சாட்டாக தெரிவிப்பது மன்னிப்புக்கு உகந்த காரணமல்ல.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாடு இன்று எதிர்நோக்குகின்ற பிரச்சினை காரணமாக சகல மக்களையும் திருப்திப் படுத்தக் கூடிய சகல தேவைகளையும் நிறைவேற்றக் கூடிய நிலமையில்லை இதனால்சமாதானத்திற்காக அனைவரும்" பிரார்த்திப்பதுடன் முன்னுரிமை அடிப் படையில் திட்டங்களை மேற்கொள்வோம்.

தனிப்பட்ட பிரச்சினைக்காக என்னை நாடி ஏவரும் தொந்தரவு செய்யக் கூடாது. மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கக்

(16ம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு வேலை வாய்ப்பு

ஆண் களுக்கு:-

- ஓட்டோ மெக்கானிக்
- ஓட்டோ எலக்ரீஷியன்
- ஓட்டோ பெயின்ரர்
- ஓட்டோ ரிங்கர்
- பாமர்
- பிளம்பர்

வேலைவாய்ப்புக்கள் உண்டுதங்குமிடம், மருத்துவம் இலவசம்

நியூ பாஹிம் என்டர் பிரைஸஸ்

LL No 736

மிக விரைவான பயணங்களுக்கு நாடுங்கள்
283/1, மெயின் வீதி, புறக்கோட்டை
காத்தான்குடியில் டிக்கட்டுகளுக்கு
151/1, 151/2 பிரதானவீதி காத்தான்குடி-02
தொ.பே:065-47090, ADVT.

## தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் சத்தியாக் கிரகத்துக்கு ஆதரவு!

(ஹற்றன்)

மலையகத்தில் நடைபெறும் சத்தி யாக்கிரகப் போராட்டத்திற்கு ஆதரவு வழங் கும் முகமாக நேற்று தமிழ் கட்சிகளும் கலந்து கொண்டனர்.

ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் (சுரேஸ் அணி) தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

உங்களுக்குத் தேவையான லஷ்றி, போர் மோக்ளேஸ், டெக்கோலைற் பெயின்ற் வகைகளை விஷேட கழிவு விலையில் பெற்றுக் கொள்ளவும்.

இன்றும்.......
பி.வி.சி.பைப் & பிற்றிங்
அலுமினியம் பிற்றிங்
டைல்ஸ்& கிச்சின் பான்ட்ரி
கபெட் பிற்றிங்ஸ்
மற்றும்
சொலக்ஸ் & சென்ட்ரிக்
தண்ணீர்ப் பம்புகள்
அனைத்தையும் ஒரே
இடத்தில் பெற

நசீகா ஹார்ட்வெயர்ஸ் & எலக்ட்ரீகல்ஸ்

இல. 79, பிரதான வீதி,
ஏறாவூர்
தொ.பே : 065 – 40633 Advt.

சகானா கலர் லேவ்விற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை

மட்டக்களப்பு திருமலை வீதி இலக்கம் 287இல் அமைந்துள்ள சகானா கலர் லேவ் நிறுவனத்திற்கு மட்டுநகரில் புதிதாக இலக்கம் 39, திருமலை வீதி (பழைய பொலிஸ் நிலையம் முன்பாக) திறப்பு விழா செய்யப்படவிருக்கின்ற சகானா கலர் லேவ்வின் கிளை நிறுவனத்திற்கும் பெண்களை நியமிப்பதற்கான நேர்முக பரீட்சை எதிர்வரும் 2001-03-14 ம் திகதி இலக்கம் 287ல் அமைந்துள்ள சகானா கலர் லேவ்வில் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

*எதிர்பார்க்கும் தகைமைகள்*

- உயர்தரம் படித்த 20-30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- முழுமையாக சிங்கள மொழி பேசுபவராகவும் ஓரளவு ஆங்கில மொழி பேசக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- மட்டக்களப்பு நகரை அண்மித்து வசிப்பவராக இருத்தல் வேண்டும்
- மேலதிக விபரங்கள் நேர்முக பரீட்சையில் (சம்பளம், வேலை நேரம்) தெரிவிக்கப்படும்.
- தகுதி உடைய அனைவரையும் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உரிமையாளர்
சகானா கலர் லேவ், மட்டக்களப்பு.

Advt.

### எழுத்தாணி அம்பலம்

**இந்தியாவிடம் இராணுவ உதவியை மீண்டும் நாங்கள் கேட்க மாட்டோம். - கதிர்காமர்.**



பீரங்கிபூட்டிய கெலிக்கப்பல், குண்டு துளைக்காத கடல் கப்பல் எல்லாம் கேட்காம கொடுத்தவங்கதானே அதுதந்தால் போதும் மிச்சத்த நாங்க பாப்பம் எண்ட செருக்குப்போல.....

**தினக்கதிர்**

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk

## அவர்தான் நீதியரசர்!

''தமிழ் மக்களின் உரிமை பேணப்படவேண்டும் என்பதில் நாமும் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறோரம். தமிழ் மக்கள் இந்நாட்டில் சமத்துவமான உரிமைக ளுடன் வாழ வேண்டும். அவர்களின் சுயகௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும். எனினும் இந்நாட்டில் எந்த வொரு இனத்துக்கும் தனியான பகுதி வழங்கப்பட வேண்டும் என்பதை நிராகரிக்கிறோம். பல்லின, பல சமய பல் வேறு கலாசாரங்களைக் கொண்ட இந்நாட்டில் எல்லோருக்கும் சம வாய்ப்பு வழங் கப்பட வேண்டும்''

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸ் கடந்த வாரம் இரண்டு நாள் குறுகிய விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்த போது அங்கு நிகழ்த்திய சிறு சொற்பொழிவின் போது உதிர்த்த முத்துக்கள் தான் மேலே குறிப்பிடப்பட்டவை

தூதுவர் சொன்ன அத்தனை விஷயங்களும் இலங்கை சுதந்திரமடைந்து அரை நூற்றாண்டுக்கு மேலாக மறுக்கப்பட்டிருக்கிற தென்பதை தூதுவர் ஆஸ்லி வில்சே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அதனால் அவை பற்றி நாமும் விவாதித்து மேலும் காலத் தையும் நேரத் தையும் விரயம் செய்ய வேண்டியதில்லை.

ஆனால் ''எந்தவொரு இனத்துக்கும் தனியான ஒரு பகுதி வழங்கப்பட வேண்டும்'' என்பதை நிராகரிக்கிறோம் என்று சொல்லியிருப்பது பற்றி மட்டும் சுருக்கமாக ஒரு விஷயத்தை நினைவூட்டு வது நமது கடமை.

1958 ஆம் ஆண்டு முதல் 1977, 1983 வரை ஆட்சி பீடத்திலிருந்தவர்களின் தூண்டுதலுடனும் துணையு டனும் தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலகங்களைத் தொடங்கி தமிழ ரின் உயிர் உடைமைகளை அழித்து தமிழ் இன அழிப்பில் ஈடுபட்ட போது எஞ்சியவர்கள் தம்மைக் காத்துக் கொள்வதற்கு தமது தாயக பூமியான வடக்கு கிழக்குக்குத்தான் கப்பல்களில் அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்பதை தூதுவர் அறிந்திருக்கவில்லை; கொழும்பில் யாரும் இதைச் சொல்லிக் கொடுத்திருக்கவும் மாட்டார்கள்

இனி, அமெரிக்கத் தூதுவருக்கு யாரும் பதில் சொல்லி விளங்க வைக்க வேண்டிய அவசியமில்லாமலே இலங்கையின் உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்றிருக்கும் நீதியரசர், சி.வி. விக்கினேஸ்வரன் தங்களுக்கு அறிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்தில் மூன்று மொழிகளிலும் பேசிய போது ''வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்கள் அதிகாரப் பரவலையோ அதிகாரத் தில் பங்கு பிரிப்பதையோ கேட்க வில்லை. தங்களிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட உரிமைகளைத் தான் அவர்கள் மீளக் கேட்கிறார்கள்'' என்று எடுத்துக் கூறியிருக்கிறார்.

இது அமெரிக்கத் தூதுவருக்கு மட்டுமல்ல. ஆட்சியிலுள்ளவர்களுக்கும் அரசியல் மற்றும் ஆன்மீகத் தலைவர்களுக்கு மட்டுமல்ல அகில உலகுக்குமே உணர்த்திய வார்த்தைகள் .

அவர்தான் நீதியரசர். விக்கினேஸ்வரன் நீதியரசரல்லவா?

# போர் செலவின அதிகரிப்பு
# அரசு போருக்குத் தயாராகிறது

**தேனில் நஞ்சைக் கலந்து பருகக் கொடுப்பது போன்று அமைந்துள்ள ஜனாதிபதியின் பேச்சு**

**பா. வேணுகோபால்**

இலங்கை அரசின் புதிய வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவீனம் 7500 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி திட்டங்கள்



தொழில் முதலீடுகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தி போருக்கான நிதியை அரசு அதிகரித்துள்ளது. இந்த நாட்டில் சமாதான வழிவகைகளைக் கைக்கொள்வதாக கூறிய கருத்துக்கு முரணானதொரு வழிறையையே அரசு



கையாண்டு வருவதுடன் போர் மூலமே தீர்வு காண துடிக்கிறது என்பது தற்போது உறுதியாகி விட்டது.

விடுதலைப்புலிகள் கடந்த வருடம் டிசம்பர் 24ம் திகதி தொடக்கம் பிரகடனப்படுத்திய ஒருமாத கால போர் நிறுத்தம் இம் மாதம் 24ம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது. இதேசமயம் அரசையும் புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வரும் முன் முயற்சியாக நோர்வே ஈடுபட்டு வருகிறது.

இவ்வாறான ஒரு நல் லெண்ண சமிக்ஞ்சையான கால கட்டத்தில் சமாதானத்திற்கான வழி முறைகளைப் பின்பற்றாது பாதுகாப்பு செலவீனம் அதிகரிப்பு போரை முன்னெடுத்துச் செல்வதற்கான அறி குறியாகவே எண்ணத் தோன்றுகிறது.

இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவீனமாக 7500 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. அது மொத்த தேசிய வருமானத்தில் 4.4 சதவீதமாகும். சமூக நல மேம்பாட்டு செலவீனம் 2111 கோடியே 80 லட்சம் ரூபா மொத்த செலவீனம் 41.716 கோடி 40 லட்சம் ரூபா, மொத்த வருமானம் 25.297 கோடி 90 லட்சம் ரூபா, ஆகவே துண்டு விழும் தொகை 16,418 கோடி 50 லட்சம் ரூபா வாகும். இவற்றை வரிவிதிப்பு உள்நாட்டு, வெளிநாட்டு கடன்கள் மூலம் நிரப்ப அரசு தீர்மானித் துள்ளது.கடந்த வருடம் 6.5 வீதமாக இருந்த பாதுகாப்பு வரி இவ்வருடம் 7.5 வீதமாக அதிகரிக் கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 6100 மில்லியன் ரூபாவை அரசு வருமானமாக பெற முடியும் என அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

கடந்த பதினெட்டு வருட காலமாக இலங்கையில் போர் தொடர்கிறது. , மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் போரை கொண்டு நடத்துவதற்காக அபிவிருத்தி திட்டங்களைக் குறைத்து மக்களின் வருமானத்தில் சுரண்டி பொருள்கள் சேவைகள் மீதான வரியைக் கூட்டி போரை நடாத்தி வருகின்றமை நாம் அறிந்த விடயம்.

அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணமே போரினால் அபிவிருத்தி இன்றி காட்சி தருகிறது. பசுமை பொங்கு வயற்பிரதேசத் தையும் தென்னஞ் சோலைகளும் பனைவளமும் கடல்வளமும் கொண்ட வடக்கு கிழக்கு மாகாணம் இன்று போர் அவலங்களினால் அழிவுண்ட தேசமாகக் காட்சி தருகிறது.

மருந்துத் தடை, பொருளாதாரத் தடை என வடக்கு மக்களிற்கு தடை போசாக்கின்மை, சுகாதார வசதியின்மை போன்ற வசதியின்மைகளாலும் தமிழ் மக்கள் திண்டாடும் நிலையில் போர் செலவீனம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சமாதான வழிமுறை மூலம் அரசு தீர்வு காணுவதாக இருந்திருந்தால் போர் செலவை அதிகரிக்கத்தேவையில்லை. இதனை உறுதிப்படுத்தும் வகையில் பயங்கரவாதத்துக்கு யுத்தம் மூலமே தீர்வு காண முடியும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளீர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற வீரமாதா நேத்திரர் பூசையில் கலந்து கொண்டு பேசிய ஜனாதிபதி பயங்கரவாதத்துக்கு போர் மூலமும் இன நெருக்கடிக்கு சமாதான வழிமுறை மூலம் தீர்வு காணப்படும் எனத் தெரிவித்துள்ளார். இது தேனில் நஞ்சினை கலந்து பருகக் கொடுப்பது போன்ற அர்த்தத்தை பொதித்திருக்கிறது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அதே சமயம் மகளீர் பக்கமும் ஜனாதிபதியின் கண் பதித்து விட்டது. படைதரப்பு ஆண் அணியில் பற்றாக்குறையாக உள்ள நிலையில் மகளீர் அணிகள் ஆர்வம் காட்டினால் போரை விரிவுபடுத்துவதற்கு வசதியாக இருக்கும் என கருதி விட்டார் போல் இருக்கிறது. அதுதான் போரை முடிவுக்கு கொண்டு வர மகளீர் பங்களிப்பு தேவை என தெரிவித்துள்ளார்.

இதேசமயம் படைதரப்புக்கு மேலும் 7500 பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் போர் விரிவுபடுத்தலை அரசு விரும்புகிறது என்பது உறுதியாகி விட்டது.

பாதுகாப்பு நிதி எனக் கூறிக்கொண்டு சகல நிதிவளங்கலும் போருக்கு செலவிடுவதால்



பொருளாதாரம் வீழ்ச்சியடைவதுடன் பொதுமக்களும் பொருட்கள் சேவைகள் விலை ஏற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதிய மூலதனங்கள், முதலீடுகள் என்பன நிறுத்தப் படவுள்ளன. நட்டத்தில் இயங்கும் தொழில் முயற்சிகள் மூடு விழாப்போடவுள்ளது. இவ்வாறான நிலையில் நாட்டில் போருளாதாரச் சீரழிவு ஏற்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சமாதானத்துக்கான ஆலாப்பறப்புக்களும் யுத்தத்தற்கான ஆலாவர்ணங்களும்!

**“நீண்டு செல்லும் இந்த யுத்தம் நிறுத்தப்பட்டு, யுத்த செலவினங்கள் குறைக்கப்படுவதன் மூலமே நாடு அபிவிருத்தி காண முடியும”**. இக்கூற்று எதிர்கட்சியினரது அல்ல; ஆளும் பொதுஜன முன்னணியின் பிரதிநிதியமைச்சரான காமினி லக்ஸ்மன் பீரிஸினுடையது ஆகும். “பட்டறிவு”டன் கூடியதொரு கருத்து வெளிப்பாடாக அது தென்பட்டாலும், அது எப்பவோ பொதுமக்களுக்குத் தெரிந்த ஒரு வெளிப்படை உண்மையாகும்.

மேற்படிக் கூற்று கடந்த வியாழன் பி.ப.2.50 மணியளவில் ஸ்ரீலங்கா பாராளுமன்றில் பொது ஜன முன்னணியின் ஏழாவது வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்பித்து உரையாற்றுகையிலே தெரிவிக்கப்பட்டிருந்தமை அதிக பொருத்தப்பாடாக அமைந்திருந்தது.

மொத்த அரசாங்க வருமானம் 264.5 பில்லியன் ரூபாவாகவும் மொத்த செலவீனம் 387.5 பில்லியன் ரூபாவாகவும் அறிவிக்கப்பட்ட நிலையிலே துண்டு விழும் தொகையாக (வரவு - வெலவுத் திட்டப் பற்றாக்குறை) 123.1 பில்லியன் ரூபாவாகவும் வரவு செலவுத் திட்டத்திலே விபிரிக்கப்பட்டுள்ளது.

இம்முறை செலவின ஒதுக்கீட்டில் தேசிய(?) பாதுகாப்புக்கே “தேசிய பாதுகாப்பு வரி” 6.5 விழுக்காட்டிலிருந்து 7.5 விழுக்காடாக உயர்த்தப்பட்டிருப்பதுடன் அதன் மூலம் 6.1 பில்லியன் ரூபா வருமானமாகக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. முன்னர் தேசிய பாதுகாப்பு வரி 4.5 விழுக்காடாக இருந்ததாக நினைவுப்பதிவு கூறுகிறது. **இவ்வரி அதிகரிப்பு முழுமையாக சாதாரண மக்கள் மீதே சுமத்தப்படும்.**


2000 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச்



செலவீனத்திற்கு 52.43 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. சென்ற மாதம் 08ம் திகதி வியாழக்கிழமை பிரதியமைச்சரான ஜீ.எல்.பீரிஸ் வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னோட்டமாக சமர்பித்த “சமப்படுத்தல் சட்டமூலத்தில்” (ஒதுக்கீட்டுச் சட்டமூலம்) 63.39 பில்லியன் ரூபாவாக அறிவிக்கப்பட்டிருக்க தற்போது 75 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதை நோக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். “**கடன்பட்ட இலங்கை ” என்ற இலக்கியச் சொற்றொடரை மெய்பித்து விடுவதாகவும் கூறியுள்ளனர்.**

கடந்த வருட வரவு -செலவு திட்டத்தில் 52.43 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 85 பில்லியன் ரூபா வரை பாதுகாப்பு செலவீனம் செய்யப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தமை இவ்விடத்தில் நினைவுபடுத்தத்தக்கது.

ஐ. தே.க.ஆட்சியில் பதினொரு



வரவு செலவத் திட்டங்களைச் சமர்பித்தவரான தற்போதைய துறைமுக மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சருமான ரொனி டி மெல் “**நாம் மோசமான நிதிநெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம். அத்துடன் பாரதூரமான வகையில் அந்நியச செலாவணி நெருக்கடியையும் எதிர்கொண்டுள்ளோம்**” என்று தெரிவித்துள்ள கருத்து “ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் உண்மை நிலையைப் படம் பிடித்துக் காட்டி விடுகிறது.

“யுத்த பட்ஜெட்” ஆகவே இம்முறை வரவு செலவுத் திட்டம் வெளியாகியுள்ளதாக விசனம் தெரிவத்துள்ள தமிழர் ஐக்கிய விடுதலைக்கூட்டணி (**TULF**), தமிழீழ விடுதலை இயக்கம் (**TELO**) மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (**ACTC**) முதலான தமிழ்க்கட்சிகள் இவ்வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க உள்ளதாக நேற்று முன்தினம் தகவல் வெளியிட்டிருந்தன. கடந்த வியாழன் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டத்திலும் எதிர்த்து வாக்களிக்க உள்ள்தாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாதுகாப்பு செலவீனத்தை முதன்மைப்படுத்தியதாக இவ்வரவு செலவுத் திட்டம் வெளியாகியுள்ள வேளையிலே, முன்பொருதடவை இப்பத்தியில் எடுத்தாளப்பட்ட “மார்டின் லூதர் கிங்” இன் “**சமூக முன்னேற்றத் திட்டங்களைவிட இராணுவப் பாதுகாப்பிற்கென்று ஒவ்வொரு ஆண்டும் பணம் ஒதுக்கும் நாடானது அதனுடைய தார்மீக மரணத்தை நெருங்கிக் கொண்டு இருக்கின்றது**” என்ற கருத்தே மீள நினைவுக்கு வருகிறது.

(ஸ்ரீலங்காவில் “நல்லாட்சி” **(good governance)** என்பது நலிவடைந்துள்ள நிலையிலே வெளியாகியுள்ள பொதுஜன முன்னணியின் ஏழாவது வரவு செலவுத் திட்டமானது ஏழு வருடகால ஆட்சியின் நிதி, நிர்வாக முறைமையின் வினைத்திறன் இன்மையின் வெளிப்பாடாகவே நடுநிலை ஆய்வாளர்களால் கருதப்படுகிறது.

“பெண்கள்; சமாதானம்; பாதுகாப்பு” என்ற தொனிப்பொருளில் “சர்வதேச மகளிர் தினம்” அனுட்டிக்கப்பட்ட நாளில் வெளியான ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மகளிர் தின தொனிப் பொருளான “பெண்களும் வறுமையும்” என்பதற்குப் பொருத்தப்பாடானதாக உள்ளதாக பெண்களமைப்புக்கள் பரிகசித்துள்ளன.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் யுத்தத்திற்கான “பட்ஜெட்” ஒருபுறமிருக்க, கடந்த வியாழன் சர்வதேச மகளிர் தின வைபவத்தில் ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி “கண்தான இயக்கம்” ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலே, “**யுத்தம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிற வேளையிலே சமாதானத்திற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும**” என்றுஅளப்பரிய “தத்துவம்” உரைத்துள்ளார். “பெண்கள் நாட்டின் கண்கள்” என்பதை விளங்கிக் கொண்டதாலோ என்னவோ கிராமந்தோறும் கூட பெண்களைக் “கண்தானம்” செய்யும்படி கோரியுள்ளார்.

கடந்த புதன் அவசரகலச்சட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் பிரசார செயலாளருமான விமல் வீரவன்ச, “இலங்கை அரசாங்கம் சமஷ்டி ஆட்சியை தமிழ் மக்களுக்கு வழங்கும் ஆபத்துள்ளது; பிரிட்டன் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே புலிகளைத் தடை செய்திருக்க வேண்டும்; நோர்வேயும் புலிகளைத் தடை செய்ய வேண்டும்” என்று மலினப்படுத்தப்பட்ட இனவாத அரசியல் பேசியுள்ளமை -“சிவப்பு சட்டை”க்காரரின் பச்சை இனவாதத்தையே காட்டியுள்ளது.

கடந்த சில மாதங்களாக வடக்கு -கிழக்கு மாகாணத்துக்கு வெளிநாட்டு தூதுவர்களின் விஜயங்கள் “பாஷன்” ஆகி வருகிறது. அப்படி வருபவர்களும் உண்மைநிலை கண்டறியும் பயணம் **(Fact Finding mission)** ஆகவே கூறி அரச படையினரது வழிகாட்டலுடனான பயணங்களை மேற்கொண்டு விட்டு வெளியிடும் ஊடக அறிக்கைகள் மற்றும் கருத்துக்கள் அடக்குமுறையாளர்களுக்குச் சார்பானதாகவே பெரிதும் அமைந்து விடுகிறது.

இவ்வகையிலேயே, கடந்த புதன் யாழ் நூலகத்தில் “இலங்கை மோதல் தொடர்பான அவதானிப்புகள்” என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய அமெரிக்கத் தூதுவர் “ஆஷ்லி வில்ஸ்”, விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல. அவர்கள் பயங்கரவாத அமைப்பென்று கூறியது. தமிழ் சமூகத்தின் சகல மட்டங்களிலும் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், கடந்த புதன் பிரான்ஸ் தூதுவராலயத்தின் உயர் பாதுகாப்பு ஆலோசகரும் யாழ் குடாநாடு சென்றுள்ளமை பலத்த சிந்தனைகளை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வாரம் பெரிதும் “பறையப்பட்ட” இன்னொரு விடயம் ஆப்கானிஸ்தான் தலிபான் அமைப்பினரின் “பமியான் புத்தர் சிலைகள்” தகர்ப்பு விடயம். இதற்கு சர்வதேச சமூகமே கண்டனம் தெரிவித்துள்ளமை சரியானதாகத் தென்படினும், ஈழத்தமிழர் தாயகப் பிரதேசத்திலே பல வரலாற்றுக் கருவூலங்கள் ஆலயங்கள் தேவாலயங்கள் குண்டு வீசி சின்னாபின்னாப்படுத்தப்பட்டமை இந்நாடுகளுக்கு “பண்பாட்டு அழிப்பு” ஆகத் தென்படாது போனமை “நீதி என்பது ஒரு பக்கத்துக்கே சார்பானது” என்ற விபரிப்பை மெய்ப்பித்து விடுகிறது.

18-12-1949 இல் “தமிழ் அரசுக் கட்சி”யை தாபித்து தலைமைப் பேருரை நிகழ்த்திய தந்தை செல்வா அவர்கள் “**தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதை விட சிங்களவரைத் திருப்திப்படுத்துவதே சிறந்ததெனக் கருதிய பிரிட்டன்** ” என்று தெரிவித்தமை வரலாற்றில் மீளவும் 28-02-200 இல் நிருபணமாகியுள்ள போதும் தமிழர் தரப்பு அமைதிக்காகவே தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது.

நோர்வே சமாதான சிறப்புத் தூதுவரை நிரந்தர கௌரவமான சமாதானத்திற்காகத் தொடர்ந்து

## துரை மேகநாதன்

ஊக்கப்படுத்தும் வகையிலே கருத்தாடல்களை அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மேற்கொள்வதுடன், தமிழ் மக்களின் ஒரே போராட்ட சக்தியான தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்து பேச்சுக்கான நல்லெண்ண சூழல்களையே மேற்கொண்டு வருகின்றமை அவர்களது நேர்மைத்துவத்தை எடுத்தியம்புகிறது.



ஈழத்தமிழ் சமூகம் நீதியான நிறைவான அமைதிக்காகத் தளராது பாடுபடுவதுடன் பெரும் தியாகங்களையும் செய்து சமாதானத்திற்கான ஆலாப்பறப்புக்களை கௌரவப்படுத்துகையிலே, ஸ்ரீலங்கா பௌத்த சிங்கள பேரினவாத அரசு பாதுகாப்பு செலவீனத்தை முதன்மைப்படுத்திய வரவு செலவுத் திட்டம் மற்றும் பேரினவாதக் கருத்துக்கள் மூலமாக யுத்தத்துக்கான ஆலாவர்ணங்களை வெளியிடுவதும், சர்வதேச சமூகம் கண்டும் காணாதுமிருப்பதும் தமிழர் தாயக விடுதலைப் போராட்டம் பற்றி விமர்சிக்கும் பிறநாடுகளின் தார்மீக உரிமையை இழக்கச் செய்து விடும் என்பதே வரலாற்று நியதியாகின்றது!




# திருவாளர் தூதுவர் அவர்களே

அமெரிக்கத்தூதுவர் திரு ஆஷ்லிவில்ஸ் பேசிவிட்டார். யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் தமிழ் மக்கள் மத்தியில் தனது உரையினை நிகழ்த்தியிருக்கின்றார். இந்த யுத்தம் முடிவடையவேண்டும் என்றும், அது பேச்சுவார்த்தைகளின் மூலம்தான் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டுமெனவும் சொல்லியிருக்கின்றார். தமிழ் மக்களுடைய உரிமைகளை நாம் அங்கீகரிக்கின்றோம். இலங்கை மக்கள் தீர்மானித்தவொரு அரசியல் கட்டமைப்பில் தமிழ் மக்கள் சம உரிமைகளுடனும் சுய கௌரவத்துடனும் வாழ வேண்டுமென

சுதந்திரத்திற்காகத்தான் நாம் இன்று போராடுகின்றோம். தாயகம் என்ற கோட்பாடு அந்த அரசியலமைப்பு வரையறைக்கும் எல்லைக் கோடுகளைத் தான் குறிப்பதுவாகும். ஆகவே நீங்கள் கூறிய இனச்சுத்திகரிப்பு, இனச் சுகாதாரம் போன்ற பதங்கள் எமக்குப் பொருந்தாதனவாகும்.

ஆம், தொலைக்காட்சியைத் தட்டியவுடன் சி.என்.என் நிருபர்களுடன் உலகை வலம் வரலாம்தான், ஆனால் அதற்காக வசிக்கும் வீட்டையும் வீட்டுக் காணியையும் பிறர் சுவீகரிக்க இடம் தருவமோ? **நாங்கள் வசிக்கும் பூமி**;

**பண்ணலாம் இல்லையா? தனிநாட்டை நிராகரிக்கின்றோம் என்று நீங்கள் கூறுவது ஒரு குழு மக்களின் அபிலாஷை**

அநீதிகளுக்கெதிராக விண்ணப்பம் செய்ய மன்றங்கள் ஒன்றுமே இல்லையே. ஆகவே இந்த அரசு மட்டும்

விரும்புகின்றோம் என்றும் விளக்கியிருக்கின்றார். சரி, இத்துடன் நிறுத்தியிருந்தால் பாதகமில்லை. அவருடன் ஒத்துக்கொண்டிருப்போம், இப்படிச் சொன்னதற்கு நன்றி கூறியிருப்போம். ஆனால் அவர் இத்துடன் நிற்கவில்லை, மேலும் பல கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்.

இலங்கையில் தனிநாடு பிரித்தெடுக்கப்படலாம் என்பதனை நாம் நிராகரிக்கின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாகவே நாம் காண்கின்றோம் என்பது மட்டுமல்ல அவர்களே தமிழ் மக்களின் ஒருமையான பிரதிநிதிகள் என்பதனை நிராகரிக்கின்றோம் என்றிருக்கின்றார். தனிநாட்டுக் கோரிக்கையினை பிரத்தியேகவாதமாக அர்த்தம் கற்பிக்கும் அவர், மூலை முடுக்கிலுள்ள கிராமங்களையெல்லாம் ஒரு தொலைக்காட்சி ஸ்விட்சைத் தட்டும் தூரத்தில் சர்வதேச ரீதியில் இணைக்க முடிந்த இந்தக் காலத்தில், தனிநாடு கேட்பது ஒடிசியஸ் காலத்துக் கிரேக்கத்தில்தான் சாத்தியமான இலக்காகும் என்று மறைமுகமாக நையாண்டியும் பண்ணியிருக்கின்றார். ஐக்கிய அமெரிக்காவின் இலச்சினைக் கோட்பாடு "பலவற்றிலிருந்து ஒன்று" என்பதாகும். அதாவது பல இனங்கள் ஒன்று சேர்ந்து ஒரு ஐக்கியத்தை உருவாக்குவது என்று விளக்கும் அவர், பல்லின மக்கள் வாழும் இலங்கைச் சமூகமும் அவ்வாறேதான் இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுகின்றார்.

மதிப்பு வாய்ந்த தூதுவர் அவர்களே, தமிழ் மக்களாகிய நாமும் உங்களுக்கு சில விளக்கங்களை அளிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

## தனியீழத்தால் எல்லா இன மக்களும் வாழலாம்

முதலாவதாக, ஈழக் கோரிக்கை பிரத்தியேகவாதத்தினால் ஏற்பட்டதல்ல. அதாவது தமிழ் மக்கள் மட்டும் வாழும் பிரதேசம் வேண்டும் என்ற தேவையின் அடிப்படையில் எழுந்ததல்ல. மாறாக, தமிழ் மக்கள் இன ரீதியாக ஒடுக்கப்படாத அரசியல் கட்டமைப்பின்கீழ் வாழ வேண்டும் என்ற இலட்சியத்தினால் தான் ஈழக்கோரிக்கை எழுந்தது. தமிழீழத்தில் வேறு இனங்கள் வாழமுடியாது என என்றைக்கும் தமிழ் மக்கள் கூறியது கிடையாது. தனியீழத்தில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சுதந்திரமாக வாழலாம். அந்த

பேசும் மொழி, வரித்துக்கொண்ட கலாச்சாரம்; இவைதாமே நம்மை நாமென்று உணர்த்தும் ஜீவ உணர்வுகளாகும்? உலகமயமாக்கல் வந்துவிட்டது என்றுவிட்டு நாம் பாரசூட்டில் பறந்துகொண்டு நாட்டுக்கு நாடு பேசும் மொழியினைப் பேசிக்கொண்டு திரியலாமோ?

ஏன் அமெரிக்கர்களிடமே கேட்டுவிடுவோமே? பலவற்றிலிருந்து ஒன்று என்று தானே நீங்கள் கொள்கை வைத்திருக்கிறீர்கள்? அவ்வாறாயின் நாம் எல்லோரும் ஒன்றெனக் கருதி விஸா ஒன்றுமே இல்லாது உலக மக்களை

**நாங்கள் வசிக்கும் பூமி; பேசும் மொழி, வரித்துக்கொண்ட கலாச்சாரம்; இவைதாமே நம்மை நாமென்று உணர்த்தும் ஜீவ உணர்வுகளாகும்?**

உங்கள் நாட்டுக்கு வர விட்டால் என்ன? ஆனால் அப்படிச் செய்ய முடியாது தானே. அமெரிக்க நாட்டில் வாழ்பவர்கள் ஒரு நாட்டினர், ஏனையவர்கள் வேறு நாட்டினர் அல்லவா? ஆகவே நீங்கள், பல்லின மக்களும் ஒன்றுதான் என்று கூறினாலும் எங்களைப் போன்று வறிய நாட்களிலிருந்து வருபவர்களைக் கடும் கெடுபிடிகளுடன்தான் உங்கள் நாட்டில் நுழைய விடுவீர்கள்.

## லக்ஸம்பேர்க் தனிநாடாகத்தானே இருக்கிறது

நாங்கள் சொல்ல விரும்புவது இது தான். எந்த மக்களாயினும், நீங்களாயினும் நாங்களாயினும், நாடு என்பது வரையறுக்கப்படுவது முக்கியமானது. ஐரோப்பிய ஒன்றியத்திலும் கூட எல்லா நாடுகளும் பொருளாதார, தொழில்நுட்ப, கலாச்சார விடயங்களில் ஒன்று சேர்ந்த போதிலும் அவை தத்தமது தேசங்களைத் துறக்கவில்லையே. இன்னும் அங்கு தொள்ளாயிரத்து தொண்ணூற்றியொன்பது சதுர மைல் கொண்ட, மூன்றரை லட்சம் மட்டுமே மக்கள் தொகை கொண்ட லக்ஸம்பேர்க் தனிநாடாகத்தானே தொடர்ந்திருக்கிறது? எந்தக் காரணம் கொண்டும் அது அதைச் சுற்றி அமைந்துள்ள பெல்ஜியம், ஜேர்மனி பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்படக்கூடாதென்று யாரும் கூற வில்லையே.

**எதனை எமது நாடு என்று நாம் அழைக்கக்கூடும்? எமது நலன்களை நாம் முன்வைக்கவும் அவை செவிமடுக்கப்படவும் கூடிய இடத்தினையே எமது நாடு என்று நாம் கூறமுடியும். அந்த இடம் ஏதோவொரு காரணத்தினால் கிடைக்காமல் போய்விடின், அதற்குப் பிரதியீடாக ஒரு இடத்தினை நாம் உருவாக்க முயற்சி**

**களை மறுதலிக்கும் ஆணவமன்றோ?**

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் இல்லை எனக்கூறுகிறீர்களே, அப்படியானால் தமிழ் மக்களை இன்று பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனையோர் எவர் என்று கூறினால் உதவியாக இருந்திருக்கும். ஈபிடிபியா? புளொட் அமைப்பா? டெலோ அமைப்பா? அல்லது சமீபத்தில் கடற்கொள்ளைக்காரன் உருவில் வந்திறங்கிய வரதராஜப் பெருமாள் கூட்டமா? யார் எங்களுடைய பிரதிநிதிகளாக இருக்கக்கூடும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? இல்லை, யு.என்.பியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கலாம் என்ற கருதினீர்களோ தெரியவில்லை. ஒரு குழு மக்களின் பிரதிநிதிகள் எனக் கருதப்படுவோர், எந்த நிலையிலும் தமது நலன்களை விட்டுக்கொடார் என்று மக்கள் நம்பிக்கை வைக்கும் ஒரு தலைமைத்துவமே பிரதிநிதிகளாக மாறும் தகைமையைப் பெற்றது. அந்த வகையில் நோக்கினால் மேற்கூறிய எவரை நாம் நம்பலாம் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

அப்பாவி சிவிலியன்களைக் கொன்ற காரணத்தினாலும், கடந்த காலத்தில் நடத்திய படுகொலைகளினாலும் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்கிறீர்கள். வாஸ்தவம்தான். ஆனால் அந்த வரைவிலக்கணத்தினைக் கொடுத்தால் யார் பயங்கரவாதிகள் அல்லர்? கொழும்பில் நிலைகொண்டுள்ள அரசாங்கம் ஒரு பயங்கர வாத அரசாங்கம் அன்றோ? இந்த அரசின் ஏஜன்டுகளாகத் தொழிற்படுபவர்கள், அரசாங்கத்தினரும் இராணுவத்தினரும், பொம்பர்களை அனுப்பி குண்டுத் தாக்குதலை நடத்தி பொது மக்களைக் கொன்று காயப்படுத் துகின்றனர். இதன் இராணுவம் எத்தனை படுகொலைகளை நிகழ்த்தியுள்ளது? அந்த வேளைகளில் அதை நிகழ்த்திய இராணுவத்தினர் ஒரு பாதிப்பும் ஏற்படாத வண்ணம் வழக்கைத் தள்ளிவைத்து அதை அவர்கள் இன்னும் துணிவோடு செய்ய அனுமதிப்பத்திரம் வழங்கி யதன்றோ? இதே போலத்தான் தென்பகுதியில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் இளைஞர்கள் அரச வன்முறைக்கு ஆளாகி இறந்தார்கள். இது மட்டுமல்ல, விமர்சனங்களுக்கு பதிலடியாக குண்டாந்தடியையும் துப்பாக்கியையும் காட்டுகின்றது. இந்த

பயங்கரவாத அமைப்பில்லையா?

## காஸ்ட்ரோலை கொல்ல முயன்ற அமெரிக்க பயங்கரவாதம்

நான் இப்பத்தியை எழுதிக்கொண்டிருக்கும் அதேவேளையில் தொலைக்காட்சியில் டிஸ்கவரி அலையில் அமெரிக்காவின் உளவு ஸ்தாபனமான சி.ஐ.ஏ எவ்வாறு ஏனைய வெளிநாடுகளில் படுகொலைகளைத் தூண்டியிருந்தது என்பதைப் பற்றிய வருணனைச் சித்திரம் போய்க்கொண்டிருக்கின்றது. மக்களின் அமோக ஆதரவைப் பெற்று ஆட்சியில் அமர்ந்த பிடல் காஸ்ரோவை,

அவர் அமெரிக்க நலன்களுக்கு எதிரானவர் என்ற ஒரே காரணத்துக்காக, விஷம் ஊட்டிக் கொல்ல முயன்ற சம்பவங்களையெல்லாம் விவரிக்கின்றது இந்தச் சித்திரம். அமெரிக்க அரசாங்கமும் பயங்கரவாத அமைப்புத்தான். அல்லது, முன்பு தென்னமெரிக்காவின் பல நாடுகளில் அநியாயமாக ஆட்சிக் கவிழ்ப்புக்கும். கொலைகளுக்கும் நாங்கள் காரணமாயிருந்தோம், ஆனால் இப்போது இல்லை என்றாயினும் சொல்லத் துணிவீர்களா? பயங்கரவாதம் எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்கப்படமுடியாததுதான். ஆனால் அக்கருவுரு தத்தமது நாட்டு வசதிக்கேற்ப தனியே விடுதலைப் புலிகளக்கெதிராகவோ அல்லது இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுக்களுக்கெதிராகவோ உபயோகிக்க முடியாதது.

நாம் தமிழ் மக்கள் சிங்கள் மக்களுடன் ஒற்றுமையாக ஐக்கிய இலங்கையுள் வாழத்தான் விரும்புகின்றோம். இந்தப்போக்கு இராணுவ நடவடிக்கை பேச்சுவார்த்தை என இருவகை நடவடிக்கைகளாலும் முன்னெடுக்கப்படும். **பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள், ஆகவே நாங்கள் உண்மையில் பாதுகாக்கப்படுவோம் என்ற திருப்தி எங்களுக்கு ஏற்படும்வரை இந்த நடவடிக்கைகள் மாறி மாறி நிகழ்ந்த வண்ணமேயிருக்கும்.** இந்தப் போக்கு விரைவில் முடிக்கப்படுவது சிங்கள் அரசாங்கத்தின் கையிலேயே உள்ளது. பிரச்சனைக்குக் காரணகர்த்தாவாக இருப்பவர்கள் அதன் தீர்வுக்கும் பாரிய பொறுப்பெடுக்க வேண்டுமன்றோ? அமெரிக்காவிற்கு விருப்பமிருந்தால் சிங்கள் அரசாங்கத்தின் மேல், அது தன்னை ஜனநாயக மயமாக்குவதற்கு வேண்டிய அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம். தனது உரையில் சுட்டிக் காட்டியபடி, அதைச் செய்ய அமெரிக்காவினால் முடியாதுபோனால் அது வாளாவிருப்பதே சிறந்தது.

# தலிபான் அமைப்பின் புனிதயுத்தம்!

ஆப்ஹானிஸ்தானில் ஒரே இரவில் கடும் குளிர் காரணமாக 500க்கும் அதிகமான அகதிகள் இறந்து போய்விட்டார்கள்.

இந்திய குஜராத் நிலநடுக்கத்தில் சுமார் ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்ட அனர்த்தம் தொடர்பான செய்திகளின் மத்தியில் ஆப்ஹானிஸ்தானில் இடம்

> தலிபான் பெண்களை மூடிவைக்கும் போக்கு மேற்குலகத்தில் விமர்சனத்திற்குள்ளாகின்றது.
>
> ஒப்பியத்தை பயன்படுத்துவது தவறு, விற்பது தவறல்ல என்கின்றார் தலிபானின் தலைவர்
>
> அமெரிக்காவுடனும் பகை ரஷ்யாவுடனும் பகை.

பெற்ற இந்த அனர்த்தம் தொடர்பான செய்திகள் ஓரளவுக்கு அடிபட்டு போய்விட்டது என்றுதான் கூறவேண்டும்.

கடும் குளிரால் இவர்கள் இறந்து போனாலும் இதனை முழுமையாக ஒரு இயற்கை அனர்த்தம் என்று கூறிவிட முடியாது. மோதலால் இடம்பெயர்ந்து தங்குவதற்கு சரியான ஒதுங்கிடம் இலாலாததால்தான் இந்த அகதிகள் இவ்வாறு அவலமாக இறக்க நேரிட்டது.

உண்மையில் சர்வதேச அரங்கில் ஆப்ஹான் தொடர்பான அனர்த்த செய்திகள் இடம் பெறுவது இது முதல் தடவையல்ல. ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிரான மோதல்கள் ஆரம்பித்த காலம் தொடக்கம் ஆப்ஹான் நாடும் அதன் பெரும்பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் 'தலிபான்' அமைப்பும் உலக ஊடகங்களில் முக்கிய இடத்தை பெற்றே வருகின்றன.

மத்திய ஆசியாவில் அமைந்துள்ள ஆப்ஹானிஸ்தான் சரித்திர மற்றும் கலாசார ரீதியில் சுமார் 5000 வருடங்கள் பழமை வாய்ந்தது. முன்பு அர்யானா, கொராசான். என்ற பெயர்களில் அழைக்கப்பட்ட நாடுதான் ஆப்கானிஸ்தான். இங்கு பால்தூன், தஜிக்ஸ், ஹசராஸ் மற்றும் உஸ்பெக்ஸ் என பல இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இதனை விட நுருஸ்தானில், பலுச்சிஸ், போன்ற இனங்கள் சிறுபான்மையாகவும் வாழ்ந்து வருகின்றன.

இங்கு இஸ்லாம் 99 வீதத்தினரால் பின்பற்றப்படுகின்றது. அதனைவிட சீக்கியர்கள், இந்துக்கள் மற்றும் யூதமதத்தவர்களும் உள்ளனர். ஆப்ஹான் நாடு பல குழுக்களால்

> **அண்மைக்காலமாக ஆப்கானிஸ்தானில் உள்ள புனித பௌத்த சின்னங்களை குண்டு வைத்துத் தகர்ப்பதில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. தலிபான் அமைப்பு பௌத்தர்களே இல்லாத, உருவ வழிபாட்டை நிராகரிக்கின்ற எமது நாட்டில் பௌத்த சிலைகள் எதற்கு? என்பதே தலிபானின் நியாயம்.**
>
> **இங்கே இந்தத் தலிபான் அமைப்புப் பற்றிய சில விடயங்கள் ஆராயப்படுகின்றன.**
>
> **ஆ–ர்**

ஆளப்படுகின்றது. இதுதான் இங்கு மோதலுக்கு காரணம். இதில் பெரும்பகுதியை (தலைநகர் காபுல், கந்தகார், மாசர் ஈ செரிப் மற்றும் ஹெரத் உட்பட) தலிபான் அமைப்புதான் ஆண்டுவருகின்றது. மிகுதி இடங்கள்

ஆதாவது ஆப்ஹானின் வட தூரத்தில் சிறிய பகுதி மாத்திரம் உஸ்பெக்கியாக்களின் தலைவரான அகம் சா மசூத் என்பவரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

ஆனால் ஆப்ஹானிஸ்தானின் ஐக்கிய நாடுகள் சபைக்கான



ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் முன்னாள் ஜனாதிபதியான பதுருதீன் ரபானி என்பவர்தான்.

ஆப்ஹானின் பெரும்பகுதியை தலிபான் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற போதிலும் ஐக்கிய நாடுகள் சபையும் மேற்குலக நாடுகளும் அதனை அங்கீகரிக்க தயாராய் இல்லை.

தலிபான் கணித்துள்ளது. அதனால் அவற்றுக்கு வன்மையான தடையும் விதித்துள்ளது.

குற்றச் செயல்களைத் தடுக்கும் வகையில் இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படையில் பொது மரண தண்டனை விதிக்கும் நடைமுறையையும் தலிபான் அமைப்பு அமுல்படுத்துகின்றது.

ஆனால் பெண்களை முற்றாக துணியால் மூடி(பர்தா) வைத்தல், அவர்களுக்கு கல்வி மறுப்பு போன்ற தலிபானின் செயற்பாடுகளை மேலை நாடுகளும் அவற்றின் ஊடகங்களும் வன்மையாக கண்டிக்கின்றன.

பெண்களுக்கு எதிரான இந்த விதிகள் காலப்போக்கில் தளர்த்தப்படும் என்று தலிபான் அமைப்பின் ஒரு சில



## அமெரிக்கா பகை

தலிபான் அமைப்பின் கடுமையான இஸ்லாமிய கொள்கைகளை பின்பற்றும் போக்குதான் மேற்கு நாடுகளின் இந்த நிராகரிப்புக்கு காரணம்.

உலகை ஒரு தூய இஸ்லாமிய நாடாக மாற்றுவதே தமது கொள்கை என்று தலிபான் அமைப்பு கூறுகின்றது.

அதற்கேற்ற வகையில் தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இஸ்லாமிய விதிகளை அது நடைமுறைப்படுத்துகின்றது. தொலைக்காட்சி, சினிமா, சங்கீதம் போன்றவற்றை சாத்தானின் தூதர்களாக

தலைவர்கள் கூறிவருகின்ற போதிலும் அது உறுதியானதா என்பது தெரியவில்லை.

## ரஷ்யப் பாதை

ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிராக முஜாஹிதீன்கள் போராடிய போது அதில் தலிபானும் ஒரு அங்கமாகத்தான் இருந்தது.அதனால் அது ரஷ்யாவுக்கு பகை அதே வேளை அது அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை போன்றவற்றுக்கும் பகைதான்.

அமெரிக்கா, ஐ.நா ஆகியவற்றின் தலிபான் மீதான கோபத்திற்கு அந்த அமைப்பின் கடுமையான இஸ்லாமிய போக்கு மாத்திரம் காரணமல்ல. இன்னுமொரு முக்கிய காரணமும் உண்டு.

அமெரிக்காவுக்கும் அதன் மத்திய கிழக்கு கூட்டாளிகளுக்கும் எதிராக புனித போரை(ஜிகாத்) அறிவித்துள்ளார் சவூதி அரேபியாவைச் சேர்ந்த ஒஸ்மா பின் லேடன். அமெரிக்கர்கள் பலியான பல குண்டு வெடிப்புகளுக்கு இவர் மீதே

குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவருக்கு தலிபான் அமைப்பு ஆப்ஹானிஸ்தானில் தஞ்சம் வழங்கியுள்ளது. பின்லேடன் தமது விருந்தாளி என்று "தலிபான்" கூறுகின்றது. இது தான் தலிபான் மீது அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் கோபம் கொள்ள முக்கிய காரணம். ஆப்ஹானிஸ்தானின் சில பகுதிகளை நோக்கி அமெரிக்கா ஏவுகணை தாக்குதல் நடத்திய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

## முல்லா முகமட் உமர்

தலிபான் அமைப்பின் சரித்திரமும் மிகவும் நீண்டது என்று கூறுவதற்கில்லை. இதன் தலைவரான முல்லா முகமட் உமர் பிறந்தது 1962 இல் தான் என்று கூறப்படுகின்றது. ஆப்ஹானின் மத்தியமாகாணமான உர்சஹானில் பிறந்ததாகக் கூறப்படும் உமர் ஆப்ஹானிஸ்தானுக்கு வெளியே குயிட்டா, பாகிஸ்தான் போன்ற இடங்களில் இஸ்லாமிய கல்வி பயின்றதாகவும் 1980 இல் ரஷ்யா



ஆக்கிரமிப்புக்கு எதிரான ஜிகாத்தில்(புனிதப்போர்) இவர் இணைந்ததாகவும் இவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் தனது ஒரு கண்ணை இழந்த உமர் 1994 இல் தான் தலிபான் அமைப்பை உருவாக்கியதாக கூறப்படுகின்றது.

மத்திய ஆசியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஒரு வணிகப்பாதையை ஏற்படுத்தி அதனை பாதுகாக்கும் நோக்கில் தான் தலிபான் உருவாக்கப்பட்டதாகு கூறப்படுகின்றது.

இவருக்கு பின்பலமாக செயற்படுவது பாகிஸ்தானின் உளவுப்பிரிவான ஐ.எஸ்.ஐ என்றும் சொல்லப்படுகின்றது. உமரை ஒரு படித்த அறிவாளியாக, புனிதப்போரின் தலைவனாக அவரது ஆதரவாளர்கள் குறிப்பிடும் அதே வேளையில் அவரது எதிர்ப்பாளர்கள் அவருக்கு இஸ்லாத்தை பற்றி எதுவும் தெரியாது என்று கூறுகின்றனர்.

ஒப்பியம் என்னும் போதைப்பொருளை விற்பதும், பயன்படுத்துவதும் இஸ்லாமிய சட்டப்படி தவறு என்று கூறப்படும் அதே வேளை ஒப்பியத்தை பயன்படுத்துவது தவறு ஆனால் அதனை விற்பது தவறில்லை என்று உமர் கூறுகின்றார். இதனை சுட்டிக் காட்டும் அவரது எதிர்ப்பாளர்கள் உமர் இஸ்லாத்துக்கு தவறான நியாயம் கற்பிக்கின்றார் என்று கூறுகின்றனர்.

ஆனால் 1996 ஏப்ரல் 3ஆம் திகதி 1000 முஸ்லிம் மதத்தலைவர்கள் உமரை முஸ்லிம்களின் பெரும் தலைவன் என்றும் ஆப்ஹானின் முன்னாள் ஜனாதிபதி பதுருதீன் ரபானியை ஒரு குற்றவாளி என்றும் கூறுகின்றனர். இத்தனைக்கும் சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிரான போரில் முஜாஹிதீன் அமைப்புக்கு தலைமை தாங்கியவர் ரபாணி.

மொத்தத்தில் ஆப்ஹான் ஒரு குளறுபடியாகவே உள்ளது. புரிந்து கொள்வது கஷ்டம்.

நன்றி:–
*(வான்முரசு)*

# ஜோதியுள் கலந்த தந்தையின் திருவுடல்

**14**

அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்பதோ அந்தப் பகுதியின் தார தம்மியம் என்னவென்பதோ அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவரும் சாதாரணமாகவே இருந்தார். இன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் போல் பொது மக்கள் எட்டமுடியாத தூரத்தில் அவர் இருக்கவில்லை. பொலிஸ் காவல் இருக்கவில்லை. பாதுகாப்பான வாகனங்களோ வாகனத் தொடரோ இருக்கவில்லை. மொத்தத்தில் உண்மையான மக்கள் பிரதிநிதியாக அவர் இருந்தார்.

அவரிடம் காரிய நிமித்தம் போகின்றவர்களில், வீடு தேடிப் போனவர்களை விட முத்துக்குமார சுவாமி கோயிலடியிலோ அல்லது முற்றவெளியிலோ சந்திப்பவர்கள் தான் அதிகமாக இருந்தார்கள் என்பதை அவன் தந்தை மூலமாக அறிந்து கொண்டான். முற்றவெளியில் இந்தக் கல்லூரிக்கு முன்னால் பள்ளிவாசல் தென்னை மர நிழலில் புற்றரையில் இராஜவரோதயம் மாலை வேளைகளில் சாய்ந்து படுத்திருப்பதை அவன் அடிக்கடி கண்டிருக்கிறான். அவர் படுத்திருக்க சில பெரியவர்கள் அவரைச் சுற்றி அமர்ந்திருப்பார்கள். சிலர் சரிந்தும் படுத்துமிருப்பார்கள். இப்படி ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இருந்தாரா? என்று இன்றைய இளைஞர்களுக்கு வியப்பாக இருக்கும். ஆனால், அது உண்மைதானே!

யாழ்ப்பாண முற்றவெளியில் மக்கள் கூட்டம் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. தந்தை

**அருண்**

யின் இறுதிக் கிரிகைக்காக வந்த பிரமுகர்கள் மேடையேறினர். சனக் கூட்டம் அலை மோதியது. மக்கள் கட்டுப்பாட்டை இழந்துவிடக்கூடும் என்ற நிலை. அமிர்தலிங்கம் மேடையேறினார். ''எல்லோரும் அமைதியாக இருங்கள். எந்த நிகழ்ச்சிக்கும் இடையூறு நேரக்கூடாது. அதற்கேற்றவாறு நடந்து கொள்ளுங்கள்'' என்று கண்டிப்பான குரலில் கூறினார். அவர் கூற்றில் தலைமைக்குரிய மிடுக்குக் காணப்பட்டது. பொங்கி வரும் பாலில் நீரப்பட்டதைப் போன்று சனம் அடங்கியது. அவனுக்கு வியப்பாக இருந்தது.

திரு. அமிர்தலிங்கத்தின் தலைமைத்துவ பண்புபற்றி அவன் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறான். அஞ்சாமல் தனது கருத்துக்களைச் சொல்பவரென்பதும், தான் சரியென்று கண்ட கருத்துக்களை எப்படிப்பட்டாவது நிலைநாட்டும் சிறப்புடையவரென்பதும், அவன் விஷயத்தில் அவன் பல தடவை கண்டிருக்கிறான். அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணித் தொண்டர்கள்'', "தளவதி'' என்றே அவரை அழைத்தார்கள். அந்தக் கூட்டத்தை அவர் அடக்கிய விதம் அமிர்தலிங்கத்தின் மேல் அவன் வைத்திருந்த மதிப்பை மேலும் ஒரு பங்கு உயர்த்தி விட்டிருக்கிறது.

மேடையில் அமர்ந்திருந்த பிரமுகர்கள் தந்தை பற்றி என்னென்னவோ எல்லாம் பேசினார்கள். தந்தையிடம் உள்ளார்ந்தமாக ஒன்றிப் போயிருந்த மக்களின் மன உணர்வுகளுக்கு முன்னால் அவர்களது உரையின் உணர்வு குறைவாகவே இருந்ததை அவனால் உணரக்கூடியதாக இருந்தது.

தந்தை செல்வாவின் பூவுடல் யாழ்ப்பாண முற்றவெளியல் வைத்துத் தீயிடப்பட்டது. பெருந்திரளான மக்கள் ஓ வென்று கதறிய காட்சி இன்னும் அவன் மனக் கண் முன் நிற்கின்றது. அவனும் கலங்கிப் போயிருந்தான். ஆட்சியைப் பிடிப்பதற்காக கிறிஸ்தவ சிங்களவர்கள் பௌத்த சிங்களவர்களாக மாறுகின்ற இலங்கை அரசியலில், ரோமன் கத்தோலிக்கமும் அல்லாத சிறுபான்மைக் கிறிஸ்தவப் பிரிவைச் சேர்ந்திருந்தும் இஸ்லாம், கிறிஸ்தவர், சைவர் என்ற எல்லைகளை உடைத்தெறிந்து தமிழ் பேசும் மக்களின் இதய தீபமாக ஒளிர்ந்த அந்தத் திருவுடல் தீயுடன் கலந்தது.


எந்த மதப்பிரிவைச் சார்ந்தவராக இருந்தாலும், நல்ல மனிதர்கள் பின்னே உலகம் திரளும் என்று நிருபித்துக்காட்டிய கோமகன் அக்கினியுடன் கலந்தார். மதம்மாறித் தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டு அரசியல் செய்ய விரும்பாத தீபம் ஜோதியுடன் கலந்தது.

தலைவனைப் பறிகொடுத்த சோகம் தமிழ் நெஞ்சங்களை ஆட்டிப் படைத்தது. அமிர்தலிங்கம் தளபதி என்று தொண்டர்கள் மனதில் தோற்றம் பெற்றிருந்தாலும் அவசரக்காரர், முன்கோபி, துடுக்காகப் பேசுபவர் என்ற பிம்பங்களும் இருக்கத்தான் செய்தன. தந்தை செல்வாவைத் தவிர அமிர்தலிங்கம் அவர்களை யாராலும் கட்டுப்படுத்த முடியாது என்ற எண்ணம் மக்கள் மனதில் ஆழமாகக் காணப்பட்டது. என்றாலும் அவரின் திறமையில்- உழைப்பில்- மக்கள் நிறையவே நம்பிக்கை வைத்திருந்தார்கள். அவனும் அமிர்தலிங்கத்திடம் மயங்கிப் போயிருந்தான். அவரது மேடைப் பேச்சுகளாலும் தீர்க்கமான பண்புகளாலும் கவரப்பட்டிருந்தான். தந்தைக்குப் பிறகு தளபதியே தலைமை தாங்கத் தகுதியானவர் என்ற எண்ணம் அவரது உழைப்பையும் உறுதியான முன்னெடுப்புக்களையும் அடிப்படையாக வைத்து மக்கள் மனதில் காணப்பட்டது அவ்வாறே அவர் தலைமையேற்றார்.

[illegible]

தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் அமிர்தலிங்கத்திடம் பொறுமை, நிதானம் என்பவை எவரும் எதிர்பாராத விதமாக மெருகேறியதை யாரும் மறுக்க முடியாது. ஒரு நல்ல தலைவனுக்குரிய பண்புகள் நிறையவே அவரிடம் காணப்பட்டன. தன் முடிவிலிருந்து சற்றும் பின் வாங்காத ஒருவிதத் துணிச்சலை அவரிடத்தில் அவன் பெருமையுடன் கண்டு ரசித்திருக்கிறான்.

தந்தையின் அஸ்தி தமிழ் நகரங்களுக்குக் கொண்டு செல்ல ஏற்பாடாகி இருந்தது. திருக்கோணமலைக்கும் அஸ்தி கொண்டு வரப்பட இருந்தது. அந்தக் காலப்பகுதியில் திருக்கோணமலையைப்



பொறுத்த மட்டில் இனக் கலவரம் ஆண்டுத் திருவிழா போல் வருடம் வருடம் நடைபெற்று வந்தது. ஸ்ரீமாபுரம், அபயபுரம், மக்கோ சந்தி, நான்காம் கட்டை ஆகிய சிங்கள குடியேற்ற வாசிகளுக்கு இனக் கலவரத்தைத் தூண்டி விட்டு அப்பாவித் தமிழர்களை வெட்டிக் கொல்வது ஒரு கம்பீரமான பொழுது போக்காகவே இருந்தது.

உயர் மட்டச் சிங்கள அதிகாரிகளும் இத்தகைய கலவரங்கள் உருவாவதற்கு மறைமுகக் காரணங்களாக இருந்தார்கள். பொலீஸார் கூட நேர்மையாக நடக்கத் தயங்கினார்கள். ஏறத்தாழ அரச ஆசியுடன் திருக்கோணமலை ஆண்டு தோறும் இனக்கலவரத் திருவிழாவைச் சிங்களக் குடியேற்ற வாசிகள் தேசியக் கடமை போல நடத்திக் கொண்டிருந்த நேரம் அது.

தந்தை செல்வாவின் அஸ்தியை எங்கே வைக்கலாம் என்பது அப்போதைய சூழலில் கவனமாகக் கையாளப்பட வேண்டிய ஒன்றாகவே இருந்தது. கடைசியில் திருக்கோணமலை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தற்போது விபுலானந்த மகா வித்தியாலயம் என்றழைக்கப்படும் அனுராதபுரச் சந்தி மகா வித்தியாலயத்தில் வைக்க ஏற்பாடு செய்தனர்.

இதற்கான ஒழுங்கு

### சிங்கள காடையர்களுக்குப் பதிலடி கொடுத்த தமிழ் இளைஞர்கள்

களைச் செய்வதில் மன்மதன் என்பவர் முன்னின்று உழைத்தார். இவர் கோட்டைக் கல்லாற்றைச் சேர்ந்தவர். மும்மொழி வல்லுனர். துடிப்புடன் பணியாற்றும் இளைஞர் என்று கட்சி வட்டாரத்தில் பெயரெடுத்தவர். பிற்காலத்தில் இவர் பொத்துவில் உதவி அரசாங்க அதிபராகவும் பதவி வகித்துத் தற்போது வெளிநாட்டில் வசிப்பதாகத் தெரிகிறது.

மன்மதன் சொல்லும் பணிகளை அவனும், கீழ்ப்படிவோடு செய்தான். சிங்களக் காடையர் குழப்பத்தை உருவாக்கக்கூடும் என்ற பயம் ஏற்பாட்டாளர்களிம் காணப்பட்டது. சிங்களவர்கள் குழப்பம் விளைவித்தால் அஸ்தியைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை இரகசியமான முறையில் மன்மதன் செய்திருந்ததை அவனும் அறிந்திருந்தான்.

குழப்பங்கள் எதுவும் அஸ்தி வைக்கபட்டிருந்த பாடசாலையில் நிகழவில்லை. ஆனால் அஸ்தி ஏற்பாடுகளைக் கவனித்து உதவிகள் செய்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த இளைஞர்களின் சைக்கில் சக்கரங்களுக்கு ஸ்ரீமாபுரத்தில் காடையர் கம்பி விட்டதைத் தொடர்ந்து பிரச்சினை உருவானது.

அரசடி, பத்தாம் குறிச்சி, சிவன்கோவிலடி, திருக்கடலூர் போன்ற குழுக்களாகச் செயல்படக் கூடிய பகுதிய இளைஞர்களும் அக்கூட்டத்தில் காணப்பட்டதால், உடனடியாகவே காடையர்களுக்குப் பதிலடி கொடுக்கப்பட்டது. ஸ்ரீமாபுரத்தைச் சேர்ந்த சிங்களவர்கள் கத்தி பொல்லுகளுடன் தமிழ் இளைஞர்களைத் தாக்கத் தொடங்கினார்கள். இதை அவதானித்த திருக்கடலூர் இளைஞர்கள் உடனடியாகவே அவ்விடத்துக்குத் திரளாக விரைந்து இளைஞர்களைக் காப்பாற்றினார்கள்.

ஸ்ரீமாபுரத்தில் எங்கள் இளைஞர்கள் தாக்கப்படுகிறார்கள் என்ற செய்தி வேகமாகப் பரவிவிட்டது. திருக்கடலூர் இளைஞர்கள் உதவிக்குச் சென்ற விடயமோ, இளைஞர்கள் பாதுகாப்பாக திரும்பி விட்ட விடயமோ பரவிய செய்தியுடன் சேர்ந்துவரவில்லை. நகரம் பதற்ற நிலைக்கு வந்தது.

நகரத்திலிருந்து இளைஞர்கள் திரள் திரளாக புறப்பட்டார்கள். தாக்குதலுக்குள்ளானதாகக் கருதப்பட்ட இளைஞர் கூட்டத்தில் பல பகுதி இளைஞர்கள் இருந்ததால், சிவன் கோவிலடி கணேசன் சந்தி, அரசடி என்று பல கோணங்களிலிருந்தும் இளைஞர்கள் புறப்பட்டார்கள். கார்கள், லொறிகள், டிராக்டர்கள் என்று தெருவில் சென்ற வாகனங்கள் வழிமறிக்கப்படடு அதில் ஏறிக் கொண்டார்கள்.

**(இன்னும் வரும்)**

## எழுச்சிக்குரல்

உலகுலகமெங்கும் கடந்த வியாழன் ''சர்வூதேச மகளிர் தினம்''பல்வேறு பட்ட கருத்தாடல்கள் கொண்டதாக அனுட்டிக்கப்பட்டிருந்தது. ''பெண்கள்; சமாதானம்; பாதுகாப்பு'' என்பது இவ்வருட சர்வதேச தொனிப்பொருளாக இருந்தது.

ஸ்ரீலங்காவில் படைவீரர்களுக்கான ''கண்தான இயக்கம்'' அன்றைய நாளில் மேதகு அதிபர் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுடன் கிராமந்தோறும் குறிப்பிட்டளவான கண் கொடையாளர்களைப் பதியவும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. ''பெண்களும் வறுமையும்'' என்பது ஸ்ரீலங்கா மகளிர் தினக் கருப்பொருளாக இருந்ததுடன் வரவு-செலவுத் திட்டமும் அன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இங்கும் குறித்த சில சமூக அமைப்புக்கள் மகளிர் தினத்தை இயன்றவரை கருத்துடையதாகவும் பரந்துபட்ட சிந்தனைத் தளத்தினூடான கருத்து/உணர்வு பகிர்வாகவும் நிகழ்வுகளை ஒழுங்கமைத்திருந்தமை பாராட்டத்தக்கது.

மேற்குலகினதும் முதலாளித்துவ சக்திகளினதும் வியாபார நலன் மட்டும் நிறைந்த ''வலன்ரைன் தினம்'' என்ற பெப்ருவரி 14க்கு மிகுந்த பிரயத்தனத்துடனான வர்ண சுவரொட்டிகளையும் உணர்வு நிரம்பிய கவிதைகளையும் வளாகத்தில் நிறைந்திருந்த பல்கலைக்கழக சமூகத்தின் சர்வதேச மகளிர் தினப் பங்களிப்பு எத் தகையதாய் இருந்தது என்பது சிந்திக்கத்தக்கது.

இத் தருணத்திலேயே, 1990 களின் மத்திய சீனாவில் நடைபெற்ற பெண்கள் உரிமை தொடர்பான

**கோ.துரைகுமாரன்**

உச்சி மாநாடொன்றில் காணப்பட்ட பிரதான பதாகை ஒன்றிலிருந்த வாக்கியம் நினைவுக்கு வருகிறது.

''ஒரு தேசத்தின் பெண்கள்'' **(A Nation can never be free Under its)** என்ற கருத்து ''மறுதலை'' யாக இன்னும் ஆழமாகப் பின்வருமாறு புரிந்து கொள்ளப்படத்தக்கதாகும்.

''ஒரு தேசத்தின் பெண்கள் அத்தேசத்தின் சுதந்திரம் காணாது தாம் சுதந்திரமடைதல் முடியாது'' **(A nation"s women are never free unless their nation ie free)** என்ற கருத்து விடுதலை வேண்டிப் போராடும் தேசங்களுக்கு வலிதானதாக அமைகிறது.

தேச விடுதலைப் போராட்டங்களில் பெண்களின் பங்களிப்பு என்பது நேரடியான போராட்டப் பங்களிப்புக்களாகவும் இதர முக்கியத்துவம் நிறைந்த பங்களிப்புக்களாகவும் அமைந்திருந்ததை வரலாறு.

***

ஆக்கிரமிப்பாளர்கள் தமது ஆக்கிரமிப்பைப் பல்வேறு வகைகளிலும் மேற்கொள்ளும் போது, மிக ஆபத்தானதாகவும் குறுங்கால மற்றும் நீண்டகால எதிர் விளைவுகளைத் தரவல்லதாகவும் மானுடவியலாளர்களால் கருதப்படும் பெண்கள் மீதான பாலியல் ஆக்கிரமிப்பு'' இனத்துவக் கட்டமைப்பைக் குலைத்து இனச் சுத்திகரிப்பை **(Sexul Invasion)** இலகுபடுத்திவிடுகிறது.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் ஜப்பானிய இராணுவத்தினரால் தென்கொரியப் பெண்கள் ''பாலியல் அடிமைகள்'' ஆக வதைக்கப்பட்டமையும் பொஸ்னிய யுத்தத்திலே பெண்கள் இனச் சுத்திரிகரிப்பிற்கு உட்பட்டமையும் கறைபடிந்த வரலாற்று அத்தியாயங்கள்.

ஈழ விடுதலைப் போராட்டத்திலும் ஸ்ரீலங்கா படைகளது தமிழ் பெண்கள் மீதான ஒடுக்குமுறை தொடர்கிறது. 1987/1990 பகுதியில் இந்திய அமைதிப் படையின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் என்றும் மறக்க/மன்னிக்கப்பட முடியாதவை.

இந்தியப் படையின் ஆக்கிரமிப்பு அவலத்தைத் தமிழகத்துக்கு அன்று எடுத்துச் சொல்லிய ஈழ மங்கை ஒருத்தியின் உணர்வுப் பகிர்வு துயர கீதம் இவ்வார ''எழுச்சிக்குரல்'' ஆக ஒலிக்கிறது.

**வீசுங் காற்றே தூது**
**செல்லு**
**தமிழ் நாட்டில் எழுந்**
**தொரு சேதி சொல்லு**
**ஈழத்தில் நாம்படும்**
**வேதனைகள்- இதை**
**எங்களின் சோதரர்**
**காதில் சொல்லு**

**இங்கு குயில் இனம்**
**பாடமறந்தது**
**எங்கள் வயல்வெளி**
**ஆடை இழந்தது**
**பெண்களின் பெரு மங்**
**கலம் போனது**
**சாவு எமக்கொருவாழ்வு**
**என ஆனது**
**எங்கள் கொடி மலர்**
**இங்கு மடியுது**
**ஊர்மனை யாவிலும்**
**சாக்குரல் கேட்குது**
**இங்குள்ள பேய்களும்**
**செய்ய மறந்ததை**
**உங்களின் இராணுவம்**
**செய்து முடித்தது**
**கத்திடக் கேட்டிடும் தூ**
**ரம் அல்லோ**
**கடல் கை வந்து தாண்**
**டிடும் நீளம் அல்லோ**
**எத்தனை எத்தனை**
**இங்கு நடந்திட**
**எங்களின் சோதரர்**
**தூக்கமல்லோ**
**தாங்க முடியல்ல வேத**
**னைகள்- இதை**
**தாயகப்பூமிக்குத் தூது**
**சொல்லே!''**

***

# இலங்கையின் சரித்திரம் திருத்தி எழுதப்பட வேண்டும்



மகாவம்சத்தின் துல்லியத் தன்மை மீண்டும் சந்தேகத்துக்கு உள்ளாக்கப் பட்டிருக்கின்றது. ஏதோ வழமைபோல் தமிழர்கள் தான் அதன் துல்லியத்தன்மை மீது சந்தேகம் எழுப்பியுள்ளார்கள் என்று கருத வேண்டாம்.

குறை கூறியிருப்பவர்கள் தொல்பொருள் ஆய்வாளர்கள் அதுவும் சிங்களவர்கள்தான் மகாவம்சம் என்பது சிங்களவர்களின் (சிங்கள பௌத்தர்கள்) புனித நூலாக கூறப்படுகின்றது. அதில் சிறிலங்காவின் சிங்கள பௌத்தர்களின் சரித்திரம் பற்றிக்

**எஸ்.பரமேஸ்வரி**

கூறப்படுகின்றது. எந்த சிங்களப் பேரின வாதியும் (இனவாதி) தமது இனத்தின் பாரம்பரியம் பற்றி பேச விளையும் போது முதலில் மகாவம்சத்தையே ஆதாரம் காட்டுவார்கள்.

அங்கு வாழும் தமிழ் மக்களின் பாரம்பரியத்தைக் குறைத்துக்

## மகாவம்சத்தின் துல்லியத்தன்மை சந்தேகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது

கூறவிளையும் போது அதற்கு ஆதாரமாக அவர்கள் கொள்வது இதே மகாவம்சத்தைத் தான் இந்த மகாவம்சத்தின் உண்மைத் தன்மை குறித்து தமிழர் தரப்பில் பல தடவைகள் சந்தேகங்கள் எழுதப்பட்ட போதிலும் அதனை சிங்களவர்கள் பொருட்படுத்துவதில்லை.

தமிழர்களின் கருத்துக்களை புறக் கணிக்கும் நோக்கில் வடக்குகிழக்கில்



மேற்கொள்ள வேண்டிய பல பாரம்பரியம் குறித்து ஆய்வைக் கூட சிறிலங்கா அரசாங்கங்கள் தவிர்த்து வந்ததுக்குக் கூட குறை கூறப்படுவது வழக்கம்.

ஆனால் சிங்களவர்களால் சிங்களப் பகுதிகயில் சிங்களவர்களின் பாரம்பரியம் குறித்து நடத்தப்பட்ட ஆய்வுகளே தற்போது சிங்களரின் புராதனம் கூறும் மகா வம்சத்தின் மீது சந்தேகத்தை கிளப்பத் தொடங்கி விட்டன. உதாரணத்துக்கு ஒரு விடயத்தை எடுத்துக் கொள்வோம்.காசியப்பன் என்னும் மன்னன் சிறிலங்காவின் தலைநகரை கிறிஸ்துவுக்கு முன் 477 ஆம் ஆண்டு முதல் 495 ஆம் ஆண்டுக்கு உட்பட்ட காலத்தில் அநுராதபுரத்திலிருந்து சிகிரியாவுக்கு மாற்றியதாக மகாவம்சம் கூறுகின்றது. சுமார் 18 வருடம் சிகிரியா தலை நகராக இருந்ததாகவும் அது கூறுகின்றது. ஆனால் மகாவம்சம் கூறும் இந்த விடயம் தவறானது என்று கூறுகின்றார். சிறிலங்கா தொல்பொருள் திணைக்களத்தின் முன்னாள் தலைவரான கலாநிதி ராஜா.டி.சில்வா என்வர்.

சிகிரியா காசியப்பனால் கட்டப்பட்டது என்பதையே மறுக்கும் இவர் காசியப்பனின் ஆட்சிக்குப் பல காலத்துக்கு முன்பாகவே சிகிரியா ஒரு துறவிகள் மடமாக திகழ்ந்தது என்றும் சிகிரியா எப்போதும் சிறிலங்காவின் ராசதானியா இருந்ததில்லை என் றும் கூறுகின்றார். அது மாத்திர மன்றி அநுராதபுரமே தொடர்ச்சியாக 100 சிங்கள அரசர்களின் இராசதானியாக திகழ்ந்ததாகவும் அவர் கூறுகின்றார்.

தாம் ஒரு இராசதானியை அமைக்கும் போது அங்கு முதலில் புத்தரின் புனித தந்தத்துக்கு ஆலயம் அமைக்கும் வழக்கம் காணப்பட்டுள்ளது. இந்த புனித தந்தம் காசியப்பனின் காலத்துக்கு 100 வருடம் முன்னதாகவே சிறிலங்காவுக்கு கொண்டுவரப்பட்டது. ஆகவே காசியப்பனின் இந்த விடயத்தை வழக்கமாக கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் சிகிரியாவில் புனித தந்தத்துக்கு ஆலயம் எழுப்பியதற்காக ஆதாரம் எதுவும் கிடையாது என்கின்றார் கலாநிதி ராஜா.டி.சில்வா ஆகவே மகாவம் சத்தின் கூறப்பட்டவை தவறானவை என்றும் இவர் கூறுகின்றார்.

சரி இந்த விடயத்தை இன்னுமொரு புறமாக நாம் பார்ப்போம் காசியப்பனுக்கு முன்பே சிகிரியா ஸ்தாபிக்கப்பட்டு விட்டது என்றால் அதனைக் கட்டியது யார்? காசியப்பனின் காலத்தில் தான் சிகிரியா பகுதியில் சிங்கள ஆட்சி வந்ததென்றால் அதற்கு முன் இப்படி ஒரு பெரிய கலையம்சம் பொருந்திய விடயத்தை அந்தப் பகுதியில் ஏற்படுத்து மளவுக்கு அங்கு ஆட்சி செலுத்தியவர் அல்லது வாழ்ந்தவர் யார்?

நிச்சயமாக இந்தக் கேள்விக்குப் பதில் காண்பதற்காக அங்கு ஆய்வுகள் நடத்தப்படமாட்டது. என்றும் நம்பலாம் அதற்கு சிங்கள அரசு அனுமதி வழங்காது என்றும் நம்பலாம் ஏனென்றால் இதற்குப் பதில் காணப் புறப்பட்டால் சில வேளை முடிவு தமிழர்களுக்கு சாதகமாக அமைந்து விடலாம் தமிழர்கள் தான் சிகிரியாவை உருவாக்கினார்கள் என்று கூட முடிவு வந்துவிடலாம் ஆகவே அதற்காக ஆய்வுகள் நிச்சயம் நடக்காது அந்த இடத்தில் இனவாதம் புகுந்து எல்லா வரலாற்றையும் குழப்பிவிடும்.

இன்னுமொரு விடயம் ஆய்வாளர்களால் கிளப்பப்பட்டுள்ளது. முதல் சிங்கள மன்னான விஜயனின் வருகைக்குப் பின்னர் அவனது மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்த பந்துகாபயனே அநுராதப்புரத்தை தலைநகராக மாற்றினான் என மகாவம்சம் கூறுகின்றது.

இது தவறு என்று கூறுகின்றார் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தின் தற்போதைய தலைவர் கலாநிதி சிரான் தெரணியகல.

அநுராதபுரத்தில் 1984 முதல் 1990 வரையில் நடத்தப்பட்ட ரேடியோகார்பன் அகழ்வாய்வுகள் மூலம் மகாவம்சம்



குறிப்பிட்ட காலத்துக்கு முன்பே அநுராதபுரம் ஒரு இராசதானியா நிகழ்ந்துள்ளதாக கூறப்படுகின்றது. அப்படியானால் மகாவம்சக் கூற்றுப்படி முதல் சிங்களவனான விஜயனின் வருகைக்கு முன்பே அநுராதபுரம் பெரிய நகரமாக திகழ்ந்திருந்தது என்றால் அங்கு வாழ்ந்த இனம் எது? இந்தக் கேள்விக்குப் பதில் காணப்பட வேண்டும்.

அதேபோல் மகாவம்சம் கூறுவது போல் விஜயன் தான் சிறிலங்காவுக்கு புது நாகரீகத்தை அறிமுகப்படுத்தினார் என்பதுவும் தவறு என்று ஆய்வுகள் கூறுகின்து. விஜயனின் வருகைக்கு முன்பே இலங்கையில் நெற்பயிர்ச் செய்கை

**புனித தந்தம் காசியப்பனின் காலத்துக்கு 100 வருடம் முன்னதாகவே சிறிலங்காவுக்குக் கொண்டு வரப்பட்டது**

முதல் பலதரப்பட்ட விடயங்கள் ஆரம்பமாகிவிட்டதாக பட்டதொம்ப குருவிட்ட குகை ஆய்வுகள் மற்றும்




கொரள பகுதி மனித எச்ச ஆய்வுகள் கூறுகின்றன.

அப்படியானால் யாழ்ப்பாணம் வைபவமாலை, மட்டக்களப்பு மான்மியம், முக்குகர் வரலாறு போன்றவை கூறும் விடங்களின் உண்மைத் தன்மை உறுதியாகின்றது.

மொத்தத்தில் ஆய்வாளர்கள் ஒரு விடயத்தை தற்போதைக்கு ஒத்துக்கொள்ளப் போகிறார்கள் அதாவது சிறிலங்காவின் சரித்திரம் மாற்றி எழுதப்பட வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றார்கள்.கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம் சில வேளை உண்மைகள் வெளியாகலாம்.


******

# உலகத்தை வாழவைக்கும் ஆறு அதிசயங்கள்

(20-ம் நூற்றாண்டின் சிறந்த மனிதராய் "டைம்" பத்திரிகை ஐன்ஸ்டீனைத் தேர்வு செய்து வெளியிட்ட போது எனக்குச் சற்று ஏமாற்றம் தான் ஏற்பட்டது. அவர் மாமேதை என் பதிலோ அவரின் விஞ்ஞான சாதனைகளிலோ எனக்கு பிரமிப்பு உண்டு தான். ஆனால் தன் எளிய கண்டுபிடிப்புகளால் பாதுகாப்பான உணவைக் கோடிக்கணக்கான மனிதர்களுக்கு அளித்த லூயி பாஸ்சர் அல்லவா இந்த இடத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்று தோன்றியது. பரவாயில்லை., அவருக்கு ஒரு ஓரத்தில் 4 வரி "டைம்" பத்திரிகை அளிக்கத்தான் செய்தது. சில சமயம் மிக எளிமையான விஷயங்களே பெரிதினும் பெரிதாய் உலகைக் காப்பாற்றுவதுண்டு.)


### 1. சைக்கிள்

இது போன்ற அற்புதமான ஒரு பொருள் கண்டுபிடிக்கப்பட வில்லை.இன்னமும், சீனாவிலும், இந்தியாவிலும் சைக்கிள் தான் முக்கிய ஊர்தியாய் ஆட்களையும், பொருள்களையும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு



செல்கிறது. பெட்ரோல் விலை ஏறிவிடும் என்ற பயம் இல்லை. நிறுத்த வைக்க பெரிய இடம் தேடி அலைய வேண்டியதில்லை. பழுது பட்டால், டாக்டர் பட்டம் பெற்ற மெக்கானிக்கைத் தேடி அலைய வேண்டியதில்லை. காற்றைச் சுத்தமாய் வைத்திருக்க இது போன்ற ஓர் ஊர்தி வேறு கிடையாது. புகையைக் கக்குவதில்லை. கிட்டத்தட்ட 85 கோடி சைக்கிள்கள் உலகத்தில் இருப்பதாய்க் கணக்கு. இன்னொரு ஆச்சரியமான புள்ளி விவரம். அமெரிக்காவில் தலைக்கு உள்ள சைக்கிள் விகிதம் சீனாவை விட அதிகம். ஆனால் பிரதான ஊர்தியாய்ப் பயன்படுத்துவதில்லை. இதில்லாமல், உடம்புக்கு நல்ல ஆரோக்கியம் தரும் உடற்பயிற்சி அல்லவா இது.

### 2. மின் விசிறி



வெயில் நாளில் ஒரு மின் விசிறியைச் சுழலவிட்டு உட்கார்ந்தால்.. ஆகா, சொர்க்கம் தான். ஆனால், அதற்குப் பதிலாக குளிர்சாதன வசதி என்று ஏர்கண்டிஷனரைப் போட்டால் முடிந்தது கதை.. பெரும் மின் சக்தி சேதம். அதில்லாமல், சி.எஃப்.சி என்கிற நச்சு வாயு வெளிவந்து சுற்றுப்புறச் சூழலை நாசம் செய்யக் காத்துள்ளது. எனவே, எளிமையாகப் பழுது பார்க்கக் கூடிய, பெரிதும் சிக்கலற்ற ஒரு பொருள் மின்விசிறி.

### 3. துணிகள் காயப்போடும் கயிறு

ஊரில் துணி காயப் போடும் கம்பியைப் பார்க்கும் போது அதன் முக்கியத்துவம் எனக்குத் தெரியவில்லை. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில், துணியை உலர்த்துவதற்காக செலவிடும் மின் விரயத்தைப் பார்க்கும் போது தான் இந்த செலவில்லாத உலர்த்தி எவ்வளவு பெரிய பயனுள்ள விஷயம் என்று புரிகிறது. சூரியசக்தியின் மிக எளிமையான ஆனால் மிகப் பயனுள்ள உபயோகம் இது.

### 4. தொலைபேசி




பேச்சைச் சுமந்து செல்லும் கருவி போல வேறு எதுவும் பயனுள்ளதாய்., தனிப்பட்ட ஒரு முக்கியத்துவம் உள்ளதாய் எதுவுமே இன்னும் தோன்ற வில்லை என்று சொல்ல வேண்டும். அந்தரங்க மொழியால் ஒருவருடன் மற்றொருவரைப் பிணைக்கும் ஒரு மாயக் கயிறு இது; கம்ப்யூட்டர், இண்டர்நெட், விடியோ எல்லாம் வந்த பின்னும் கூட இதன் முக்கியத்துவம் மாறாமல் தான் இருக்கிறது.

### 5. பொது நூலகம்



மிகச் சிறப்பான கருத்துகள் எல்லாமே அடிப்படையில் மிக எளிமையானவை தாம் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் பொது. நூலகம் என்கிற கருத்து ஆகும். குறியீட்டளவில், தெரிந்து கொள்ள ஆர்வமுள்ள எவருக்குமே அறிவு எட்டக் கூடிய தூரத்தில் தான் இருக்க வேண்டும் என்கிற உன்னத ஜன நாயகக் கோட்பாட்டின் நடைமுறைப் படுத்தல் இது. இந்த நூலகக் கருத்தை விரிவு படுத்தித் தான், வீடியோ வாடகைக்கு, சைக்கிள் வாடகைக்கு என்று பல கருத்துகள் நடைமுறையிலும் உலா வருகின்றன.

### 6. ஆணுறைகள் மற்றும் கருத்தடைச் சாதனங்கள்



பெண்ணின் விடுதலையின் உண்மையான பரிமாணத்தை உணர, அவர்கள் பிள்ளை பெறும் இயந்திரங்கள் அல்ல என்பதை நிரூபிக்க, அவர்கள் உடம்பின் மீதான கட்டுப்பாடு அவர்கள் கையிலே என்பதாக உருவான ஒரு விடுதலைச் சின்னம் இது.

## காய்கறி மருத்துவம்



பெரும்பான்மையோர் காய்கறிகளைப் போதுமான அளவு உண்பதில்லை. சோற்றை வயிற்றுக்குள் இறக்குவதற்காக காய்கறிகளைச் சிறிது சேர்த்துக் கொள்வது பலருக்கு வழக்கமாயுள்ளது. அது தவறு.

தசை வளர்க்கிற புரதச் சத்தும், வெப்பம் அளிக்கிற மாச் சத்தும் காய்கறிகளில் சற்றுக் குறைவாக இருந்த போதிலும் உடலுக்கு அதிக நன்மை பயக்கும் உப்புச் சத்துகளும், உயிர்ச்சத்துக்களும் மிகுதியாக உள்ளன.

ஆகவே, காய்கறிகளை அதிகமாக உண்ண வேணடும். வெறும் சோற்றை மட்டும் அதிகமாக உண்பது உடல் நலத்துக்கு ஏற்றதன்று.

புதிய காய்கறிகளாக அன்றாடம் வாங்கிச் சமைப்பதே மேலானது. காய்களை வெட்டி நெடுநேரம் காற்றாட விடுவதும் நல்லதன்று. சமைக்கும் பொழுது உடனுக்குடன் காய்களை வெட்டிக் கொள்வதே நலம். காலையிலேயே சாப்பிட்டு அலுவலகத்துக்கு ஓடும் இப்பொழுதுள்ள அவசர வாழ்க்கையில் இது எங்கே முடிகிறது? நறுக்கி வைப்பதை நான் பார்த்திருக்கிறேன். அதன், பிறகு அதில் சத்து எங்கே இருக்கும்? அது. வெறும் வயிற்றை அடைப்பதற்குத்தான் உதவும். வீட்டுத் தாய்மார்கள் இதில் சற்று கவனம் செலுத்த வேண்டும்.

காய்களை வேக வைத்தபின், அடியில் தங்கியிருக்கும் நீரைச் சிலர் கீழே ஊற்றி விடுகின்றனர். அதனால் அதில் தங்கியுள்ள உப்புச் சத்துக்களும், உலோகச் சத்துக்களும் வீணாய்ப் போகின்றன. ஆதலால் அந்த நீரையும் சமையலில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பாகற்காய் போன்ற கசப்புள்ள காய் வெந்த நீரை என்ன செய்வது என்று கேட்கலாம். அளவோடு நீரைச் சேர்த்து வேக வையுங்கள்.

ஒவ்வொரு காயிலும் வெவ்வேறு வகையான உப்புச் சத்துக்களும் உயிர்ச்சத்துக்களும் உள்ளன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு வகை நோய்களைப் போக்கப் பயன்படும்.

உணவாக உண்ணுகின்ற தானிய உணவுகளிலுள்ள சத்துக்களை விட அதிகமாக காய்கறிகளில் [illegible] என்பது நினைவில் இருக்கட்டும்.

## டைட்டானிக் கட் வெட்டிய 26 பேர் கைது!

'டைட்டானிக்' படம் வந்ததுதான் வந்தது. அதனால் 28 முடிதிருத்தும் தொழிலாளர்கள் கைதாக வேண்டி நேர்ந்துவிட்டது.

இது நடந்தது இலங்கையில் அல்ல. ஆப்கானிஸ்தானில். 'டைட்டானிக்' படம் வந்தபிறகு பல பெண்களுக்கு அந்தப் படத்தில் கதாநாயகனாக நடித்த லியனார்டோ டிக்காப்ரியோதான் கனவு நாயகன். அந்தப் படத்தில் அவர் தனது தலையில் செய்திருந்த முடிவெட்டு 'டைட்டானிக் கட்' என்ற பெயரில் ஆண்கள் மத்தியில் பிரபல்யம்.

### தலிபான் அமைப்பு நடவடிக்கை

உலகம் எங்கும் இந்த டைட்டானிக் கட்தான் எல்லா இளைஞர்களின். விருப்பமும். ஆப்கானிஸ்தான் இளைஞர்களுக்கும் இதே விருப்பம் தான். ஆனால் ஆப்கானிஸ்தான் இளைஞர்களுக்கு 'டைட்டானிக் கட்' வெட்டிய 28 முடி திருத்தும் தொழிலாளர்களை ஆப்கானை ஆளும் தலிபான் இராணுவம் கைது செய்துவிட்டது.



இஸ்லாமிய முறைமைகளுக்கு எதிரான 'முடிவெட்டு ஸ்டைலை' இளைஞர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்த முனைந்தார்கள் என்று குற்றம் சாட்டியே இவர்களைக் கைது செய்துள்ளனர்.

'டைட்டானிக்' படத்துக்கும் ஆப்கானிஸ்தானில் தடை விதிக்கப்பட்டுத்தான் உள்ளது: ஆனால் திருட்டு வீடியோவில் இது அங்கு இளைஞர்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துவிட்டது.

கடந்த நவம்பரில்தான் 'டைட்டானிக்' திரைப்படம் வீடியோ டேப்பில் சற்றுத் தாமதமாக ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்தது. அதனையடுத்து 'டைட்டானிக் கப்பலின்' வடிவில் கல்யாணக் கேக்குகள் செய்வதும் அங்கு பிரபல்யமாகிவிட்டது.

யாராவது 'டைட்டானிக் கட்' வெட்டுங்கள் என்று சலூனுக்கு வந்தால் முடி திருத்துபவர்கள் எல்லாம் இப்போது ஓடி ஒழிகின்றார்களாம். அதேவேளை ஏற்கனவே டைட்டானிக் கட் வெட்டிக் கொண்ட இளைஞர்கள் பலர் தலிபான் அமைப்புக்குப் பயந்து அதை மாற்றி வெட்டுவதற்கு ரகசியமாக முடிதிருத்தங்களைத் தேடி அலைகின்றனராம்.

1997 இல் திரையிடப்பட்டது முதல் 'டைட்டானிக்' திரைப்படம். 1.8 பில்லியன் டொலர்களை சம்பாதித்துவிட்டது. ஆனால் 1996 முதல் ஆப்கானில் காபூலை கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தலிபான் அமைப்பினர் இஸ்லாமிய கலாசாரத்தை கடுமையாக அமுல்படுத்தும் நோக்கில் இந்த திரைப்படத்தை அங்கு திரையிட அனுமதிக்கவில்லை.

# அவரின் ரகசியக்குரல் என் செவியில் கிசுகிசுப்பாய்

## தினக்கதிர் சினிமா

இரண்டு விவாகரத்துக்குப் பிறகு தனித்து வாழ்ந்த லிவ் உல்மன் நாடகங்களுடன் சில திரைப்படங்களிலும் நடிக்கலானார்.

உலகப் புகழ் பெற்ற திரைப்பட இயக்குநர் இங்மர் பெர்க்மனை சந்தித்தது உல்மனின் வாழ்வில் ஒரு பெரும் திருப்பமாக அமைந்தது. பெர்சோனா" **(Persona)** படத்திற்கான படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோது இருவரும் நெருங்கி வந்ததை உணர்ந்தனர். ரஷ்யாவுக்கும் ஸ்வீடனுக்கும் இடையில்



கிடந்த ஃபாரோதீவுதான் நெடுங்காலமாக பெர்க்மனின் கனவிலிருந்த நிலப்பரப்பு என்பது அவருக்குப் புரிந்துவிட்டது. அங்கேயே ஒருவீடுகட்டி அவரும் லிவ் உல்மனும் அந்த வீட்டில் வாழத் துவங்கினர். 'லிவ்' இங்கேதான் பிறந்தாள். ஆனால் சீக்கரமே முடிந்து போன ஒரு கதையாகி விட்டது அது.

அது ஐந்து ஆண்டுகளில் முடிந்து போன

## லிவ் உல்மன்

ஒரு காதல் கதை தான். ஆனால் ஐரோப்பாக்கண்டமே அதைப் பற்றிப் பேசியது. ஃபாரோதீவிலிருந்து பெர்க்மனைப் பிரிந்து கையில் குழந்தையுடன் லிவ் உல்மன் திரும்பிய போது விமானத்தளத்தில் அவருடைய நண்பர்களும் ரசிகர்- ரசிகை யருமாக நிறையப் பேர் கூடி இருந்தனர்..
கைகளில் மலர்ச் செண்டுகளையும்
'வாழ்க்கை தொடர்ந்து செல்லும் லிவ்'
'லிவ் உல்மனை வரவேற்கிறோம்'
'நாங்கள் இருக்கிறோம் லிவ்'

என்பது போன்ற வாசகங்கள் எழுதிய அட்டைகளைய்ம் பிடித்தபடி கண்களில் கண்ணீருடன் பலர் நின்றிருந்தனர். பலர் கதறியழுதபடி. மலர்க்கொத்துக்களை ஆட்டிக் கொண்டிருந்தனர்.

லிவ் உல்மனுக்கு அக்காட்சி பெரும் சிரிப்பை உண்டு பண்ணியது. விமானத்தளத்திலேயே எல்லோருடனும் சேர்ந்து பானங்கள் அருந்[illegible] கொண்டாடினார்.

எங்கள் ஃபாரோ **(Faro)** தீவு வாழ்க்கை பற்றி ஏராளம் எழுதி விட்டார்கள். எங்களை முற்றிலும் அறியாத அந்தத் தீவையே பார்த்திராதவர்கள் கூட அத்தியாயம் அத்தியாயமாக எழுதிக் கொட்டியிருக்கிறார்கள்.

ஆனால் அந்த வாழ்க்கை பற்றி என்னிடம் எவரேனும் பேசச் சொல்லும் போது நான் ஊமையாகி விடுகிறேன்.

அப்போது நான் மிகவும் இளையவளாக இருந்ததால் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி நிறையக் கருத்துக்கள் கொண்டவளாக இருந்தேன்.

நாங்களிருவரும் சேர்ந்து வாழ்ந்த அந்த வாழ்க்கை யின் நினைவுத் துகள்களாக புகைப்படங்கள்:
கடற்கரையில் நடந்து-
மணலில் குழந்தைகளைப் போல் காசுகள் புதைத்து-
(பின்னொரு நாளில் வறுமையில் வாடும் போது அல்லது போர் வந்துவிட்டால்- வந்து தோண்டி எடுத்துக் கொள்ளும் திட்டத்துடன்) என் ஒரு சின்ன கற்குவியல்:
-ஒரு கோடை நாளில் நினைவாக- சேர்ந்து விளையாடுவது எப்படி என அறிந்திருந்த ஒரு இருவரின் நினைவாக.

இரவுகள், நெருக்கத்தில் அவரின் ரகசியக் குரல் என் செவியில் கிசுகிசுப்பாய்-

**"எதுவும் பேசிவிடாதே.**
**அப்படியே அமைதியாகக் கிட"-**
**அந்த உறைந்த சில நிமிடங்கள் அவர் எனக்காக ஏக்கத்துடன் "பேசு, லிவ்..... பேசு......"**
**ஒருவருக்கு மற்றவரின் தேவை-**
**எல்லையற்றுப் பரவ**
**ஒருவர் மற்றவருக்கு என்னவாக இருக்க வேண்டும் என்கிற- அளவற்ற எதிர் பார்ப்புடன்**
**ஏதேனும் லேசாய் பிசகி விடும் போது**
**எல்லா சக்தியையும் இழந்தவர்களாகி-**
**பரஸ்பரம் ஒருவர் வாழ்வில் மற்றவர்**
**சீக்கரமே ஊடுருவினோம்.**
**அதே சமயம் ரொம்பத் தாமதமாகவும்.**

முற்று முழுதான பாதுகாப்பை - அரவணைப்பை நான் கோரினேன். அவரை உடையவளாக-அவருக்குடையவளாக இருக்க பெரும் விருப்பம் கொண்டிருந்தேன்.

அவரோ என்னிடம் ஒரு தாயைக் கோரினார். அவரை நோக்கி அகல விரியும் இரு கரங்களை எவ்விதக் குழப்பத்துக்கும் இடமில்லாத கதகதப்பைத் தரவல்ல ஒரு தாயை.

ஒருவேளை அதற்கு முன்னால் நாங்கள் தனித்தனியே அனுபவித்து வந்திருந்த தனிமையிலிருந்து எங்கள் காதல் அரும்பத் துவங்கியிருக்கலாம்.

ஒரே கல்லில் செதுக்கி உருவாக்கப்பட்ட ஒரு பெண்ணே அவருடைய கனவில் இருந்தாள். ஆனால் நானோ அவர் கவனமற்று இருந்தால் சிறுதூசியிலும் துகளிலும் கூட மோதி உடைந்து நொறுங்கிப் போகிறவளாகியிருந்தேன்.

நாங்கள் பிரிந்த போதுதான் நாங்கள் செய்திருந்த தவறுகள் தெளிவாகத் துவங்கின. **(இன்னும் வரும்)**

---

## சாத்தூர், பிரான்ஸ், கோடம்பாக்கம்

இந்த மூன்றுக்கும் என்ன சம்பந்தம் என்று முடியைப் பிய்த்துக்கொள்கிறீர்களா? சாத்தூரில் பிறந்து. பிரான்ஸில் பணிபுரிந்த இளைஞர் ஒருவர் கோடம் பாக்கத்தில் காலடி வைத்துள்ளார். அவர் பெயர் ஈஸ்வர்.

ஓடி விளையாடு தாத்தா என்றொரு படத்தை முன்னொரு காலத்தில் தயாரித்த ராஜாமணி என்ற நடிகரின் மகன். ஜெயவிலாஸ் புரொடக்ஷன்ஸாரின் லவ் சேனல் படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகிறார் இவர். சொந்த ஊர் சாத்தூர். கடந்த பத்து ஆண்டுகளாக பிரான்ஸிலுள்ள ஒரு தனியார் கம்பெனியில் மேலாளர் உத்தியோகம்.

இவர் கோடம்பாக்கத்துக்கு வந்தது ஒரு சுவையான கதை. படத்தின் கதைப்படி இந்தியாவிலிருந்து சென்று பிரான்ஸில் செட்டிலான ஒருவர்தான் கதைக்குத் தேவை. அலையோ அலை என்று அலைந்த இயக்குனர் ஆர்.என். குமரேசன், ஈஸ்வரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார். அவ்வளவுதான்! லபக்-கென அமுக்கிக் கதாநாயகனாக்கிவிட்டார். முறைப்படி சண்டையும் நடனமும் கற்றுள்ள ஈஸ்வர், ஒரு பட்டதாரி. பிரெஞ்சுப் படங்களில் நடிக்க முயற்ச்சி செய்யவில்லையா? என்று கேட்டால், தமிழில்தான் முதன்முதலில் தலையைக் காட்ட வேண்டும் என்று தவமாய்த் தவம் கிடந்தேன் என்கிறார்.

தனது நடிப்பை இயக்குநர் பாராட்டிய சந்தோசத்தில் இருக்கும் ஈஸ்வருக்கு படத்தில் வில்லன் என்று யாரும் இல்லை.

## புன்னகை தேசம்

சூப்பர் வேகத்தில் படங்களைக் கொடுப்பதில் எப்போதுமே சூப்பர்குட் பிலிம்ஸ் சளைப்பதில்லை. விண்ணுக்கும் மண்ணுக்கும், ஆனந்தம், ஷாஜகான் ஆகிய படங்களைத் தொடர்ந்து, ஆர்.பி.சௌத்ரியின் அடுத்த தயாரிப்பு "புன்னகை தேசம்" ஸ்கோப். இப்படத்தில் தருண், குணால், அம்சவர்தன், தாமு ஆகிய நால் வரும் கதாநாயகர்கள். கதாநாயகிகளாக சினேகா, பிரீதா நடிக்கின்றனர். மலேசியா வாசுதேவன், தேவன், நிழல்கள்ரவி, மயில்சாமி, சத்யப்ரியா, விஜயசந்திரிகா, வடிவுக்கரசி மற்றும் பலர் நடிக்கின்றனர்.

ஒளிப்பதிவாளராக அறிமுகம் ஆகிறார் மதி. ஒளிப்பதிவாளர் எஸ். சரவணனிடம் உதவியாளராகப் பணியாற்றியவர் இவர். ரவிசங்கர், கலைக்குமார், பா. விஜய் ஆகியோரின் பாடல்களுக்கு இசையமைக்கிறார் எஸ்.ஏ ராஜ்குமார். கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குநராக அறிமுகமாகிறார் கே.ஷாஜ்ஜகான். இயக்குநர் விக்ரமனின் உதவியாளர். இந்த நால்வர் அணியையாவது நம்பலாமா?



பிரபு தேவா புதுமுகம் ஸ்நேகா.

என்ன விசித்திரமான பெயர்.

## சிம்ரனின் எதிர்பார்ப்பு!

ப்ரியமானவளே படத்தைத் தொடர்ந்து சிம்ரன் எதிர்பார்க்கும் இரண்டு படங்களில் ஒன்று "அழகான நாட்கள்." சுந்தர்.சி இயக்க கார்த்திக் ஹீரோவாக நடித்து வரும் இந்த படத்தில் தனக்கு தரப்பட்டிருக்கும் கேரக்டர் பெரிய அளவில் ரசிகர்களை கவருவது மட்டுமின்றி சினிமா வட்டாரத்திலும் தன்னை பேச வைக்கும் என்று எதிர்பார்க்கிறார் அவர். அதன்காரணமாக அதிக ஈடுபாட்டுடன் நடித்து வரும் சிம்ரன் தமிழில் சில புதுப்படங்கள் புக்கானதைத் தொடர்ந்து தெலுங்கு படங்களை குறைத்து வருகிறார்.

### விஜயகாந்தை இயக்குகிறார் மனோபாலா!

வானவில் படத்தை இயக்கிய மனோபாலா அந்த படத்திற்கு முன்னதாகவே விஜயகாந்தைக் கொண்டு மிகப்பெரிய ஆக்ஷன் மூவி ஒன்றினை இயக்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால் காலம் கைகொடுக்கவில்லை. அப்போதில் இருந்தே தொடர்ந்து முயற்சி எடுத்து வந்ததின் காரணமாக இப்போது விஜயகாந்த் மனோ பாலாவிற்கு கால்ஷீட் கொடுத்திருக்கிறாராம். அதனால் முழு மூச்சாக அடுத்தகட்ட வேலைகளில் இறங்கிவிட்டார் மனோபாலா.

## ப்ரீத்தாவை வற்புறுத்தும் டைரக்டர்கள்!

வந்த வேகத்திலேயே விஜயகாந்த் ரேஞ்சுக்கு நடிக்கும் வாய்ப்புகளை பெற்றவர் ப்ரீத்தா விஜயகுமார். ஆனால் அவரது வேகத்திற்கு இணையான வெற்றிகள் அமையாததால் தொடர்ந்து நடிக்கும் வாய்ப்பினை இழந்தார் அவர். இருப்பினும் விடா முயற்சி காரணமாக தற்போது காதல் சுகமானது, அல்லி அர்ஜுனா படங்களை கைப்பற்றியிருப்பவரை, இதற்கு முன்பு நடித்ததில் இருந்து கிளாமரில் இன்னும் சில படிகள் இறங்கி வருமாறு சில டைரக்டர்கள் வற்புறுத்தி வருகிறார்கள்.



வாஞ்சிநாதனில் விஜயகாந்த்~ரம்யா

பயிற்சிப்பட்டறை
சிறுகதைத் தொடர் - 4

# தாய்

வ. அ. இராசரத்தினம்

என்னடா தம்பி, சுரிக்குள்ள மாட்டிக் கொண்டியா? ஓம், சைக்கிள் முழுக்க நல்லாச் சேறு புடிச்சிற்று. சில்லுக் கம்பிக்குள்ள, மட்காட்டில எல்லா இடத்திலயுமே சேறு நல்லா ஒட்டிக் கொண்டிருக்கு, அதுதான் சைக்கிள் ஸ்ராண்டில வைச்சிற்று கம்புக்குச்சியால சேற்றைத் தட் டுறியா? மெது வாத்தம்பி மெதுவாத்தட்டு. உன்ர வெள்ளை வெளேர் என்றிருக்கிற வேட்டியிலயும் சட்டையிலயும் சேறுபட்ட அசிங்கமா யிருக்கும். அதன் பிறகு நீ பள்ளிக்குப் போ கேலா.

ஆமாம் உன்னைப் பார்த்தா, உன்ர உடுப்பைப் பார்த்தா வாத்தியார் போலத் தான் கிடக்கு. எங்க ஊருக்குப் புதுசா வந் திருக்கியோ? அதுதான் இந்த றோட்டில சுரி இருக்கும் எண்டு தெரியாம ராசா ஏறின குதிரை மாதிரிச் சைக்கிள விட் டுக் கொண் டு வந் திருக் கா. கொட்டியாரத்திலிருந்து தார் றோட்டில ஓடிவந்த மாதிரிச் சந்தியில இருந்து மல்லிகைத்தீவுக்கு போயிரலாம் என்று நெனைச்சியா. சரிதான். மெயின் றோட் சந்தியில் இருந்து மல்லி கைத்தீவு போற வரையுமுள்ள ஒண்ணரைக் கட்டைக்கும் இன்னமும் நல்ல றோட்டுப் போடல்ல. கோட, கொண்டல் காலத்தில இந்த களித்தரை நல்லாக் கெட்டிச்சுப்போயிரும். அந்தக் காலத்தில் கல்றோட்டில ஓடுறமாதிரிச் சைக்கிள் ஓடலாம். ஆனா மழை பெஞ்சா இந்தத் தரை சக்கரை மாதிரிக் கசியத் தொடங் கிரும். ஈரத்தரையில எருமை மாடெல்லாம் போகும். மாட்டுவண்டி போகும். அதுகள் போறதால றோட்டுச் சேறு சந்தணம் மாதிரிக் குழைஞ்சிபோயிரும். அதுவும் எங்க ஊர் மண் நல்ல பசையுள்ள மண், எங்க ஊர் அரிசியும் தான்தம்பி, அதுவும் பசையுள்ள அரிசிதான் சாப்பிட்டவனைப் பிரிய விடாது எங்கள் ஊர் அரிசி அதுமாதிரித்தான் சந்தனக்குழம்பாட்டம் இருக்கிற எங்கள் ஊர்சுரியும் நல்லா ஒட்டிக் கொள்ளும். நீதான் பாரன். உன்ர சைக்கிள் றோதைக்க, சைக்கிள் கம்பிக்க, மட்காட்டில, றோதை அச்சில, புடிச்சிருக்க களி எப்படி ஒட்டிக்கொட்டிருக்கு? சைக்கிளை உருட்டக்கூட ஏலா. ஏலாமத்தான் அப்பிக் கொண்டிருக்கிற சுரியை கழட்டி எடுக்கக்குந்திற்றா. மெதுவாத் தட்டு உன்ர உடுப்பில எல்லாம் சுரிப்பிடும் பாவம்! வெள்ளை வேட்டி எல்லாம் பழுதாப் போயிரும்.

என்னைப் பயித்தியகாரி என்று நெனைக்கிறியா? எனக்கென்ன? நீ எப்படியெண்டான நெனைச்சிக் கொள். எனக் கொண்ணும் கொறைஞ்சி போகாது. ஆனா வாத்தியாரான உனக்குச் சொல்றன் நான் ஒரு வாத்தியார்ர அம்மா, ஓம் மகனே என்ர மகளும் ஒரு வாத்தியார்.

உன்ரசைக்கிளில ஒட்டியிருக்கிற சேற்றையெல்லாம் கம்புக்குச்சியால தட்டிப்பிறகு சைக்கிள்க் கம்பிய சைக்கிள் சட்டத்தை எல் லாம் சுரண்டி, வாய்க்காலில கொண்டு போய்க் கழுவியெடுக்க இன்னமும் எவ்வளவு நேரஞ் செல்லும் உன்ர நல்ல காலம் மழையில்ல வானம் இருக்கிற நெலையைப் பார்த்தா இன் றைக்கு மழையும் வராது. அப்படி வந்தாலும் தைத்தூத்தல் தலைநனையாது என்று சொல் வாங்க. மழைக்குப் பயப்படாமல் சேத்தைத் தட்டி எடு. நீ சேத்தைத் தட்டி எடுக்குமட்டும் நான் உனக்கு ஒரு கதை சொல்றன். எங்க ஊர்க்கதை தான் தம்பி என்ர கதை யுந்தான் சொல்றன் கேக்கிறியா? நீ பேசவேமாட்டா உன்ர சைக்கிளில் ஒட்டிக் கொண்டிருக்கிற சேத்தைக் கிளீன் பண்றவரைக்கும் நீ பேசவே மாட்டா, பேசாட்டி என்ன நான் சொல்ற கதை யைக் கேள்.

⊠⊠⊠⊠

எங்கட மல்லிகைத் தீவு ஊர வளைச்சு ஒரே வயல் வெட்ட, பொரியவெளி, வடிச்சல்சேனை, சக்கரைவெட்ட. சிறுக்குளம் என்று எவ்வளவு வயல்வெட்ட? எல்லாம ரெண் டுபோகம் செய்ற நீர்ப்பாய்ச்சல் பூமி. பெரு வெளிக்குளத்தில் நெறைஞ்சி, மகாவலிகங்கைத் தண்ணி வயலுக்கெல்லாம் பாயும். எங்க ஊர் ஒண்ணும் பெரிய ஊர் இல்ல. வயல் வெட்டைக்கு நடுவில் இருக்கிற திட்டி தான் எங்க ஊர். அந்தத் திட்டியில எல்லா வளவுக்குள்ளயும் தென்னமரம் நிக்கி, பென்னம் பெரிய இலுப்பை மரம் ஒண்ணும் ஊருக்கு நடுவில் றோட்டோரத்தில் இருக்கு. அந்த இலுப்ப மரத்தடியில தான் பள்ளிக் கூடமும் இருக்கு. அந்தப் பள்ளிக்குத்தானே



வாத்தியா ராப்போறே. ஆனால் முதல் நாளிலேயே இப் படிச் சேத்தில் புதைஞ்சிற்றா. பாவம்! இன் னமும் முன்றோதையில் இருக்கிற கழியையே கழற்றி முடியல்ல. எங்க ஊர் மண் பசையுள்ள மண் என்று சொன்னனே தொட்டா ஒட்டிக் கொள்ளும். சைக்கிள் றோதையில் ஒட்டி யிருக்கிற கழியைத்தட்ட எவ்வளவு கஷ்ட மாயிருக்கு? என்ன செய்றது? உன்ர கஷ்ட காலம் சுரண்டு.

எங்க ஊர் வயல் வெட்டைக்கு நடுவில் இருக்குதெண்டல்லவா சொன்னன்? நாய்க்கு நடுச்சமுத்திரத்திலயும் நக்குத் தண்ணிதான் எண்டு சொல்வாங்க. வளைச்சு வளைச்சு வயல் வெளியா இருந்தாலும் எங்க ஊரில எவனுக்கும், சொந்த வயற்காணி இல்ல. இந்த வயற்காணிக்கெல்லாம் சொந்தகாரர்கள் திருக்கிணாமலையிலயும், கிண்ணியாவிலயும், மூதூரிலயுந்தா இருக்காங்க. அவங்கட வயல ஆயத்துக்கு எடுத்துத்தான் எங்க சனம் செய்யும். வயற்காணி எங்கட்ட இல்லாட்டியும் சோத்துப் பஞ்சம் இல்ல. ஆனா வெள்ளாம வெட்டுக் காலத்தில எங்க ஊருக்கு வந்தியெண்டாத் தண்ணி குடிச்சிக்கமாட்டா. ஏனென்டா எல்லாக் கிணத்திடியிலும் தண்ணியெல்லாம் சவுக்கார மணமாத்தான் இருக்கும். அப்படியாப்பட்ட பவிசு எங்க ஊருக்கு.

எவனிட்டயும் வயல்காணி சொந்தமாக இல்லையெண் டல்லவா சொன்னன். என்ர புருசனும் எகுத்தார் ஹாஜியார்ர வயலில பத்து ஏக்கர ஆயத்துக் கெடுத்துத்தான் செய்தார். அந்த ஹாஜியாருக்கு திருக்கிணாமல டிஸ் கிறிக் முத்திலாக்காணி கணக்குப பாக்கேலா. அதனால ஆயக்காசும் கறாராக வாங்கிறதில்ல. எங்க காலம் நல்லாத்தான் போச்சு. மூத்த மகளத்திருக்கிணாமல வேம்படிப்பாடசாலைக் கனுப்பித்தான் படிபக்க வச்சார் என்ர புருஷன். ஆனாத் திடீரென்று அவர் செத்துப் போனார். வயலுக்குப் போய்த் தண்ணீர் கட்டிற்று வந்தவர் மம்பட்டிய ஊட்டுமூலையில் சாத்திற்றுத் திண்ணையில் குந்தினார் நெஞ்சுக்க நோவு தெண்டார். அவ்வளவுதான். வயல்வெட்டைக் குள்ள இருந்த நாரையும் கொக்கும் குருவியும் எங்க ஊர்த் தென்னமரங்களில் இருட்டினப் பொறகு வந்து குந்தக்குள்ள அவர்ர சீவன் போச்சு! அவர் போனப்பிறகு நான்பட்ட பரயத் தைச் சொல்லேலா. அப்ப என்ர மூத்த மகள் எஸ்.எஸ்.சி பாஸ் பண்ணிட்டு வீட்டோட வந்து இருந்தா. அவளுக்குப் பிறகு ஒரு பெடியன் தான் அவனுக்குப்பத்து வயது இருக்கும். அந் தச் சின்னஞ்சிறுவனால வயல் வாய்க்காலப் பார்க்க ஏலுமா? என்ர மகளும் படிச்சிற்றாள். அதனால கையைக்கால ஆட்டமாட்டா. நான் தான் நெல்லைக்குத்தி மாவிடிச்சி எப்படியோ புள்ளைகளைக் காப்பாத்தினன்.

வெள்ளாம வெட்டுக்காலத்தில அப்பஞ் சுடுவன். வெட்டுக் காரங்களுக்கு வாடிக்கையா அப்பம் கொளுக்கட்டை என்று குடுப்பன். வெட்டு முடியிற காலத்தில அப்பம், கொளுக் கட்டை குடுத்த கணக்கால எப்படியும் ஒரு அவணம் நெல்சம்பாதிச்சுடுவன். பெரும்பாடு தான் என்டாலும் சோத்துப்பஞ்சமில்லடா தம்பி, எங்கட ஊர் காவிரிபாயுற நாடுடா மகனே, மாவலிகங்கையைத்தான் நாங்க காவிரி எண்டு சொல்றம். இந்தக் காவிரிபாயுற நாட்டில சோத்துப்பஞ்சம் இருக்குமாடா தம்பி.

அவர் செத்து ரெண்டு வருசத்துக் குப் பொறகு என்ர மகளுக்கு றெயினிங் பள்ளிக்கு முடிவு வந்தது. நான் அசந்து போகல்ல. என்ர கையில் கெட ந்த காப்பு ஜோடிய வித்திற்று மகளுக் குப் புத்தகம். சேலை, சூட்கேஸ் என்று எல்லாச் சாமானும் வாங்கிக் கொடுத்தன். மகள் மட்டக்களப்பு வஸ் ஸில ஏறிற்று றெயினிங் ஸ்கூலுக் குப் போனா. நான் பூரிச்சிப் போனன். ரெண்டுவருஷத்தில என்ர மகள் வாத்தியாரா வந் திடுவா அதுக்குப் பிறகு எனக்கென்ன குறை? காலுக்கு மேல கால் போட்டுக் கொண்டு சாப்பிடுவன்.

றெயினிங் ஸ்கூலுக்குப்போய் மகள் எனக்குக் கடி தம் எழுதினா, அரசாங்கம் மாதம் இரு பது ரூபா அவக்கு எலவன்ஸ் கொடுக்குமாம்.

ஆனா இங்க இருக்கிற செலவுகளுக்கு அந்தக்காசு காணாதாம். மேலதிகமாக மாதம் நாப்பது ரூபாயாவது வேணும் என்று எழுதினா.

நான் எங்க ஊர்த்தலம் வாத்தியாரிட்டச் சொல்லி அவளுக்குப் பதில் எழுதினன். என்ர பதிலில 'மாதம் நாப்பது ரூபாக்காசு எனக்குப் பெரிய பொருட்டில்ல மகள், என்ர சதுரத்தச் சாறாப்புழிஞ்சென்றாலும் நான் உனக்குப் பணம் அனுப்புவன். நீ கவலைப்படாமற் கவனமாப் படிபுள்ள' என்று எடுதச் சொன்னன்.

கூலிக்குக் குத்தி, கோழிவளர்த்து, அப்பஞ்சுட்டு வித்து எப்படியெபடியெல்லாமோ சம் பாதித்து மகளுக்குக் காசு அனுப்பினன். மக ளும் கவனமாகத்தான் படித்தாள். ரெண்டு வருஷம் முடியறதுக்கு இன்னமும் ரெண்டுமா சந்தான் இருக்கு, அப்ப மகள் எனக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினா 'இந்த மாதத்தில எனக்குக் கடைசிப்பரீட்சையிருக்கு, அந்த வைபவத்திக்கு உடுக்கிறதுக்கு என்னட்ட நல்ல சேல இல்ல. சேல ஒண்ணு நல்லதா வாங்கவேணும் எனக்குக் காசு நூறு ரூபா எப்படியும் அனுப்புங்க அம்மா'.

நான் தெகைச்சிப்போனன் கார்த்திகை மாசத்து அடைமழைக் காலம். என்ர கையில மடியில ஒரு காசும் இல்ல, ஊரில ஒரு தொழிலும் இல்ல, எல்லாரும் தைப்பொறந்த் பொறகு வாற வெள்ளாம வெட்ட நம்பி கடன்பட்டுத் தின்ற பஞ்சகாலம். இந்தப் பஞ்ச காலத்தில எப்படி நான் நூறு ரூபாய் பெரட்றது, எதை நம்பிக்கடன் வாங்கிறது? யோசிச்சு யோசிச்சு அசந்து போன நான், வெள்ளாம வெட்டுக்கலத்த நம்பி அறாவட்டிற்குக் கடன் பட்டன். என்ர காதுத்தோட்டையும் விற்றன். எப்படியோ நூறு ரூபா புரட்டிற்றன். இதுக்குள்ள கெதியாக் காசனுப்பச் சொல்லி மகளிட்ட இருந்து அடுத்த கடிதமும் வந்தது.

காசைப்புரட்டிய நான் காசைத்தபால்ல அனுப்பாம நேரில கொண்டுபோய் மகளிட்டக் குடுப்பம் எண்டு எண்ணிக் கொண்டு பஸ் ஏறுறன். மல்லிகைத்தீவுச் சந்தியில் இருந்து மட்டக்களப்புக்கு ரெண்டரை ரூபா தான் வஸ் ஸ்சுக்கு, இரண்டைக்குப்போய் நாளைக்கு வாற தானே பத்து ரூபாககாசு எனக்கு மாலோகமாக் காணும் என்றெண்ணிக் கொண்டு பஸ் ஏறினன். என்ற பின் றோதையில ஒட்டியிருந்த கழியையும் கழட்டிற்றியா? அச்சிலயும் மட்காட்டிலயும் ஒட்டிக் கொண்டிருக்கிறதையும் கழற்று.

( 11 பக்கம் பார்க்க........... )


## தினக்கதிர் ஆதரவுடன்.........

**மண்முனை வடக்குப் பிரதேச செயலகம் ஒழுங்கு செய்துள்ள**

**"சிறுகதைப் பயிற்சிப் பட்டறை"**

**விண்ணப்பப்படிவம்**

1. முழுப்பெயர்:-..............................................
2. முகவரி:-..............................................
3. பிரதேச செயலகம்:-..............................................
4. கிராம சேவகர் பிரிவு:-..............................................
5. பிறந்த திகதி:-..............................................
(01.03.2001 அன்று) வருடம்:-............ மாதம்:-............ நாள்:-.........
6. கல்வி' பயிலும் பாடசாலை/தொழில் செய்யும் இடம்:-..............................................

மேற் கூறிய யாவும் உண்மையென உறுதிப்படுத்துகிறேன்.

..............................
கையொப்பம்

திகதி:......................

தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிறுகதைப் பயிற்சிப் பட்டறை-2001" என எழுதப்படவேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:-**
**கலாசார உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம்,**
**மண்முனை வடக்கு,**
**மட்டக்களப்பு.**

** இப்பகுதியில் வெளியாகும் கதைகளை சேகரித்து வைக்கவும்*

# சிறுவர் மலர்

## எஜமானனின் உத்தரவு

முல்லா பெரிய பணக்காரர் ஒருவரிடம் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் மூன்று முறை கடை வீதிக்குப் போய் வந்தார் முல்லா. எஜமானன், 'ஏன் போனாய்?' என்று விசாரித்தான்.

**முல்லாவின் கதை படியுங்கள்**

'முதல் முறை கோதுமை வாங்கப் போனேன். இரண்டாம் முறை முட்டை வாங்கப் போனேன்,' என்று விளக்கினார்.

கோபம் வந்தது எஜமானுக்கு, 'என்னென்ன தேவையிருக்கும் என்று யோசித்து எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாக வாங்கிக் கொண்டு வரவேண்டும்!' என்று உத்தரவிட்டான்.

எஜமானுக்கு உடல் நலமில்லை. முல்லாவை அழைத்து, 'மருத்துவரை அழைத்துவா. எனக்கு உடல் நலமில்லை!' என்று கட்டளை இட்டான்.

முல்லா வெளியே போனார். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு மூன்று பேருடன் திரும்பினார். அவருள் ஒருவரைக் காட்டி, 'இவர் மருத்துவர்' என்றார். 'மற்ற இருவர் யார்?'

'ஒருவர் வழக்கறிஞர் ஒருவேளை உங்கள் உடல் நிலை குணமாகாமல் மோசமானால் உயில் எழுதுவீர்களே, அதற்காக அழைத்து வந்தேன். மற்றவர் ஈமச் சடங்கு செய்பவர். நீங்கள் குணமடையாமல் இறந்துவிட்டால், அடக்கம் செய்ய வேண்டுமே, அதற்காக அழைத்து வந்தேன். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு முறை போகாமல் ஒட்டு மொத்தமாகவே அழைத்து வந்தேன்! என்றார் முல்லா.




## அறிந்து கொள்ளுங்கள்

### மின்மினிப் பூச்சிகள்

இருள் சூழ்ந்திருக்கும் போது சில பூச்சிகள் மினுக்கென்று ஒளி வீசுவதைப் பார்த்திருக்கலாம். இவை மின்மினிப் பூச்சிகள் எனப்படும். வயிற்றில் அமைந்துள்ள விசேட உறுப்புக்களால் வெப்பம் இல்லாமல் ஒளியை மட்டும் இவை வெளியிடும். ஏடிபி என்ற என்சைம் மக்னீசியத்துடன் சேர்ந்த லூயி.'. பெரின் என்ற இரசாயனப் பொருள் ஒக்சிகரணமாகும். போது ஒளியுண்டாகிறது.

இந்த ஒளியைப் பூச்சியால் கட்டுப்படுத்த முடியும். வெவ்வேறு விதமான ஒளியை உண்டாக்கும் பலவகைப் பூச்சிகள் உள்ளன. இணையைக் கவர்வதற்காகவே இவ்வாறு ஒளி விடுகிறது. பெரும்பாலானவை கரும்பழுப்பு அல்லது கருப்பு நிறம். தொண்டைப் பகுதி பிரகாசமான நிறத்தில் இருக்கும். 4 முதல்10 மி.மீ வரை இதன் நீளம் இருக்கும். பறவைகள் இப்பூச்சிகளைத் தின்பது இல்லை. சிலவகைப்



பூச்சிகள் முட்டை, புழு, கூட்டுப் புழுக்கள், நத்தை, மண்புழுக்களை உண்டு வளர்கின்றன. வளர்ந்த பூச்சிகள் உண்பதேயில்லை. வெப்பப் பகுதிகளிலேயே காணப்படும். இவை இரவில் தான் சஞ்சரிக்கும். பகல் நேரங்களில் செடிகளில் தங்கி ஓய்வெடுக்கும். சில வகைப் பூச்சிகளில் பெண்ணுக்கு இறக்கை கிடையாது.

## கண்டுபிடித்தவர்கள்

உற்பத்திப் பொருட்களின் விற்பனையைக் அதிகரிக்க, சுவரில் விளம்பரம் செய்யும் முறையைக் கண்டு பிடித்துப் பயன்படுத்தியவர்கள்-
**கிரேக்கர்கள்.**

கார்டூன் திரைப்படத்தைக் கண்டு பிடித்தவர்கள்-
**அமெரிக்கர்கள்.**

செய்தித் தாள்களைக் கண்டுபிடித்து வெளியிட்டவர்கள்
**சீனர்கள்.**

பாலே நடனக் கலையைக் கண்டு பிடித்துப் பயன்படுத்தியவர்கள்-
**பிரெஞ்சுக்காரர்கள்.**

ஆண்கள் அணியும் சட்டையைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தியவர்கள்-
**அவுஸ்திரேலியர்.**

சட்டைகளில் பொத்தான் வைத்துத் தைக்கும் முறையை அறிமுகப்படுத்தியவர்கள்-
**சீனர்கள்.**

## தாய்.....................

**(10ம் பக்கத் தொடர்ச்சி...)**

அதுக்குள்ள என்ர கதையும் முடிஞ்சிடும். பஸ்ஸில ஏறினனா? பத்து மணிக்கு பஸ் ஏறின நான் மூணு துறையையும் கடந்து பின்னேரம் ஐஞ்சு மணிபோலத்தான் புளியந் தீவுப்பாலத்தடியில ஸ்ராண்டில எறங்கினன். என்ர கையில சீலைப் பைக்குள்ள ஒரு சோத்துப்பார்சல், பஸ்ஏற முதல் வாய்க்காலில வெள்ளத்தில எதிரேறின பணையான் மீன் ஊருக்கு வந்தது. அதில வாங்கிச் சிலதைப் பொரிச்சுக் குழம்பும் ஆக்கி சோறு கட்டிப்போனன். புழுங்கரிசில கட்டுச்சோறு கட்டினன். அந்தச் சோத்து முடிச்சோடதான் நான் கேட்டுக்கேட்டு றெயினிங் ஸ்கூல நோக்கிப் போறன். சிங்கள வாடியில ஆஸ்பத்திரிக்குக்கிட்ட போறன், கடைசியாக் காவியடிச்ச அந்தக் கட்டிடத்தைக் கண்டு பிடிச்சன்!

கட்டிடத்துக்குள்ள ஏறி விறாந்தையில இருந்த மணிய அடிச்சன். ஒருத்தி வந்து கேட்டா. நான் மகள்ர பேரச்சொல்லி, அவளப் பார்க்க வந்திருக்கன் என்று சொன்னன். அந்தப் பெண் உள்ளே போனாள். நான் விறாந்தையில கிடந்த வாங்கில இருக்கன், கொஞ்ச நேரத்தால என்ர மகள் வந்தா அவ இன்னொருத்தியோட வந்தா. அவளோட படிக்கிறவளாயிருக்கும். ஆனா அவளைவிடவும் என்ரமகள் அழகி. கையால குத்தின பச்சரிசித் தவிட்டு நிறம், ஆனா உதடெல்லாம் எப்பவுமே அவளுக்குச் சிவந்திருக்கும். நீளமா ஒடிசலா இருப்பா. நடக்கக்குள்ள இடுப்பு முறிஞ்சு போயிருமோ என்று நினைக்கவேணும், ஆனா பெருவெளிக் குளத்துக்குள்ள பொழுது படக்குள்ள கூம்பி நிக்கிற தாமரைப்பூபோல அவள் தாவணிக்கு மேலால நெஞ்சு நிமிர்ந்திருக்கும். என்ர பிள்ளையைப் பாத்தவன் சீதனம் இல்லாமலேயே அவளைக் கொண்டு போய்விடுவான் என நான் எண்ணுவன்.

அவள் என்னைக் கண்டதும் அவள்ர முகம் நல்லால்ல, ஊரில இருந்து அம்மா வந்திருக்காளே என்று அவசிரிக்கவும் இல்ல, முகத்தை உம்மெண்டுவச்சிக் கொண்டு வந்தா.

அவளைக் கண்டு நான் சிரிச்சன்.

'ஏன் நீ வந்தனி? என்று எரிஞ்சு விழுந்தா அவ. இதுக்கு நான் என்னத்தைச் சொல்றது? என் சேலைத்தலைப்ப முடிச்ச அவிழ்த்து நூறுரூபாயையும் கொடுத்தன். நாலாமடிச்சு முடிஞ்சி வைச்சிருந்த பத்துப் பத்து ரூபாத் தாள்கள். அத வாங்கின உடன மகள் திரும்பிக் கொண்டு நடந்தா.

நான் அவ்விடத்திலேயே தெகைப்பூண்ட மிரிச்சவள் போல நிக்கன். மகள் போகக்குள்ள தன்னோட வந்தவளிட்டச் சொல்றா 'எங்கம்மா இந்த வேலைக்காரிட்டக் காசு குடுத்து அனுப்பியிருக்கா'

எனக்கு பூமிபிளந்தது என்னை விழுங்கினாப் போல இருக்கு. அதுக்குப் பிறகு நான் ஊருக்கு வரல்ல. நேற்றுத்தான் வந்தன். என்னை பைத்தியம் என்று ஊருக்க சொல்றாங்க மகனே! நீ சொல்லுடா எனக்குப் பைத்திய மாடா?

உன் சைக்கிளில ஒட்டியிருக்கிற கழியெல்லாம் கழட்டிற்றியா? அப்ப இனி நீ போப்போறா.

என்ரகதையும் முடிஞ்சிடா மகனே. ஏண்டா உனக்கும் ஒரு அம்மா இருப்பா நீயும் ஒரு வாத்தியார் என்னைப் போல உன்ர அம்மாவையும் நீ பைத்தியகாரியாக் கிவிடாத போய் வாடாமகனே போ. நானும் போறன். என்ர சாதிசனம் ஈச்சிலம்பத்தையிலையும் இருக்கு. பஸ் வந்தோடன நானும் போகப் போறன் அங்க.

வரட்டா மகனே.

☒☒☒☒

---

## ஊர்வலம்......................

### கிழக்கின் புகழ் பெற்ற பண்டைக்கால

# களஞ்சியத் துறையாம் சேனைக்குடியிருப்பு

**புனித தலங்கள் தகர்க்கப்படல்:**

கலி பிறந்து 2860 இல் தொடங்கி 3020 வரை இப்பகுதி புகழ் மிகுந்த பகுதியாக விளங்கியது. பருதிகுல இரகு வம்ச குடி அரசன் ஒருவன் கிராம வழிபாட்டை பரப்பும் நோக்குடன் அங்கிருந்த சைவாலயங்களினை இடித்து உடைத்து விட்டு வைஷ்ணவ ஆலயங்களினைக் கட்டினான்.

இவ்வாலயம் ஐம்பது வருடங்களின் பின் ஏற்பட்ட ஓர் இயற்கை அழிவிலே அழிந்து விட அங்கிருந்து கம்மியர்கள் தனித்துவமான ஓர் பத்திரகாளியம்மன் கோயிலினைக் கட்டி குலத்திலே சூரிய அடப்பன் குடியில் நாகப்ப அடப்பனார் ஒரு சம்மான் இனத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்து சம்மாந்துறையில் காளி கோவிலை அமைத்து வழிபட்டனர்.

ஐ.எல்.ஜலீல்

**கிறிஸ்தவ மதப்பரம்பல்:**

கிறிஸ்தவ மதத்தினை இலங்கையில் பரப்புவதற்காகவும், இலங்கையினைக் கைப்பற்றுவதற்காகவும் போர்த்துக்கேயரிடமிருந்து இலங்கையை கைப்பற்றிய ஒல்லாந்தர்கள் மட்டக்களப்பின் விஷேட படைத்தளபதியாக பஸ்கோல் முதலி எனும் ஒரு மத வெறியனை நியமித்திருந்தார்கள். அவன் 1747 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பண்ணையிலிருந்து முப்பது வெறிபிடித்த படை வீரர்களோடு மட்டக்களப்பிலே வந்து தங்கினான். 1749ஆம் ஆண்டு சொறிக்கல்முனையைக் கைப்பற்றி அங்கிருந்த பத்திரகாளி அம்மன் ஆலயத்தை இடித்துத் தள்ளி விட்டு அங்கிருந்த பெறுமதி மிக்கதுமான தங்கத்திலான அடையலையும், (பட்டறை) தங்கத்திலான விசுறுபாழையையும், அடையலில் பதித்த பெறுமதி மிக்க மாணிக்கக் கல்லையும் களவாடிச் சென்றான். அங்கிருந்த மக்கள், சைவ மக்கள் பஸ்கோல் முதலியின் கொடுமையால் மதம் மாறினர்.

அங்கிருந்து கம்மியர்கள் அன்னமலை எனும் இடத்தில் குடி புகுந்தனர். அந்த வேளையில் அழிக்கப்பட்ட ஆலயம் 1782 ஆம் ஆண்டு வரை மாற்று இடமின்றி மறைந்து கிடந்தன.

இந்தியாவின் காஷ்மீரக் குதிரைப் படைத் தளபதியாக இருந்த கெஜபுரி எனும் பால்குடிவாவாவுக்குக் கிடைத்த தரிசனத்தின் மூலமாக அன்ணாமலையிலிருந்த ஐம்பொன்னினாலான அடையலும், முக்கோண வட்டமான மாணிக்கக்கல்லையும் கொண்டு தரிசனத்தில் காட்டிய இடத்தை அதாவது அன்ணாமலையிலிருந்து துறை நீலாவணை வாவியினூடாக கிட்டங்கித் துறைக்கு வந்து சேனைக் குடியிருப்பின் வடபால் நீர் நிலையும், பெரு மரங்களும் சூழ்ந்த ஓர் இடத்தில் உள்ள அடையாளத்தினைக் கண்டு அங்கேயே அம்பாளை வைத்து பெருமிதமடைந்தனர். அம்மாளை வழிபாடு செய்வதற்காக கம்மியர் குலத்தின் அக்கசாலைக் கணபதி எனும் ஒரு கொல்லனை நியமித்து வழிபட ஏற்பாடு செய்ததும், அவனுக்கு உதவியாக நாற்பட்டி முனையிலிருந்த கந்தக் குட்டி போடியாரின் படதுக்கு படகோட்டியான மானாகப் போடி, வீர மாணிக்கன் ஆகிய இருவரையும் அழைத்து கொத்துப் பந்தலினால் போடப்பட்ட பந்தல், மஞ்சள் துணியால் நாற்புறமும் வழிவிட்டு கட்டினான்.



பால்குடிவாவா அக்கசாலைக் கணபதியை முதலில் வடக்கு பக்கமாக அழைத்து இவ்வடிவத்துக்குப் பூசை செய்வீரா எனக் கேட்க பயங்கர வடிவமாய் இருந்த அந்தத் தோற்றத்தினைக் கண்டு அஞ்சி என்னால் முடியாது என்றான்.


பின்னர் கிழக்குப் பக்கமாக அழைத்து இதற்குப் பூசை செய்வீரா? எனச் சொல்ல வாலைப் பெண்ணாக அழகில் மயங்கும் நிலையில் என்னால் செய்ய முடியாது என்றார். அதன் பின்னர் தென் திசை பக்கமாக அழைத்து இதற்குப் பூசை செய்வீரா? எனக் கேட்க ஆறு வயது குழந்தையாய் காட்சியளித்த அம்மணியின் தோற்றம் கண்டு உள்ளம் நெகிழ்ந்து அத்தாய்க்குப் பூசை செய்யச் சம்மதித்தார். அதன்படியே இன்றும் ஏனைய காளி கோயில்கள் வட பக்கமாகவும், சேனைக்குடியிருப்பிலுள்ள காளி கோயில் மட்டும் தென் பக்கமாகவும் அமைந்துள்ளது. கம்மியர்கள் பூசை செய்யும் மரபும் இன்று வரைக்கும் பேணப்படுகிறது. பால் கடிபாவாவினால் 1848ம் ஆண்டு இக் கோயில் கும்பாயிஷேகம் செய்யப்பட்டது.

நற்பிட்டிமுனையின் பிள்ளையார் கோயில் பாராமரிப்பிலுள்ள பூசை செய்யும் அம்மனின் முகக் களைக்கு பாம்புகளே இன்றுவரை காவலாய் உள்ளன.

ஆண்டு தோறும் நவராத்திரி ஆரம்பத்தில் திருக்கதவு திறந்து விஜயதசமி அன்று நிறைவு பெறும் காட்சி மிகச் சிறப்புடையதாக அமையும்.

பல வன்செயல்களினால் எத்தனையோ ஆலயங்கள் பாதிப்புற்றும் உள்ளது. ஆனால் இதுவரை எவ்வித மான பாதிப்புக்கும் உள்ளாகாத ஒரு பழம் பதியாக இன்றுவரை அருள் பாலிக்கின்றது. ஆண்டுக்கொரு முறையே அம்மனின் திருக்கதவு திறக்கப்படுகின்றது. ஏனைய வெள்ளி, செவ்வாய் போன்ற நாட்களில் அடியார்கள் பொங்கல் வழிபாடுகள் வெளி மண்டலம் செய்வர்.

**(இன்னும் வரும்....)**



கவிஞர் பிரபஞ்சப்பிரியன் எழுதும்-

நான்
எது கேட்டாலும்
வெட்கத்தையே
தருகிறாயே....

வெட்கத்தைக்
கேட்டால்
என்ன
தருவாய்?

சங்கர்

# காதல் வெண்ணிலா கையில் சேருமா.......?

அத்தியாயம்-35.

நமது தொடர்கதை

''டீ'' போட்டு வந்த பவித்ராவும் சுகந்தியும் ரதனும் முன்ஹோலில் அமர்ந்து கதைக்கத் தொடங்கினர்.

சிறிது நேரம் அவர்களுடன் உரையாடிவிட்டு விடை பெற்றுக் கொண்ட ரதன் தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு தனது ஹொஸ்டல் வாசலுக்கு வந்தவன் தான் பைன்ஆர்ட்ஸ் எக்ஸ்ஸாமுக்காகப் படிக்க வேணும் என பல்கலைக்கழக லைபிரரியில் இருந்து எடுத்த புத்தகத்தைத் தவறுதலாக லேடிஸ் ஹொஸ்டலில் வைத்து விட்டு வந்தது தெரிந்தது. மீண்டும் தனது சைக்கிளைத் திருப்பி லேடிஸ் ஹொஸ்டலுக்கு வந்தவன் உள்ளே நுழைந்த போதுதான் அமர்ந்திருந்த இடத்தில் தான் தவறுதலாக வைத்து விட் டுச்சென்ற புத்தகத்தை எடுத்து வாசித்துக் கொண்டிருந்த நிவேதாவைக் கண்டான்.

நான் வந்திருந்த போது 'தலையிடி' என தன்னுடன் கதைப்பதைத் தவிர்த்துக் கொண்ட அவள் தற்போது எதுவித சலனமும் இன்றி புத்தகம் வாசித்துக் கொண்டிருப்பதைப் பார்க்க ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"என்ன நிவேதா.... தலையிடி எல்லாம்.... சரியா



யிட்டு போல.....'' அவனது குரலைக் கேட்டதும் நிவேதா திடுக்கிட்டவளைப் போல எழுந்து கொண்டாள்.

''இப்ப கொஞ்சம் பரவாயில்ல ரதன்'' அவளது பேச்சு போலித்தனமாகப் பட்டது அவனுக்கு. உமக்கு உண்மையில் தலையிடிதானா.... அல்லது நான் தான் உமக்கு தலையிடியா.....'' ரதன் சற்று கோபத்துடனேயே கேட்டான்.

"இல்ல ரதன்..... எனக்கு தலையிடிதான்... அவள் மேலே சொல்ல அவன் விடவில்லை. ''எனக்கு தெரியும் நிவேதா... நீர் எதையோ நினைத்து எதையோ செய்துகொண்டிருக்கிறீர்...... அந்த புத்தகத்தை விட்டுப் போயிட்டன் தாறீரா......'' அவளிடம் இருந்த புத்தகத்தை வாங்கிக்கொண்டு '' "நான் வாறன்.......'' என மொட்டையாகச் சொல்லி விட்டு தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த நிவேதா தனது ரூமுக்குல் ஓடிச் சென்று கட்டிலில் விழுந்து விம்மத் தொடங்கினாள்.

அவள் அழுவதைக் கண்ட பவித்ரா வெளியே எட்டிப்பார்க்க ரதன் போவது தெரிந்தது.

அங்கு ஏதோ நடந்திருக்கு என்பது அவளுக்குப் புரிந்தது.

''ஏண்டி நிவேதா என்ன நடந்தது?'' என விசாரிக்கச் சென்ற சுகந்தியைப் பார்த்து கண்ணைக் காட்டி விட்டு அவளையும் அழைத்துக் கொண்டு ரூமுக்கு வெளியே வந்தாள் பவித்ரா.

உள்ளே தனியனாக விடப்பட்ட நிவேதா குலுங்கிக் குலுங்கி அழுதாள். ரதனின் மனசை வேதனைப்படுத்தியது அவளுக்கு என்னவோ செய்தது. தனது புறக்கணிப்புகள் மூலம் அவனை மனம் மாற்ச் செய்து தன் மீது வெறுப்புக் கொள்ள வைத்து எப்படியாவது அவனை விமலாவுடன் சேர்த்து விடவேண்டும் என்ற தனது எண்ணம் நிறைவேறாது விடுமோ என்ற அச்சம் அவளுள் எழுந்தது.

இன்னும் சில நாட்கள் தான் அவர்களது பல்கலைக்கழக வாழ்க்கை அதன் பின்பு தத்தம் சொந்த ஊரை நோக்கிய பயணம்.... திசை மாறும் வாழ்க்கை முனைப்புகள்..

ரதனை ஊதாசீனப் படுத்தி அவனுடன் கதைப்பதைத் தவிர்த்து அவனை சிந்திக்க வைத்த பல சம்பவங்கள் யோசிக்க யோசிக்க நிவேதாவால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை.

எவ்வளவு இனிமையாக சென்று கொண்டிருந்த அவர்கள் காதல் வாழ்க்கையில் தனக்கு நேர்ந்த அவலம் ஒரு புயலாக மாறிப் போனதையும் அதனைத் தொடர்ந்து விமலாவின் காதல் ஒரு பூகம்பமாக மாறி தன் மனதில் கொந்தளிப்பை ஏற்படுத்துவதையும் அவளால் உணர முடிந்தது.

தனது ஹொஸ்டலுக்கு வந்த ரதன் தனது பேனாவையும் புத்தகத்தையும் மேசையில் போட்டவன் ஒரு வெள்ளைப் பேப்பரை எடுத்து எழுதத் தொடங்கினான்.

செல்வி விமலா அவர்களுக்கு.....

தாங்கள் எனது 'பேக்குக்குள்' வைத்த கடிதம் வாசிக்கக் கிடைத்தது. அதற்கு உங்களுக்கு உடனடியாக பதில் அனுப்பாததை வைத்தே நீங்கள் ஒரு அனுமானத்திற்கு வந்திருக்க முடி யும்.

தாங்கள் என் மீது தங்களது காதலை வெளிப்படுத்தி எழுதியிருந்தீர்கள். ஆனால் உங்களுக்கு முன்னரே நான் வேறு ஒருத்தியை காதலிக்கத் தொடங்கிவிட்டேன். அவள் வேறு யாருமல்ல, உங்களது தோழி நிவேதா தான். நாம் இருவரும் சந்தித்துக் கொண்டதில் இருந்து இருவரும் காதலிக்கத் தொடங்கிவிட்டோம். இன்று அவள் இல்லாவிட்டால் நான் இல்லை, நான் இல்லாவிட்டால் அவள் இல்லை என்ற ஒரு நிலைக்கு வந்துவிட்டோம்.

எனவே, தாங்கள் தொடர்ந்தும் என் மீது நேசம் கொண்டு தங்கள் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ள வேண்டாம். என்றும் நாம் நல்ல நண்பர்களாகவே இருப்போம்.

தங்கள் மனதில் என்னைப் பற்றிய நினைவுகள் எழும் வகையில் எனது செயற்பாடுகள் அமைந்திருந்தால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

நட்புடன் - ஜெயரதன்.

கடிதத்தை எழுதி முடித்ததும் அதனை உடனடியாக விமலாவின் முகவரிக்கு அனுப்பிவிட்டு வந்து கட்டிலில் அமரவும் தான் அவனுக்கு நிம்மதியாக இருந்தது.

(அடுத்த வாரம் தொடரும்..)

---

# ஸெர்யோஷா

'நான் 'தயவு செய்து' என்று சொல்லாவிட்டால் சந்தோஷமில்லாமல் கொடுப்பாயா?"

''கொடுக்கவே மாட்டேன்."

ஆகட்டும், தயவு செய்து. ஸெர்யோஷா பெரியவர்களிடம் ''தயவு செய்து'' என்று சொல்லலானான். எவ்வளவு-தான் விந்தையான குணங்கள் இருந்தாலும் பெரியவர்கள் பலசாலிகள். குழந்தைகள் மேல் ஆட்சி செலுத்துகிறார்கள். அவர்கள் ஸெர்யோஷா



வுக்கு பென்சில் கொடுக்கலாம், அல்லது கொடுக்காமல் இருக்கலாம்- அவர்களுக்குத் தோன்றுவதைப் பொறுத்து.

இந்த மாதிரி வெட்டி விஷயங்கள் பற்றிக் கொரஷ்தெல்யோவ் கவலைப்படுவதில்லை. ஸெர்யோஷா ''தயவுசெய்து'' என்று சொன்னானா இல்லையா என்பதை அவன் கவனிப்பது கூட இல்லை.

ஸெர்யோஷா தனது மூலையில் முனைந்திருக்கிறான், அவனை அதிலிருந்து கலைப்பது கூடாது என்றால் கொரஷ்தெல்யோவ் அவனுடைய விளையாட்டை ஒரு போதும் குலைப்பதில்லை, லுக்யானிச் வேலையிலிருந்து திரும்பியதும் சொல்வது போல, ''எங்கே, இப்படிவா, நான் உன்னை முத்தமிடுகிறேன்." என்று சொல்வதில்லை. லுக்யானிச் உரப்பான தாடியால் ஸெர்யோஷாவை முத்தமிட்டு விட்டு அவனுக்குச் சாக்லேட் அல்லது ஆப்பிள் பழம் கொடுப்பான். நன்றி, ஆனால் பையனைக் கட்டாயமாக முத்தமிடுவானேன், விளையாட்டிலிருந்து கலைப்பானேன்? விளையாட்டு ஆப்பிளயை விட முக்கியமானது. ஆப்பிளை ஸெர்யோஷா அப்புறம் தின்றிருப்பானே.

வீட்டுக்குப் பல்வகை ஆட்கள், பெரும்பாலும் கொரஸ்தெல்யோவைப் பார்ப்பதற்காக, வருவார்கள். எல்லோரையும் விட அடிக்கடி வருவார் தோல்யா மாமா. அவர் வாலிபர், அழகர். அவருக்கு நீண்ட கரிய இமைமயிர்களும் வெண்மையான பற்களும் சங்கோசப் புன்னகையும் உண்டு. ஸெர்யோஷாவுக்கு அவர் மேல் மரியாதை, ஆர்வம். ஏனென்றால் தோல்யா மாமா செய்யுள் இயற்றுவார். புதிய செய்யுள்களைப் படித்துக் காட்டும்படி அவரை வற்புறுத்தி வேண்டுவார்கள். முதலில் அவர் கூச்சப்படுவார், மறுப்பார். அப்புறம் எழுந்திருந்து ஒரு புறமாகப் போய் நின்றுகொண்டு செய்யுள்களை மனப்பாடமாக ஒப்பிப்பார். அவர் செய்யுள் எழுதாத விஷயமே கிடையாது. போரைப்பற்றியும், சமாதானத்தைப் பற்றியும், கூட்டுப் பண்ணைகளைப் பற்றியும், பாசிஸ்டுகளைப் பற்றியும், நீல விழிகள் உள்ள எவளோ பெண்ணைப் பற்றியும் (இவளை அவர் எதிர் பார்த்துக் காத்திருக்கிறார், காத்திருக்கிறார். ஆனால் அவள் வருகிற தாய்க் காணோம்) எழுதுவார். அருமையான செய்யுள்கள்! புத்தகத்தில் உள்ளவை போலவே காதுக்கு இனிமையாகவும் நளினமாகவும் இருக்கும். படிப்பதற்கு முன்னால் தோல்யா மாமா இருமித் தொண்டையைச் சரிப்படுத்திக் கொள்வார். கரிய தலைமயிரைக் கோதிவிடுவார். விட்டத்தைப் பீர்ததபடி உரக்கப்படிப்பார். எல்லோரும் அவரை மெச்சிப் பாராட்டுவார்கள். அம்மா அவருக்குத் தேநீர் ஊற்றித் தருவாள். தேநீர் பருகிக்கொண்டே பசுக்களின் நோய்களைப் பற்றி வார்த்தையாடுவார்கள். தோல்யா மாமா ''யாஸ்னிய் பேரிக்'' அரசாங்கப் பண்ணையில் பசுக்களுக்கு மருத்துவம் செய்கிறார்.

ஆனால் வீட்டுக்கு வருபவர்கள் எல்லோருமே இந்த மாதிரி அக்கறைக்கு உரியவர்களோ இனியவர்களோ அல்ல. உதாரணமாக, ப்யோத்தர் இல்யீச்சை, அல்லது பேத்யா மாமாவைக் கண்டாலே ஸெர் யோஷா விலகிவிடுவான். அவர் முகம் அருவருப்பானது. தலையோ வெளிர் ரோஜா நிறமாகவும் ஸெல்லுலாய்டுப் பந்து போல வெறுமையாகவும் இருக்கும். ''ஹி - ஹி - ஹி - ஹி" என்று அவர் சிரிப்பதும் அருவருப் பூட்டும். ஒரு தடவை கொரஸ்தெல்யோவ் வீட்டில் இல்லாதபோது வராந்தாவில் அம்மாவுடன் உட்கார்ந்திருந்த பேத்யா மாமா ஸெர்யோஷாவை அருகில் அழைத்து, கரடிப்படம் போட்ட அபூர்வமான பெரிய சாக்லேட் மிட்டாயை அவனுக்குக் கொடுத்தார். ஸெர்யோஷா மரியாமையாக ''நன்றி" என்று சொல்லி விட்டு, மிட்டாய் சுற்றியிருந்த காகிதத்தைப் பிரிக்கிறானோ, உள்ளே ஒன்றுமில்லை, வெற்றாயிருக்கிறது! ஸெர்யோஷாவுக்கு வெட்கமாயிருந்தது. என்பதை அவளும் நம்பினாள்....

''ஹி - ஹி - ஹி - ஹி" என்று வாய்விட்டுச் சிரித்தார் பேத்யா மாமா.

ஸெர்யோஷா கோபப்பட்டான், வருத்தத்துடன், ''பேத்யா மாமா, நீ முட்டாள்" என்றான்.

அம்மா தன்னை ஆதரிப்பாள் என்று அவன் நம்பினான். அவளோ, ''இதென்ன இது? மன்னிப்புக் கேள் இப்போதே!'' என்று இரைந்தாள்.

ஸெர்யோஷா அவளை வியப்புடன் பார்த்தான்.

''நான் சொன்னது காதில் விழுந்ததா?" என்று கேட்டாள் அம்மா.

அவன் பேசாதிருந்தான்.

அவள் அவன் கையைப் பிடித்து வீட்டுக்குள் இழுத்துப் போனாள்.

''என் கிட்டே நெருங்கத் துணியாதே. நீ இவ்வளவு முரடன் என்றால் உன்னோடு பேசவே எனக்கு இஷ்டமில்லை" என்றாள்.

அவன் தவற்றுக்கு வருந்தி மன்னிப்பு கேட்பான் என்று எதிர்பார்த்து அவள் சற்று நேரம் நின்றாள். அவன் உதட்டைக் கடித்துக் கொண்டு, ஏக்கமும் கடுப்பும் நிறைந்த விழிகளை மறுபுறம் திருப்பிக் கொண்டான். தான் குற்றவாளி என்று அவன் உணரவில்லை. எதற்காக அவன் மன்னிப்பு கேட்க வேண்டும்? நினைத்ததைத் தான் அவன் சொன்னான்.

(அடுத்த வாரம் தொடரும்....)

## கவிதா தேசம்

### அகால மரணங்கள்

வாப்பா.....
வவுனியாக் காட்டுக்குள்
மிதி வெடிபட்டு
'மௌத்தாகிப்' போனார்.

அண்ணனோ.......
ஆமர் வீதியிலே,
சந்தேகத்தின் பேரில்
அகப்பட்டவர்
அமரராகிப் போனார்.

அக்கா.....
அகதி முகாமிலே
ஆறு மாதக் கர்ப்பத்துடன்
அகால மரணமாகிப் போனார்.

தங்கையோ...
நடு வீதியில் கடத்தப்பட்டு,
கற்பு கறக்கப்பட்டதனால்
கல்லறையைச்
சொந்தமாக்கினாள்.

தம்பி.....
ஒரு கட்சிக்கு....
ஆதரவளித்ததால்
அனாதரவான முறையில்
எமலோகம் சென்றான்.

ஈழத்தாய்......
இழப்பதற்கு இனி
எந்த உறவுகளும் இல்லை.
மரண வீதத்தினைவிட
அகால மரண வீதம்
அதிகமென
உலக சுகாதார அறிக்கை
ஆணி அறைகிறது.

**நற்பிட்டிமுனை**
**எம்.எம்.றியாஸ்**

### தெரு மலர்கள்

அந்த மலர்கள் யார்
தெருப்புழுதியில் எறிந்தது?
விழிப்படலங்களில்
நீர்க்கோலம் வரைந்திட
சலனமற்றிருக்கும்
இதயக்குளத்தில்
வேதனையுணர்வு
அலைகள் ஆர்ப்பரிக்க
நடைபாதையில்
நான் நடக்கும் வேளைகளில்
எனக்குள் அடிக்கடி
எழும் வினா?

"வாழப்பிறந்த புஸ்பங்கள்"
"மண்ணுலகின்
தெய்வங்கள்"
"தேசத்தைத் தாங்கும்
வருங்காலத் தூண்கள்"
"நாளைய அவனியில்
நாயகனாய் ஒளிவீசப்
போகும்
நட்சத்திரங்கள்"
என்றெல்லாம்
எழுத்துக்களில் படித்து
பரவசப்படும்
என்னுள்ளம்
அம்மலர்களின்
அவல (துயர) நிலையை
ஜீரணிக்க இயலாது
பரிதவிக்கிறது.

சமுதாயமும் விதியும்
வறுமை முத்திரையை
குத்தியே வாழ்நாளை
காயப்படுத்துகின்றன
நாளைய உலகில்
திறனுடன் பிரகாசிக்கக்கூடிய
இளம் தாரகைகள்
பாலபருவத்திலேயே
உதிர்ந்து வீழ்வதால்
என்று வரும்
இதற்கு விமோசனம்?

**பி.வி.நித்தியானந்தன்**
**மட்டக்களப்பு**

### வரிசையான குடிவரிசை!

வரிசையான குடிவரிசை
நாங்களண்ணே!
கரிசனையாய் மரவள்ளி
நாட்டிலும் நாலடிக்கு
ஒரு கட்டை நாட்டியிங்கு
வித்துவத்தைக் காட்டிடுவோம்
வெளிப்படையாய்!

பதினாறடி இடைவெளியில்
தென்னைமரம்
நாலடி இடைகளில்
கறுத்த, நல்ல கத்தரிகள்
முன்றடிக்குள் முத்தான
செடி மிளகாய்
நாட்டிடுவோம் வீட்டுக்குள்
பாடிவமேல்

வரிசை வரிசையாக
இந்நிலத்தில்
பழமரங்கள், பழமரங்கள்
வைத்ததனால்
வரிசை கெட்டு,
பரிசை கெட்டு
வாழ்வதற்குக் கேட்டிரோ
சீர்வரிசை?

வசதியில்லா மலரினத்தைச்
சீர்வரிசை இல்லாமல்
வசதியுள்ள மனிதரிவர்
வாழ வைக்க மாட்டாரோ!

**கவிஞர் 'திக்கவயல்'**

### குஜராத் செய்த குற்றமென்ன?

இயற்கையின் சீற்றம் இங்கு
ஏன் கூற்றம் கொண்டதுவோ
ஆதரவு அளித்துவிட்டு
மனிதர்களை
அடியோடு அழித்ததுவோ?

செத்துச் செத்துப் பிழைக்கும்
கால்நடை வாழ்வாய்
மரணித்து உயிர்வாழும்
விஷப்பாராய் நீண்டு பரந்து

மடியில் அமுங்கிக் கிடக்கும்
உன் படுக்கைப் பரப்பில்
இத்தனை நாச நரம்புகளை
உள்ளே வைத்திருப்பாய் என்று
யாருக்குத் தெரியும் இந்த
நர்சகாரம்.

உன்னுடைய கிளர்ச்சியின்
சுழற்சியால் எத்தனை
கொடுமைகள்
செவ்வாய் செல்வது சிறந்தது
என்பதைக் கேட்டு நீ கொண்ட
சீற்றமா? இது.

மன்னிக்க முடியாத மரணங்களை
ஏற்படுத்திய உன்னை நம்பி
அடைக்கல ஜந்துக்களாய்
இன்னும் வலிப்பட்டு மரணிப்பது
தான் மனிதர்வாழ்வா?

**க.அன்பழகன்**

## சொந்த மண்ணின் நொந்த கீதங்கள்



நாட்டுக் குழப்பமெல்லாம்
- இப்ப
'நசல்'வருத்தம்
போலாச்சு
'வாட்டில்' வச்சும் சுகம்
வராது - ரிக்கட்
வெட்டுதற்கும் யாருமில்ல!

சொந்த ஊரு, வளவு
வாசல்
சொர்க்கம் தான்
என்றாலும்
எந்த நேரம் குண்டுவிழும்
என்றபய நரகமும் தான்!

முற்றத்தில் பாய் விரிச்சி -
நாம
முழுநிலவில் சோறு
திண்டு
பெற்றவரும்,
பிள்ளைகளும்
பேசஇது காலமில்ல!

என்ன செய்வோம்
பிறந்தாச்சி
இழுத்தடிச்சி வாழுற
தான்!
கண்ணைமூடும் நாள்
வரைக்கும்
கயிட்டம் தான்
ஆண்டவனே!

நம்ம காலம் முடிஞ்சி
போச்சி- இனி
நம்ம நம்ம புள்ளகுட்டி
இந்த மண்ணில்
எப்படித்தான்
இருந்தெழும்பி நடந்
திடுமோ?

என்ன பாவம் செய்து
இந்த
இலங்கையிலே நாம்
பிறந்தோம?
கன்னித் தமிழ்த்தாயே -
நாங்க
கழிசறையாய்ப்
போனோமே!

**கவிஞர் செ.குணரத்தினம்**

## "கிழக்கு மாகாண இலக்கிய தடத்தில் சமாதானம்"

### புதுமலர்கள்

"சமாதானம்" சஞ்சிகையின் 8வது இதழ் கிடைக்கப் பெற்றோம். எழுத்தாளரும் கலைஞருமான ஈழபாரதி மருதூர் வாணணின் தனிப்பட்ட முயற்சியில் அரையாண்டுக்கொரு முறை மலர்வதே "சமாதானம்".

'எல்லா இனங்களும் இணைந்தன்பு கொள்வோம்' என்ற வாசகத்தை அடிநாதமாகக் கொண்டுவரும் சமாதானத்தில் எழுத்தாளர் ஒலுவில் அமுதன், கவிய்ரசு நீலாவணன், கவிஞர் பரதன் கந்தசாமி, ஈழ்த்துப் பூராடனார், நீலா தேவராஜா, பாடகி மீரா ஆகியோரின் புகைப்படங்கள் முன் அட்டையை அலங்கரிக கின்றது.




அழகிய ஓப்செட் அச்சமைப்பில் அட்டையைத் தாங்கியும்,அச்சுக் கோர்ப்பு முறையிலமைந்த உள்பக்கங்களையும் கொண்டு வந்திருக்கும் சமாதானத்தின் இலக்கியப் படைப்புக்களை ஆராய்ந்தால் இது வென்றும் தனிமனித புலம்பலாகவே இருக்கிறது.

மருதூர்க்கனி MP தொடர்பாக எழுதியிருக்கும் மருதூர்வாணரின் வாழ்த்துச் செய்தியையே ஆசிரியர் உரையாகக் கொள்ள முடிகிறது.தொடர்ந்து சமாதானம் 8இன் முகப்புப் படங்களில் உள்ளவர்கள் தொடர்பான விபரங்களையும் மருதூர் வாணரே எழுதியுள்ளார்.

தொடர்ந்து தனக்கு விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையில் அல்ஹாஜ் எஸ்.எச்.எம்.ஜெமீலுக்கு மருதூர் வாணர் எழுதியிருக்கும் கடிதத்தில் தான் எழுதிக் குவித்தவைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து மருதூர் வாணருக்கு ஈழத்து பூராடனார் எழுதிய வாழ்த்துக் கடிதமும் அதற்கு அவர் எழுதிய குறிப்பும்இடம்பெற்றுள்ளது.

ஈழபாரதியின் கடிதத்தில் இருந்து அவர் நீண்ட காலமாக எழுதிவருவதாகத் தெரிகிறது. நீண்ட காலமாக எழுத்துலகில் எழுதி வருபவர்களுக்கும், சேவையாற்றுபவர்களுக்கும் கொடுக்காமல் தமக்கு வேண்டப்பட்டவர்களுக்கும், சிபார்சு அடிப்படையிலும் சிலவேளைகளில் தவறானவர்களுக்கும் வழங்கப்படும் அரச விருதுகள் பற்றி கேள்வி எழுகிறது.

ஆனால் எனக்கு விருது தாருங்கள் என ஒரு சஞ்சிகை ஆசிரியர் வேண்டி நிற்பது என்னவோ செய்கிறது. விருதுக்காகத்தான் இவர்கள் இலக்கியம் படைக்கிறார்களோ என்றும் எண்ணத்தூண்டுகிறது. 26 பக்கங்களில் ஈழபாரதி மருதூர் வாணனின் போர் முனையில் காதலி என்ற வரலாற்று குறுநாவல் ஒன்றும் எழுதப்பட்டுள்ளது.

1950க்கு பிற்பட்ட சமூக அமைப்புக்கள் பற்றியும், தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் வாழ்க்கை பற்றியும், கதை சொல்கிறது. பேச்சுத்தமிழில் எழுதியுள்ளதால் சில சொற்களுக்கான் அர்த்தங்களை வாசகர்கள் தேடிப்பிடிக்க வேண்டியுள்ளது.

சமாதானம் சஞ்சிகை 1999இல் நடாத்திய ஈழ மேகம், நீலாவணன், யுவன் கபூர் நினைவாக நடாத்திய புதுக்கவிதைப் போட்டியில் முறையே முதலாம் இரண்டாம், மூன்றாம் இடம் பெற்ற கவிதைகளும் பாராட்டுப் பரிசு பெற்ற கவிதையும் இடம்பெற்றுள்ளது. இதே போன்று மரபுக் கவிதைப் போட்டியில் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசு பெற்ற கவிதைகளும் இடம் பெற்றுள்ளது. பொதுவுடமை நாளை வரும் எனும் புதுக்கவிதைப் போட்டியில் முறையே ஒலுவில் அமுதன், இக்பால் அலி, ந.ந.விஜிலி ஆகியோர் பரிசுகளை பெற்றுள்ளனர்.

பாராட்டுப் பரிசை கோ.சிவகுமார் பெற்றுள்ளார். வேண்டாமே நமக்கிந்த வேற்றுமைகள் எனும் தலைப்பிலான மரபுக் கவிதைப் போட்டியில் முறையே அ.கௌரிதாசன், சி.தர்மகுலசிங்கம், தம்பிலுவில் தயா

(15ம் பக்கம் பார்க்க)

# கவனிப்பாரற்று விடப்படும் 'முது'சங்கள்

**இ**ன்று உலகளாவிய ரீதியில் பேசப்படும் சமூகவிடையங்கள் ஒன்றாக வயதில் முதிரும் சனத்தொகை **(Aging population)** பற்றிய விடயம் காணப்படுகின்றது. சர்வதேச ரீதியாக இவ்விடயம் எவ்வளவுதூரம் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதனை 1999ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் முதியோர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டமை புலப்படுத்துகின்றது. தற்போது அறுபத்தாறாகவிருக்கும் உலக சராசரி ஆயுட்காலம் எதிர்வரும் நூற்றாண்டில் நூற்றுப் பத்து முதல் நூற்று இருபது வரையான வீச்சினை அடையலாம் என அறிஞர்களால் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இலங்கையிலும் எறியமிடப்பட்டுள்ள சனத்தொகை குறித்த தரவுகளை எடுத்து நோக்கினால் எதிர்வரும் தசாப்தங்களில் சனத்தொகைக் கூட்டமைப்பில் இளையோரின் பங்கு கணிசமான அளவு வீழ்ச்சியைக் காட்டும் போது முதியோரின் பங்கு துரிதமாக அதிகரித்துச் செல்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் மருத்துவ வசதிகள் ஏனைய தென், மத்திய ஆசிய நாடுகளோடு ஒப்பிடுகையில் நீண்ட காலமாகவே உயர்தரத்தில் இருந்து வருகின்றது. இந்நிலைமை இலங்கை வாழ் மக்களின் சராசரி வாழ்க்கைக் காலத்தை உயர் நிலையில் பேணிவர உதவியுள்ளது. பல் வேறு காரணங்களினாலும் பிறப்பு வீதம் கடந்த அரை நூற்றாண்டில் மிகத் துரிதமாக வீழ்ச்சி கண்டு வந்துள்ளது.

இந்நிலைமை இலங்கை முழுவதிலும் முதியோர் விகிதாசாரத்தில் துரித அதிகரிப்பினை ஏற்படுத்தி வந்துள்ளது. 1963 இல் 6% ஆகவிருந்த அறுபது வய்திற்கு மேற்பட்ட முதியவர்கள் 2001 இன் 10% ஆக 2021 இல் ஏறத்தாழ 20% ஆகவிடுவர் என எதிர்பார்க்கப் படுகின்றது.

**விஜேந்திரன்**

பிறப்பு இறப்பு குறித்த தகவல்களையும், இயற்கை வளர்ச்சி வீதங்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட இப் புள்ளி விபரங்களில் தொடரும் யுத்த சூழ்நிலை மேலும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. யுத்த சூழ்நிலை காரணமாக உள்நாட்டு இடம் பெயர்வு, வெளிநாடு நோக்கிய புலம் பெயர்வு என்ற காரணங்களிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ குடும்பம் என்ற நிறுவனம் மீதும் அதன் பாரம்பரிய பணிகளுள் ஒன்றான முதியோர் பராமரிப்பின் மீதும் பாதிப்பினை ஏற்படுத்தி வருவதோடு எதிர்காலத்திலும், ஏற்படுத்தப் போகின்றது.

துரித கதியில் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவினை ஈடுசெய்ய பெண்கள் தொடர்ந்தும் அதிக எண்ணிக்கையில் வேலைப் படையில் பிரவேசிப்பது காலத்தின் தேவையாகி வருகின்றது. இதன் காரணமாக சமூகத்தில் அவர்கள் பாரம்பரியமாக ஆற்றிவந்த பணிகள் அவர்கட்கு மேலதிக சுமைகளாக மாறிவருகின்றன. அத்தகைய பணிகளுள் முதியோர் பராமரிப்பும் அடக்கம்.



முதுமையும்
நோயும்
உனைத்தின்னும்
நேரம்
நீ ஊட்டி
வளர்த்த
செல்வங்கள்
உனக்கு ஊட்ட
வரவில்லையா
அம்மா?

தனிக் குடும்பங்களின் அதிகரிப்பு, கூட்டுக் குடும்பங்களின் உடைவு, குடும்பங்களிடையேயான தற்காலிக நிரந்தர பிரிவுகள், வாழக்கைத்துணை இழப்பு என்பன அண்மைக் காலங்களில் அதிகரித்துச்செல்கின்றன. போரோடு தொடர்புபட்ட இவ்விளைவுகள் முதியோர் சமூகத்தில் நிராதரவாக்கப்படுகின்றமையோடும் தொடர்புற்றுக் காணப்படுகின்றது.

இலங்கையின் பாரம்பரியம் விவசாயச் சமூகங்கள் துரித கதியில் தொழில் மயமாதல், மற்றும் கைத்தொழில் மயமாதல் செயன்முறைகளுக்கு உட்பட்டு வருகின்றன. இம்மாற்றம் மேற்படி சமூகங்களின் விழுமியங்களிலும் மாற்றத்தை உண்டு பண்ணி விடுகின்றது.

இன்று இலங்கையில் முதியோர் இல்லங்களில் வதியும் முதியோரில் 60% இற்கு மேற்பட்டவர்கள் இரண்டுக்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்டவர்களாகும் என ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. இந்நிலமை இயந்திரங்களைப் பாவித்து அவற்றின் பிரயோசனம் குறைவடைந்துவிட்டதும் 'தூக்கி வீசிவிடும் மனோநிலை பொருளாதார ரீதியாக பிரயோசனம் குறைந்துவிட்ட முதியோர் தொடர்பாகவும் ஏற்பட்டு விட்டதா எனச் சிந்திக்கத் தோன்றுகின்றது.

தொழில் மற்றும் உயர்கல்வி வாய்ப்புக்களுக்காக இளம் மற்றும் நடுத்தர வர்க்க சமூகங்கள் நரகங்களை நோக்கி நகரவது பல சந்தர்ப்பங்களில் இன்று தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. இது மறைமுகமாக நகர மயமாதல் ஒன்றிற்கு வழி வகுக்கின்றது. உயர்ந்த வாழ்க்கைச் செலவைக் கொண்ட நகரச் சூழலும் நெருக்கமான கட்ட அமைப்புக்களும் முதியோரைப் பொறுத்தவரை பொருத்தமானதாக அமைவதில்லை.

இலங்கையில் கணவன், மனைவி தொழில் புரியும் குடும்பங்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்து வருகிறது. இத்தகைய குடும்பங்களின் பெற்றோருக்கு தமது பிள்ளைகளோடு செலவிடுவதற்கே போதிய நேரம் இருப்பதில்லை. இத்தகைய குடும்பங்களின் பொறுப்புக்களில் முதியவர்கள் வந்துவிடும் போது அக்குடும்பங்கள் தார்மீக ரீதியான பிரச்சினை ஒன்றை எதிர் கொள்கின்றன.

ஒருபுறம் முதியோர் சனத்தொகை துரிதமாக அதிகரித்துச் செல்கின்ற அதே வேளை அவர்கள் நிராதரவுக்கு உள்ளாவதற்கான ஏதுக்களும் வளர்ந்து செல்வதை மேற்படி சமூக நிலை எமக்கு உணர்த்துகின்றது.

கடந்த இரு தசாப்தங்களாக தீவிர போர்ப் பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்துவரும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் முதியோர் பிரச்சினை இலங்கையின் பிற பகுதிகளைவிட தனித்துவமான முறையில் தீவிரமடைந்து செல்வதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் போர் அனர்த்தங்களினால் உயிரிழந்தவர்கள் காணாமல் போனவர்கள் தொடர்பான விபரங்களை அவதானிக்கையில் அவர்கள் பெரும்பாலும் 15-49 வயது வகுப்பினைச் சார்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். போர் அனர்த்தம் காரணமாக உயிரிழந்த இளைஞர் யுவதிகள் குறித்த விபரம் இற்றைவரை சரியாகக் கணக்கிடப்படவில்லை. எனினும் இதனை சுமார் 20000 இற்கு மேல் என மதிப்பிடலாம். ஏனெனில் குறித்த ஒரு போராளிக்குழு மட்டும் தனது அறிக்கையில் இதுவரை தாம் 15000 போராளிகளை இழந்துள்ளதாக உத்யோக பூர்வமாகக் குறிப்பிட்டிருந்தது.

இலங்கையிலிருந்து பிற நாடுகளுக்கு குடிபெயர்ந்து சென்றவர்கள் செல்பவர்களில் பெரும் பங்கினர் வடக்குக் கிழக்கு மாகாண இளம் சந்ததியினர் என்பது வெளிப்படையான ஆனால் புள்ளி விபர ரீதியான ஆதாரங்களற்ற உண்மை.

போர் அனர்த்தம் காரணமாவும், அரசியல் காரணங்களினாலும் அபிவிருத்தியில் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து பின்னடைந்துவிட்ட மேற்படி மாகாணங்களில் உயர் கல்வி வாய்ப்புக்கள், வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வது இளைஞர்களைப் பொறுத்தவரை சவாலாக மாறி வருகின்றது. மேற்படி உயர்கல்வி வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்காக பல சந்தர்ப்பங்களில் அவர்கள் நாட்டின் தென்பகுதியை நாடவேண்டியுள்ளது.

**(அடுத்த வாரம் தொடரும்)**

**திருமதி.எம்.80 வயதாகும் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியை. இவர் ஆசிரியையாக இருந்த போது சம்பாதித்த பணம் முழுவதையுமே தனது சுற்றத்தாரின் முன்னேற்றத்திற்கு என செலவு செய்துள்ளார்.**

**ஓய்வு பெற்ற பின்னர் இவரைப் பொறுப்பேற்க இவரிடமிருந்து நன்மை பெற்ற எவரும் தயாராகவில்லை. சுயமாக நடமாடக்கூடிய அளவு மட்டும் தனது நண்பர்களோடு தங்கி வாழ்ந்த இவர் முதுமை காரணமாக இயலாமை ஏற்பட்டதும் கருணை அடிப்படையிலான முதியோர் இல்லங்கள் பலவற்றை அணுகியுள்ளார். அங்கெல்லாம் இவரது ஓய்வூதியம் இவரது அனுமதிக்குத் தடையாக இருந்துள்ளது. தற்போது இவர் தனியார் முதியோர் இல்லம் ஒன்றில் அனுமதிக்காகக் காத்துள்ளார்.**

---

**நிழலற்று அலையும் மனிதர்**
**சுவடிழந்து செல்கின்றார்**
**விழி எறியும் திசையெங்கும்**
**கானல் நீரள்ளி நீள்கின்ற கைகள்**
**ஒரு கையும் இவர்க்கென்று**
**உயிர்த்தண்ணி ஏந்தவில்லை**
**தகிக்கிற கோடையில்**
**மொட்டை மரத்தடியில்**
**கூன்விழுந்த மானுடம் குந்தியிருக்கிறது**

*கவிஞர் சு.வில்வரத்தினத்தின்*
*கவிதை வரிகளிலிருந்து*

---

## இந்தாருங்கோ இந்தாருங்கோ

**மனைவி:-** மட்டுநகரில் விளையாட்டுப் போட்டி எல்லாத்திலயும் நம்மட எம்.பீ.மார் தான்

**கணவன்:-** அவங்க மாணவரிட்ட போய் பிரித்தானியா தடையை எதிர்த்தும், பேச்சுவார்த்தைக்கு அரசு போக வேண்டும் என்றும் முழங்கித்தள்ளினாங்க.

**மனைவி:-** போயும் போயும் பாடசாலை விளையாட்டு விழாவில் தானே இப்படி பேசினாங்க.

**கணவன்:-** எலக்சன் முடிஞ்ச பின்பு இவங்களுக்கு கதைக்கிறத்துக்கு பாடசாலை விளையாட்டு விழாதான் கிடைச்சிது.

**மனைவி:-** அது சரி அதைச் செய்வன் இதைச் செய்வன் கல்லுவைப்பன், கட்டடம் தருவன் என்று கத்தின எம்.பீ.மாரு இப்ப என்ன செய்வாங்க.

**கணவன்:-** ஆறு மாதத்திற்கு அபிவிருத்தியெல்லாம் அம்மா நிறுத்திப்போட்டாவு இனி அடுத்த ஆண்டு விளையாட்டுப்போட்டில வந்து ஏதும் கத்துவாங்க.

**மனைவி:-** அவங்கதான் என்ன செய்யிற "எறிபிறவண்ட கையில பொல்லில்லாதது போல" கத்தித் தள்ளட்டும்

*—அம்பிகை—*

## "தினக்கதிர்" ஓராண்டு நிறைவையொட்டி

### மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

கிழக்கிலங்கையில் இருந்து வெளிவரும் முதலாவதும், ஒரேயொரு நாளிதழுமான தினக்கதிர் பத்திரிகையின் ஒரு வருட நிறைவையொட்டி கல்வி திணைக்களத்துடன் இணைந்து நடாத்தும் மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான அறிவுத்திறனை ஊக்குவிக்கும் கட்டுரைப்போட்டி

**நிபந்தனைகள்:-**

ஆண்டு 10 தொடக்கம் 13 வரையுள்ள மாணவர்கள் மட்டுமே பங்கு பற்றலாம்.

1500 சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்

பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

கீழ் குறிப்பிடும் தலைப்புக்களில் ஒன்றை மட்டும் தெரிவு செய்து எழுதி அனுப்பவும். ஒரு மாணவர் ஒரு கட்டுரையை மட்டுமே அனுப்ப முடியும்.

**தலைப்புகள்:-**

1. சமூக மேம்பாட்டில் பத்திரிகைகளின் பங்கு
2. நான் ஒரு ஊடகவியலாளரானால்........
3. சமூகத்தில் வானொலி, தொலைக்காட்சி, இணையம் என்பன செலுத்தும் தாக்கம்.
4. பூகோள மயமாதலும் பத்திரிகைகளின் பங்கும்

**பரிசில்கள்:-**

1ம் பரிசு :- 1000 ரூபா

2ம் பரிசு :- 500 ரூபா

3ம் பரிசு :- 300 ரூபா

மேலும் 10 ஆறுதல் பரிசில்களும், நற்சான்றிதழ்களும் வழங்கப்படும்

**முடிவுத்திகதி:-**

30.03.2001 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்க கூடியவாறு

"ஓராண்டு நிறைவு கட்டுரைப்போட்டி"

'தினக்கதிர்'

த.பெ.இல.06

மட்டக்களப்பு

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் வெற்றியீட்டும் மாணவர்களின் விபரம் தினக்கதிரில் பிரசுரிக்கப்படும் வெற்றி பெறும் கட்டுரை தினக்கதிரில் வெளியிடப்படும்.

❖❖❖❖❖

# இந்த வாரம் உங்கள் பலன்

## (11.03.2001-17.03.2001)

**மேடம்:-**

(அச்சுவினி பரணி கார்த்திகை 01ம் கால்)

மனமகிழ்ச்சியேற்படும். கல்வி விருத்தி பாராட்டு புகழ் பரிசு கிடைக்கும். பணவரவு இலாபம் மந்தமாக இருக்கும். வீட்டில் சிறு சண்டை சச்சரவுகள் உண் டாகும். பெற்றோர்களால் காதல் அங்கிகரிக்கப்படும். திருமணம் வெளிநாட்டுப்பயணம் கைகூ டும். சிறுகாயங்களேற்படும் அவதானம்.

அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, செவ்வாய்

**இடபம்:-**

(கார்த்திகை 2,3,4ம் கால் ரோகினி மிருகசீரிடம் 1,2ம் கால்)

எண்ணிய காரியங்கள் இனிது நிறைவு பெறும். புதிய தொழில் சேரும். கல்வி தொழிலில் ஏற்பட்டிருந்த தடைகள் நீங்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். திருமணம் ஒப்பந் தமாகும். வெளிநாட்டுப்பயணம் கைகூடும். பொன்பொருள் வாகனம் சேரும். எதிரிகளால் தீமையுண்டு அவதானம்.

அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன்

**மிதுனம்:-**

(மிருகசீரிடம் 3,4ம் கால் திருவாதிரை புனர்பூசம் 1,2,3ம் கால்)

மனதிலே சோகம் பயம் சந்தேகம் நிலவும். கல்வி தொழில் புதுப் பொலிவு பெறும். புதிய தொழில் சேரும். பரீட்சை களில் பூரண வெற்றி கிட்டும் திருமணம் ஒப்பந்தமாகும். காதலர்களுக்கும் பெற்றோர்க ளிடத்தில். இருந்து வந்த தடைகள் நீங்கும். நீர் நெருப்பால் சிறு ஆபத்து ஏற்படும் அவதானம்.

அதிர்ஷ்டநாள்:- புதன், வெள்ளி

**கடகம்:-**

(புனர் பூசம் 4ம் கால் பூசம் ஆயிலியம்)

மனதுக்கம் நோய் பிணிகள் நீங்கும். எதிர்பார்த்த ப்டி கல்வி தொழில் முன னேற்றம் அடையும். வெற்றி புகழ் செல்வம் சேரும். குடும்பத்தில் அமைதியும் ஆனந்தமும் நிலவும். திருமண விசயங்கள் தடைப்படும். பெண்ணால் சிறு தீமை ஏற்படும். கொடுக்கல் வாங்கல் விசயத்தில் அவதான மாக இருக்கவும்.

அதிர்ஷ்டநாள்:- வெள்ளி, சனி

**சிங்கம்:-**

(மகம் பூரம் உத்தரம் 01ம் கால்)

மனம் சோர்வடையும். பயம் உண்டாகும். கல்வி விருத்தியடையும். தொழில் புரியும் இடத்தில் மேல் அதிகாரிகளின் நெருக்குதல்கள் அதிகம் இருக்கும். எனினும் இடமாற்றம் ஏற்படாது. குடும்பத் தில் அமைதி குலைந்து காணப் படும். கடிதத் தொடர்பு பெரியம னிதர்களின் பாராட்டு கிடைக்கும். அமைதியாக வாழ்வீர்.

அதிர்ஷ்டநாள்:- புதன், வியாழன்

**கன்னி:-**

(உத்தரம் 2,3,4 ம் கால் அத்தம் சித்திரை 1,2ம் கால்)

பலவிதமான கவலைகளேற்படும். தேகசுகம் பாதிப்படையும். கல்வி தொழில் மந்த நிலையில் இருக்கும். திருமண விசயத்தாலும், குழந்தைகளாலும் குடும்பத்தில் கலகமுண்டாகும். கணவன் ம்னைவி பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும். கடிதத் தொடர்பு கைசேரும்.

அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள்

**துலா:-**

(சித்திரை 3,4ம் கால் சுவாதி விசாகம் 1,2.3ம் கால்)

எண்ணிய காரியங்கள் இனிது நிறைவு பெறும். கல்வி தொழில் உயர்வடையும். குடும்பத்தில் அமைதி நிலவும். பணச்செலவு அதிகரிக்கும். திருமணம் அமைதியாக நடந்தேறும். பெரியோர்களின் ஆதரவு பொருளுதவி கடிதத் தொடர்பு கிடைக்கும். பணம் பொன் பொருள் தொலைந்து போகலாம் அவதானம்.

அதிர்ஷ்டநாள்:- புதன், சனி

**விருச்சிகம்:-**

(விசாகம் 4ம் கால் அனுஷம் கேட்டை)

நோய் பிணிகள் நீங்கும். பயம் கவலைகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். கல்வி தொழில் மந்தமாக இருக்கும். குடும்பத்தில் சிறுவாக்கு வாதங்க ளேற்பட்டு மறையும். பணச்செலவு அதிகரிக்கும். திருமணம் நடந்தேறும். வெளியூர் சென்றவர் வீடு வந்து சேருவார். பெரியோர் களின் பாராட்டு கிடைக்கும்.

அதிர்ஷ்டநாள்:- திங்கள், வியாழன்

**தனு:-**

(மூலம் பூராடம், உத்தராடம் 01ம் கால்)

முயற்சிக்கு ஏற்ற முன்னேற்றம் கிடைக்காது. பலவிதமான இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டி நேரிடும். கல்வி தொழில் சிறப்ப டையும்.குடும்பத்தில் அமைதி நிலவும். திரும்ண விசயங்கள் சூடுபிடிக்கும். பண நஷ்டம் உண்டாகும். ஆயுதபாணிகளால் தீமை ஆபத்து உண்டாகும். மிகவும் அவதானம்.

அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, சனி

**மகரம்:-**

(உத்தராடம் 2,3,4ம் கால் திருவோணம் அவிட்டம் 1,2ம் கால்)

கவலை கஷ்டங்கள் நீங்கும். புதிய தொழில் முயற்சிகள் சித்தியாகும். வீட்டில் குதுகலம் ஏற்படும், கல்வி தொழில் எண்ணியபடி விருத்தி யாகும், புகழ் பரிசு கிடைக்கும், திருமண விசயங்கள் கைகூடும், பணம் நகை பொருள் பண்டம் சேரும், செல்வமாக வாழ்வீர்.

அதிர்ஷ்டநாள்:- செவ்வாய், புதன்

**கும்பம்:-**

(அவிட்டம் 3,4ம் கால் சதயம் பூரட்டாதி 1,2,3ம் கால்)

மனம் சோர்வடையும் எண்ணிய காரியங்கள் தோல் வியடையும். தொழில் கல்வி சீராக விருத்தியடையும். அதிக பிரயாசப்பட வேண்டி இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். பணம் சேரும். உறவினர் தரிசனம் கிட்டும். பொருள் பண்டம் சேரும். பிரயாணம் கைகூடும்.

அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, வியாழன்

**மீனம்:-**

(பூரட்டாதி 4ம்கால் உத்தரட்டாதி ரேவதி)

வீண் கவலைக ளேற்படும். தேகத்தில் சூட்டு நோய்களேற்படும். கல்வி தொழில் எண்ணியபடி விருத்தியடையும். குடும்பத்தில் ஒற்றுமையும் அமைதியும் ஆனந்தமும் நிலவும். பணச்செலவு குறைவடையும். அன்னிய மனிதர்களால் ஏற்பட்டு வந்த தொல்லை தொந்தரவுகள் நீங்கும்.

அதிர்ஷ்டநாள்:- வியாழன், வெள்ளி

"சோதிடர்"

கோ.இளங்கோகரன்

ஆரையம்பதி

# கிழக்கு மாகாண....

(13ம் பக்க தொடர்ச்சி)

ஆகியோர் பெற்றுள்ளனர்.

இறுதியாக றகுமான் ஏ.ஜபாரின் பேத்மை நீங்கவே எனும் தலைப்பிலான புதுக்கவி தையும், இலங்கை மஸ்தான் இப்றாஹீம் நீடுழி வாழ்கவே என்ற ஈழபாரதியின் கவிதையும், விழா தொடர்பான குறிப்பும் வெளிவந் துள்ளது. கிட்டத்தட்ட ஐம்பது பக்கங்களில் வந்துள்ள சமாதானத்தில் 40 பக்கங்களில் ஆசிரியன் கை வண்ணம்.

50 ரூபா விலையில் ஒரு இலக்கியச் சஞ்சிகைக்கு இது தேவைதானா என எண்ணத் தோன்றுகின்றது. சமாதானம் ஈழபாரதியின் ஒரு தொகுப்பாகவே உள்ளது.

இனிவரும் சமாதானம் இதழ்களிலாவது ஆசிரியர் ஏனையவர்களின் படைப்புக்க ளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தேடலின் மூலம் சிறந்த படைப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும்.

இலக்கிய சஞ்சி கைகளின் அடித்தளமே இலக்கிய ஆர்வமாகும். அந்த ஆர்வத்தின் பேரிலே ஒரு சஞ்சிகை வெளிவ ருகின்றது. எனவே ஈழபாரதியின் ஆர்வம் வரவேற்கத்தக்கதே. அது தேடலாகவும் மாறி ஏனைய படைப்பாளர்களின் ஆக்கங் களையும் சேர்த்து வெளியிட ஆசிரியர் முன்வரவேண்டும்.

பக்கங்களை குறைத் தாவது ஒப்செட் அச்சமைப்பில் சமாதானத்தை வெளிக்கொணர முயற்சிக்க வாழ்த்துகிறோம்.

**மைதிலி**

# "உஸ் உங்களைத்தான்.........!"

சமாதான பேச்சு நடக்கப்போகிறது எண்டு கத உலாவுது, உண்மையிலே பேச்சு நல்ல படியாக நடந்து சமாதானம் வருமா என எம்மட சனம் ஏங்கிக் கொண்டு இருக்கிதுகள்.

அம்மையார் பேச்சுக்கு வாறாவு எண்ட நோர்வே காரரின் கடும் பிரயத்த னத்திற்கு மத்தியில் தான் தன் பிடிவாத குணத்தை கொஞ்சம் தள்ளி வைச்சிப் போட்டு வராவா அல்லது நோர்வே காரரின் முயற்சிக்கு கொஞ்சம் இனங்கிற மாதிரி நடந்து விளையாட்டுக் காட்ட வாறாவா என்டு விளங்குதில்லை.

எப்படியோ இந்த நாட்டில நம்ம சனங்களும் அமைதியாக நிம்மதியாக வாழ



வேண்டும் அதற்கு அம்மையார் ஒத்து போவாரா? இப்ப அம்மையாரிட்ட கை கொஞ்சம் பலம். அது தான் சண்டித்தனம் காட்டிக் கொண்டு எம்ம சனங்க ளுக்கு அடிக்க வாராங்க, இப்படி இருக்கிற போது சமாதான பேச்சு நடக்குமா என்பதும் ஒரு பக்கம் கேள்வி குறிதான்.

யுத்தத்தையும் வெற்றிகரமாக நடத்திக் கொண்டு சமாதான பேச்சையும் நடத்தப் போராவாமே அம்மையார். அது எப்படிடாப்பா நடத்துற? ஒரு நாட்டிலையும் நடக்காத சங்கதி இது. அம்மையார் இதில சாதனை படைக்கத்தான் பாக்காவு எதுல முடிய போகுதோ தெரியாது.

தமிழ் ஈழ கோரிக் கையை அமெரிக்கா எதுக்கு தாமே ரெண்டெழுத்து காரங்க ளுக்கு அது சம்பந்தமாக எச்சரித்து இருக்காங்க நாம் எண்டு அரச வானொலி பெரிசா முயங்கிதே.

ரெண்டெழுத்து காரங்க அமெரிக்கா விடமா ஈழம் கேட்டவங்க நீங்கதான் வாங்கத் தாங்க எண்டு அமெரிக்ககாரங்க சொன்னாங்களோ சொல்ல வில்லையோ தெரியாது. ஆனா அவங்கட பெயரை வைச்சு அவங்க சொல்லிப் போட்டாங்க.

இவங்கட ஊழல்களை பற்றி சொன்னது ஒண்டையும் வெளியில் விடல்லை. இதப் பத்தித்தான் கத அளக்காங்க.

பிரித்தானியா ரெண் டெழுத்து காரணங்களை தடை செய்து அம்மையாரிட ஆக்க ளுக்கு பெரிய வெற்றியாமே.

உண்மையில் அவர்களுக்கு வெற்றிதான் அவங்கட காட்டுமிராண்டி வேளைக்கு கிடைத்த பெரிய வெற்றிதானே இனி என்ன தங்கட வேலைகளை தங்கு தடை இன்றிச் செய்யலாம்.

பிரித்தானியா பாவம் யாரு பயங்கர வாதி யாரு அப்பாவி எண்டு கூட அறிய முடியாத வல்லரசு சொல்லவே வெட்கமாக இருக்கு.

**வேப்பையடி வீதியான்**

# வாகரையில் விசர்நாய்க்கடியினால் 10 பேர் மரணம்

(நமது நிருபர்)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரைப் பிரதேசத்தில் விசர் நாய்க்கடியினால் கடந்த இரண்டு மாதங்களில் பத்துப் பேர் வரையில் மரணமாகியுள்ளனர். மேலும் பலர் விசர்நாய்க் கடிக்கு இலக்காகி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.**

கடந்த மாதத்தில் மாத்திரம் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் 25 பேர் விசர் நாய்க்கடி காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதற்கு உடனடியாக ஏற்றப்பட வேண்டிய ஊசி மருந்தான அன்ரி றேபிஸ் வக்சின் அங்கு இல்லாததால் இவர்கள் அனைவரும் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

விசர்நாய் கடித்தால் உடனடியாக 'அன்ரி றேபிஸ் வக்சின்' ஊசி மருந்து ஏற்றப்பட வேண்டும். அவ்வாறு ஏற்றாது போனால் நோயின் தாக்கம் ஏற்படும் பட்சத்தில் அவர்களைக் காப்பாற்ற முடியாது' என வாழைச்சேனை மாவட்ட அதிகாரி டாக்டர் எஸ். தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

'வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் இதுவரை இந்த ஊசி மருந்து இருக்கவில்லை. தற்போது விசர்நாய்க்கடியினால் அதிகம் பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதால் இந்த மருந்தை எமது வைத்திய சாலைக்கும் அனுப்பி வைக்குமாறு மாகாணப் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன். அனேகமாக அடுத்து வாரங்களில் இந்த மருந்து வந்து சேர்ந்து விடும். இந்த ஊசி மருந்தை ஏற்றுவதற்கு விசேட பயிற்சி பெற்ற ஒருவர் தேவை. அதற்கும் நாம் ஆயத்தங்களைச் செய்துள்ளோம்' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ம்ட்டக்களப்பு நகரிலிருந்து வடக்காக 62 கி.மீற்றரில் வாகரை உள்ளது. இப்பிரதேசத்தில் கணிசமான பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

வாழைச்சேனை தொடக்கம் வெருகல் வரையுள்ள சுமார் 50 கி.மீற்றர் தூரப் பிரதேசத்தில் வாழைச்சேனையிலிருந்து 15 கி.மீற்றர் தூரத்திலுள்ள மாங்கேணியில் பாரிய சிறிலங்கா படைமுகாம் உள்ளது. அதற்கு அப்பாலுள்ள பனிச்சங்கேணி, கிரிமிச்சை, ஆலங்குளம், வாகரை, ஊரியன்கட்டு, தட்டுமுனை, வெல்லயமடு, பால்சேனை, கதிரவெளி, வெருகல் வரையுள்ள சுமார் 35 கி.மீற்றர் தூரப்பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளாகும்.

## மட்டக்களப்பு.....

கூடியதான தீர்வுகளுக்காக என்னை நாடி வருபவருக்கு எனது அலுவலகக் கதவுகள் திறந்தே இருக்கும்.

இன்று எங்கும் எதிலும் அரசியல் ஊடுருவியுள்ளது அதிகம்பேசுவதில் அர்த்தமில்லை மற்றவர்களிடம் கற்று செயல்பட வேண்டும் அரசியல், இனம், மதம், அனைத்தையும் கடந்து செயற்படுவோம். எனினும் மக்களை நேரடியாக சந்தித்து சேவை செய்ய விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.

மீன்பிடி நீரியல்வளத்துறை பிரதியமைச்சர் முகமட் அப்துல் காதர், பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத், நீர் வழங்கும் வடிகால் அமைப்பு தலைவர் எம்.ஏ.எல்.எம் ஹிஸ்புல்லாஹ் மற்றும் பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## வடக்கு .....

தினக்கதிருக்குத் தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக மார்ச் 14ம் திகதி சுகாதார அமைச்சருடன் சந்தித்துப் பேசவிருப்பதாகவும் அதில் சாதகமான முடிவுகள் கிடைக்காத பட்சத்தில் அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி ஆராயவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## தொப்பி விற்கும் கல்லூரியில் தொந்தரவு அடையும் மாணவிகள்

(நமது நிருபர்)

மட்டுநகர்ப்பகுதியில் உள்ள பெண்கள் கல்லூரியொன்றின் மாணவிகளுக்கு தொப்பி விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு மாணவி 125 ரூபா வீதம் செலுத்தி தொப்பிகளை வாங்கும்படி இக்கல்லூரியின் ஆசிரியைகள் மாணவிகளிடம் கட்டாயப் படுத்தியுள்ளனர்.

ஆசிரியை ஒருவர் துணியால் தைக்கப்பட்ட தொப்பி வாங்கும்படி மாணவிகளை ஆசிரியைகள் கட்டாயப்ப் டுத்துவதையிட்டு பெற்றோர்கள் விசனம் அடை3ந்துள்ளனர் புத்தகம், கொப்பி என்பன கட்டாயம் தேவைதான் ஆனால் தொப்பி மாணவிகளுக்கு ஏன் தேவை என்பது பற்றி தமக்கு விளங்கவில்லையெனவும் வகுப்பறைகளில் மாணவிகள் தொப்பி அணிந்து இருப்பதற்கு இக்கல்லூரி அதிபர் அனுமதியளிப்பாரா எனவும் பெற்றோர்கள் புறுபுறுத்தனர்.

வறுமைக்கோட்டில் வாழும் ஏழைச் சிறுமிகள் சிலர் இதையிட்டு கருத்துக் கூறுகையில் அப்பியாசக் கொப்பிகள் கூட வாங்குவதற்கு பணம் இல்லாமல் கஷ்டப் படும் நாம் தொப்பியை 125 ரூபா கொடுத்து எப்படி வாங்கமுடியும் எனக் கேட்டனர்.

இதே வேளை மட்டுநகரில் உள்ள இன்னுமொரு கல்லூரியில் மாணவிகளின் உடற்பயிற்சிக் 'கண்காட்சிக்காக மாணவிகளிடம் இருந்து தலா நூறு ரூபா உடைகளுக்காக பெறப்பட்டது ஆனால் மேற்சட்டை மட்டும் தைத்துக் கொடுக்கப்பட்டதுடன் வெள்ளைக் காற்சட்டையை பெற்றாதவர்கள் வாங்கிக் பொடுக்கும் படி கூறப்பட்டதாம் மட்டுநகர் தொடக்கம் காத்தான் குடிவரையும் வெள்ளை காற்சட்டை கடைகளில் இல்லாமையினால் சம்பந்தப்பட்ட கல்லூரி வகுப்பாசிரியரிடம் சென்று அந்தப் பெற்றோர் முறையிட்டாராம் கடையில் இல்லாவிட்டால் தைத்துக் கொடுங்கள் என் ஆசிரியை கூறினாராம் விரக்தியுற்ற பெற்றோர் நீங்கள் உடுப்புக்கு என்றுதானே நூறு ரூபா அறவிட்டீர்கள் காற்சட்டையும் சேர்த்து தைத்திருக்கலாம்தாமே எனக் கூறியபோது ஆசிரியை மௌனமாகிவிடார்.

மட்டுநகர் புற பாடசாலைகளில் இவ்வாறு மாணவர்கள் பணம் கட்டிச் சென்று கல்வி பயிலும் நிலையுள்ளது என பல பெற்றோர்கள் கூறுகின்றனர்.

## சந்திரிகா நாளை ஜெர்மன் பயணம்

(கொழுமபு)

ஜனாதிபதி சந்திரிகா நாளை திங்கட்கிழமை நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு ஜெர்மன் செலகிறார் என்றும், ஜெர்மன் அதிபரையும் அமைச்சர்களையும் சந்தித்து கடன், பொருளாதார ஒத்துழைப்பு உதவிகள் கேட்பார் என்றும் செப்திகள் தெரிவிக்கின்றன.

## பாகிஸ்தானில் கதிர்காமர்

(இஸ்லாபாத்)

வெளிவிவகார அமைச்ச கதிர்காமர் வெள்ளிக்கிழமை இஸ்லாமாபாத்துக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு பாக்கிஸ்தான் அதிபர் முஷாரபயை சந்தித்து, ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியாளர்கள் புத்தர் சிலையை உடைக் கும் முயற்சி குறித்து இலங்கை அரசின் கவலையை தெரிவித்தார் என செய்திகள் தெரிவிக்கின்றன. பிரதமர போவதறகு முன கதிரகாமர அங்கு போயிருககிறார.

## கேணலும் 4 சிப்பாய்களும் கைது!

(நமது நிருபர)

வெளிநாடுகளில் இருந்து யுத்தத்துக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்ததில் பல கோடி ரூபா பணத்தை மோசடி செய்தது தொடர்பாக இராணுவ கோ்னல் ஒருவரையும் இன்னும் நான்கு இராணுவத்தினரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியிருப்பதாக கொழும்பில் குற்றப் புலனாய்வு பொலீசார் தெரிவித்துள்ளனர்.

## பாதுகாப்பு தொட்டில்களுக்கு அனுமதி மறுப்பு

(யாழ் நிருபர்)

யாழ் வைத்திய சாலைக்கு நிறை குறைந்த குழந்தைகளை வைத்து பராமரிப்பதற்கான் தொட்டில்களை கொழும்பில் இருந்து எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளது. இதனால் யுனிசப் நிறுவனத்தினால் வழங்க்ப்பட்ட பாதுகாப்பு தொட்டில் களை எடுத்து வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

வடக்கில் போர், பொருளாதாரத் தடை காரணமாக போசாக்கற்ற குழந்தைகள் பிறக்கின்றன இவற்றை பராமரிக்கவே பாதுகாப்பு தொட்டில் பயன்படுத்தப்படுகிறது.

இது தொடர்பாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தும் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இரண்டு வருடம் தடுத்து வைத்திருந்த நபா பிணையில செலல அனுமதி

(நமது நிருபர்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இருவருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண் பத்தாயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.என் இராமச்சந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

மண்டூரைச் சேர்ந்த நாற்பத்தொன்பது வயதுடைய சீனித்தம்பி தேவதர்ஷினி என்பவரே இவ்வாறு பிணையில் சென்றுள்ளவராவார்.

கடந்த 24.10.99 திகதியன்று கைத்துப்பாக்கி ஒன்று மற்றும் துப்பாக்கிரவைகள் வைத்திருந்ததாக கூறி வெல்லாவெளிப் பொ்லிசார் கைது செய்திருந்தனர்.

இவரை கைது செய்து வைத்திருந்த காலத்தில் சித்திரவதைக்கு உட்படுத்திய துன்புறுத்தல் செய்ததாகக் கூறி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தி ருந்தார்.

இது தொடர்பாக ஆராய்ந்த நீதியரசர்கள் இவர் கைது செய்யப்பட்டமை தடுத்து வைத்திருப்பது சட்டவிரோதமானது எனக் குறிப்பிட்டதுடன் 50,000 ரூபா நட்ட ஈடுவழங்குவதுடன் பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்மகுமாறும் தெரிவித்திருந்தனர்.

கடந்த மார்ச் 8ம் திகதி இந்த வழக்குவிசாரணை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட போது சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பே.பிரேம்நாத் உயர் நீதிமன்ற ஆவணத்தை சமர்ப்பித்து பிணை வழங்குமாறு மன்றைக் கோரினார் இதனைத் தொடர்ந்து நீதிபதி இராமச்சந்திரன் பத்தாயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

## ஹஜ் யாத்திரிகர்கள் விபத்தில் சிக்கி மூவர் பலி! 20 பேர் காயம்

(நமது நிருபர்)

இலங்கை ஹஜ் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பஸ் வண்டி விபத்தில் சிக்கி மூவர் பலியாகியுள்ளனர். இருபது பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மக்காவில் இருந்து மதினாவுக்கு சென்று கொண்டிருந்த சமயமே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

## 'தினக்கதிர்' ஓராண்டு நிறைவையொட்டி வாசகர்களுக்கான போட்டிகள்

**1. சிறுகதைப் போட்டி :-**

சமூக மேம்பாட்டை கருப்பொருளாகக் கொண்டு 1500 சொற்களுக்கு மேற்படாமல் வேண்டும்.

**2. கவிதைப் போட்டி :-**

50 வரிகளுக்கு மேற்படாது

**நிபந்தனைகள் :-**

- **தினக்கதிர் நிறுவனத்தில் கடமை புரிபவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் இப்போட்டிகளில் பங்குபற்ற முடியாது.**
- **'தினக்கதிர்' வாசக நெஞ்சங்கள் அனைவரும் வயது வித்தியாசங்கள் இன்றி இப்போட்டியில் பங்கு பற்றலாம்.**

பெறுமதியான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

*30.03.2001 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்க கூடியவாறு ஓராண்டு நிறைவு வாசகர் போட்டி

'தினக்கதிர்'
த.பெ.இல: 6
மட்டக்களப்பு

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

வெற்றியீட்டிய வாசகர்களின் விபரம் தினக்கதிரில் பிரசுரிக்கப்படும்.

வெற்றியீட்டிய சிறுகதை/ கவிதை தினக்கதிரல் பிரசுரிக்கப்படும்.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் தினக்கதிர் ஆண்டு விழாவில் வழங்கப்படும்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.